# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் **மு.குலாம் முஹம்மது**

Volume-15
Issue-10

அக்டோபர்-2022 (ரபியுல்லவ்வல்-1444)

விலை ரூ. **40 /-**




## நாங்கள்தாம் குண்டு வைத்தோம்

ஆர்.எஸ்.எஸ். ஊழியனின்

## வாக்குமூலம்

முழு விபரம்

## கோவை : நடந்தது என்ன?

## திரு. முகம்மது நபியைப் பின்பற்றுங்கள்

- தந்தை பெரியார்

ரபியுல்லவ்வல் சிறப்புக் கட்டுரை

## இந்தியாவிற்கு தேவை இஸ்லாமிய நீதிமன்றங்களே!

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)


நாங்கள்தாம் குண்டு வைத்தோம்
ஆர்.எஸ்.எஸ். ஊழியனின் வாக்குமூலம் - 4

இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு
நீதித்துறையின் அனுசரணை - 12

கோவை : நடந்தது என்ன? - 14

நூல் அரங்கம் - 21

திரு. முகம்மது நபியைப் பின்பற்றுங்கள்
- தந்தை பெரியார் - 22

கவிதை பக்கம் - 28

கான்ஸ்டன்டின் நோபிள் வெற்றி
நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு - 29

இந்தியாவில் முஸ்லிம்கள் தொடர் - 39

இந்தியாவிற்கு தேவை
இஸ்லாமிய நீதிமன்றங்களே! - 43

விலைவாசி உயர்வை இஸ்லாமிய அரசு
எதிர் கொண்ட விதம் - 45

இஸ்லாமும் ஜீவகாருண்யமும் - 46

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்
முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - தொடர் - 50

பெட்ரோல் குண்டு வீச்சுகள் - 55

2011 முதல் 2021 வரை இந்திய முஸ்லிம்கள் - 59

தலையங்கம் - 62

மருத்துவம் - 64



# வைகறை வெளிச்சம்

அக்டோபர்-2022 ரபியுல்லவ்வல்-1444

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.40/-**
**ஆண்டுச் சந்தா**
**உள் நாடு: ரூ.480/-**
**வெளி நாடு: ரூ.5000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady,
Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darultrust.in



# நாங்கள்தாம் குண்டு வைத்தோம்

## ஆர்.எஸ்.எஸ். ஊழியனின்

# வாக்குமூலம்

**முழு விபரம்**

| | | |
|---|---|---|
| நீதி மன்றத்தில் | : | கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, நந்தேத். |
| வழக்கு எண் | : | அமர்வு வழக்கு / 0100014/2007<br>மகாராஷ்டிரா மாநிலம் Vs ராகுல் மனோகர் பாண்டே மற்றும் பிறர். |
| விண்ணப்பதாரர் | : | யஷ்வந்த் சஹ்தேவ் ஷிண்டே, |
| வயது | : | 49 |
| இவரது தொழில் | : | வியாபாரம் |
| வசிக்கும் இடம் | : | 279/C15, சம்பாஜி நகர் சொசைட்டி, N.M. ஜோஷி. மார்க், மும்பை 400013. |

**உறுதி மொழியில் பின்வருமாறு கூறப்படுவது,**

*2)* யஷ்வந்த் ஷிண்டே, விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்புடன் (VHP) தொடர்புடையவர். இவர் *1990*களில் இருந்தே ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம் (RSS) மற்றும் பஜ்ரங்தள் முதலான அமைப்புகளில் தனது 18 வயதிலிருந்தே அங்கம் வகித்துள்ளார். ஷிண்டே இந்த அமைப்புகளில் மாநில மற்றும் தேசிய அளவில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

*3) 1990*களின் முற்பகுதியில் ஜம்மு காஷ்மீரில் உள்ள இந்துக்கள், பயங்கரவாதிகளால் கொடூர மாக கொல்லப்பட்டு, விரட்டியடிக்கப்படுவதாக தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களின் மூலம் அறிகின்றார் ஷிண்டே. பின்பு *1995*ல் ஜம்முவிற்கு சென்று ஆர்.எஸ்.எஸ்-இன் ஹிம்கிரி பிராண்ட் பிரச்சாரகர் இந்திரேஷ் குமாரை சந்திக்கின்றார். இந்திரேஷ் குமார் பாகிஸ்தான் எல்லையிலுள்ள ராஜவ்ரி மற்றும் ஜவஹர் நகரின் விஸ்தாரக்-ஆக ஷிண்டேவை நியமித் திருக்கிறார்.

*4)* டிசம்பர் *1995*ல் கஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் ஃபரூக் அப்துல்லாஹ் அவர்கள், ஜம்மு-காஷ்மீரின் ராஜவ்ரி பகுதிக்கு வருகை புரிந்துள்ளார். அப்போது ஃபரூக் அப்துல்லாஹ் அவர்கள் உள்ளூர் மக்கள் கூட்டத்திற்கு

மக்களை அழைத்தபோது அதில் ஷிண்டேவும் கலந்துகொள்கிறார். அந்தக் கூட்டத்தில் ஃபரூக் அப்துல்லாஹ் பேசிய சில கருத்துக்களால் கோபமடைந்த ஷிண்டே, “இது தேசவிரோதப் பேச்சு” எனக்கூறி ஃபரூக் அப்துல்லாஹ்வின் முகத்தில் தாக்கியுள்ளார். உடனடியாக ஷிண்டேவை கைது செய்து ராஜவ்ரி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். ஷிண்டே மீது குற்றப்பதிவு செய்யப்பட்டு, மேலும் விசாரணைக்காக ஜம்முவின் “பயங்கரவாதங்கள் பற்றின விசாரணைப் பிரிவிடம்” ஒப்படைக்கப்பட்டுள்ளார். 12 நாட்களுக்குப் பிறகே அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். ஆனால் மீண்டும் பொதுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நான்கு மாதங்களுக்குப் பிறகு அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு, 1998ல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.


5) ஷிண்டே 1995ல் ஆர்.எஸ்.எஸ்-உடைய முதற்கட்ட பயிற்சியை நிறைவு செய்தார். பிறகு 1996-1997 காலகட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பினுடைய இரண்டாம் கட்டத்தை நிறைவு செய்தார். அதன் பிறகே ஜம்முவின் உதம்பூர் மாவட்டத்தில் உள்ள ரியாஸி தாஸில் எனும் பகுதியின் பிரச்சாரகராக நியமிக்கப்பட்டார்.

6) 1999இல் மும்பைக்கு திரும்பிய இவர், பஜ்ரங்தள்-உடைய தலைவராக நியமிக்கப்படுகிறார். பஜ்ரங்தள்-ல் பணிபுரிந்து கொண்டு இருக்கும்போதே, மிலிந்த் பரண்டே என்ற ஒருவரை அறிந்து கொள்கிறார். இவர்தான் மகாராஷ்டிரா விஸ்வ ஹிந்து பரிஷத்தினுடைய (VHP) தலைவர்.

7. அமைப்பில் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகள் காரணமாக, ஷிண்டே பஜ்ரங்தள் -இல் இருந்து விலகி, “கர்ஜனா” என்ற மாணவர் அமைப்பில் பணியாற்ற முடிவு செய்கிறார். இந்த மாணவர் அமைப்பானது பாரதிய வித்தியார்த்தி பரிஷத் (ABVP)இன் கிளை அமைப்பு. மேலும் இந்த அமைப்பை கட்டமைக்க இவர் மகாராஷ்டிராவின் பல்வேறு மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் செய்தார். ஆனால் நிதி நெருக்கடிகள் காரணமாக அவரது நடவடிக்கைகள் தடைபட்டுள்ளது. மேலும் அமைப்பையும் எதிர்பார்த்தபடி அவரால் வளர்க்க இயலவில்லை.

8) 1999இல் ஷிண்டே மகாராஷ்டிராவில் இருந்தபோது, இந்திரேஷ் குமார், மூர்க்க குணம் கொண்ட சில இளைஞர்களை பிடித்து ஜம்முவிற்கு அழைத்துச் செல்லுமாறும் அங்கு அவர்களுக்கு நவீன ஆயுதங்களை பயன்படுத்த பயிற்சி அளிக்கப்படும் என்றும் கூறியுள்ளார். சிறுவர்களை தேர்வு செய்வதற்காக தானேயில் (மகாராஷ்டிரா) மாநில அளவிலான VHP கூட்டம் நடந்தது. அந்த சந்திப்பில் ஷிண்டேவுக்கு நந்தேத்தை சேர்ந்த ஹிமான்ஷூ பான்சே என்கிற ஒருவரின் அறிமுகம் கிடைத்தது. இந்த ஹிமான்ஷூ பான்சே என்பவர் அச்சமயம் கோவாவினுடைய முழுநேர VHP ஊழியராக இருந்தவர். இந்த ஹிமான்ஷூவும் அவரது ஏழு நண்பர்களும் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டார்கள். இவர்களை ஷிண்டே ஜம்முவிற்கு அழைத்துச் சென்றார். அங்கு அவர்களுக்கு நவீன ஆயுத பயிற்சியானது இந்திய ராணுவ வீரர்களால் அளிக்கப்பட்டது.

9) 2000-ம் ஆண்டில், திரிபுராவின் அகர்தலா பகுதியிலுள்ள பாப்டிஸ்ட் தேவாலயத்தின் அருகிலிருந்து நான்கு ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரக்-கள் கடத்தப்பட்டனர். அவர்களைக் கண்டுபிடிக்கும்



**அன்று சுவாமி அசீமானந்தா இதைப் போன்றதொரு வாக்குமூலத்தை ஸீனாகீதா ரெகுநாத் என்ற பத்திரிகையாளருக்கு கொடுத்தார். "நாங்கள் வைத்த குண்டுகளுக்கு மேலிடத்து அனுமதிகள் இருக்கவே செய்தன. மோகன்பகத் வரைக்கும் இதற்கு அனுமதி தந்தார்கள்.**

**- அசீமானந்தா** - Caravan / Radians


பொறுப்பை ஆர்.எஸ்.எஸ்-னுடைய கேந்திரிய பிரச்சார பிரமுக் (மத்திய பிரச்சார தலைவர்) ஸ்ரீகாந்த் ஜோஷி ஷிண்டேவிடம் அளித்துள்ளார். இந்த நடவடிக்கையின்போது ஷிண்டே அகர்தலா மற்றும் மேற்கு வங்கத்தின் சில மாவட்டங்களுக்கு பயணம் செய்தார். இந்த பயணத்தின் போது கொல்கத்தாவில் உள்ள சங்க அலுவலகத்தில் ஸ்ரீகாந்த் ஜோஷி அவரை ஆர்.எஸ்.எஸ்-உடைய "சஹ்காரியவா" (தற்போதைய ஆர்எஸ்எஸ் தலைவர்) மோகன் பகவத்-க்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

10) நான்கு பிரச்சாரக் -களை கடத்தியவர்கள் அவர்களை விடுவிக்க இரண்டு கோடி ரூபாய் மீட்புத் தொகை கேட்டனர். ஆனால் ஆர்.எஸ்.எஸ் அந்தத் தொகையைத் தர மறுத்து விட்டது. அதன் பிறகு ஷிண்டேவின் தலைமையில் கடத்தப்பட்டவர்களை கண்டுபிடிக்கும் தேடுதல் குழுவானது பிரச்சாரகர்கள் கடத்தல் காரர்களால் கொல்லப்பட்டனர் என்பதை அறிந்தது. இந்த உண்மையை மத்திய அரசும் உறுதி செய்தது.

11) சிறிது காலம் கழிந்தபின், ஒருநாள் ஸ்ரீகாந்த் ஜோஷி அப்போதைய உள்துறை அமைச்சர் லால் கிருஷ்ண அத்வானியிடம், பிரச்சாரகர்களை கடத்திச் சென்ற குழுவின் இரண்டு தலைவர்கள் டெல்லி விமான நிலையத்தில் இறங்கிக் கொண்டிருப்பதாக தெரிவித்து, அவர்களை கைது செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் ஊர் பூர்வாஞ்சலில் உள்ள கிறிஸ்தவ வாக்காளர்கள் அதிருப்தி அடைவார்கள் என்று பயந்த அத்வானி, அவர்களைக் கைது செய்யவில்லை. பிஜேபி தலைவர்களின் இந்த சுயநல தன்மையால் மிகவும் வேதனையடைந்தார் ஷிண்டே. மேலும் அவர்களிடமிருந்து தன்னை தூரமாக்கிக் கொள்ளத் துவங்கினார். ஸ்ரீகாந்த் ஜோஷியுடன் மட்டுமே தொடர்பைப் பேணி வந்தார் அவர்.

12) ஷிண்டே பிஜேபியில் இருந்து விலகி இருந்தாலும் ஜூலை 2003ல் தெற்கு மும்பையில் உள்ள தேக்வாடி பகுதியின் கோல்டியூலில் (சுற்றுக் கோயில்) ஒரு முக்கியமான கூட்டம் நடப்பதாகவும், அவர் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அவருக்கு ஒரு செய்தி வந்தது. அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில், ஷிண்டேவும் கூட்டத்திற்குச் சென்றார். அங்கு இரண்டு நபர்கள் மட்டுமே இருந்தனர். அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.-னுடைய உறுப்பினர்கள் மற்றும் மகாராஷ்டிரா மாகாணத்தின் VHP தலைவர் மிலிந்த் பரண்டவின் நெருங்கிய கூட்டாளிகள்.

13) இந்த இரண்டு நபர்களும் ஷிண்டேவிடம் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பயிற்சி முகாம் விரைவில் ஏற்பாடு செய்யப் போவதாகவும், அதன் பிறகு நாடு முழுவதும் குண்டுவெடிப்புகளை நிகழ்த்தப் போவதாகவும் கூறினர். இதற்கான



பொறுப்பை ஷிண்டே ஏற்றுக்கொள்ள வேண்டு மெனமுன்மொழிந்தனர். இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த ஷிண்டே, முகத்தில் அதனைக் காட்டிக் கொள்ளாமல், அவர்களிடம் "2004 மக்களவைத் தேர்தலுக்கு ஆயத்தமா?" என்று சூசகமாக கேட்டார். ஆனால் அவர்கள் அதற்கு பதில் சொல்லவில்லை.

14) ஷிண்டே திட்டத்தை அங்கீகரிக்கவில்லை என்றாலும் அவர் அதனை வெளிப்படையாக வெளிப்படுத்தவில்லை. சதித்திட்டத்தில் ஈடுபட்ட நபர்களை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தானும் அந்த சதியில் ஒரு பகுதி யாக நடிக்க முடிவு செய்து, புனேவில் உள்ள சிங்காட் அருகே நடந்த வெடிகுண்டு பயிற்சி முகாமில் கலந்து கொண்டார்.

சிங்காட் கோட்டையின் அடிவாரத்தில் உள்ள ஓய்வு விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாள் முகாம் அது. மகாராஷ்டிரா மாநிலத்தின் அவுரங்காபாத், ஜல்கான், நந்தேத் போன்ற மாவட்டங்களிலிருந்து சுமார் 20 இளைஞர்கள் முகாமிற்கு வந்திருந்தனர். நந்தேத்-ஐ சேர்ந்த ஹிமான்ஷூ பான்சேவும் இதில் கலந்து கொண டார். இவர் முன்னரே ஷிண்டேவுக்கு முகாம் குறித்து தெரிவித்திருந்தார். ஷிண்டே அவரை எச்சரித்து தடுக்க முயன்றார், ஆனால் அவரோ அதனை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இப்படியிருக்க முகாமில் ஷிண்டேவைக் கண்ட பான்சே அதிர்ச்சியடைந்ததோடு, பதற்றமாகவும் காட்சியளித்தார். இந்த முகாமினுடைய முக்கிய மூளையாகவும், அமைப்பாளராகவும் மிலிந்த் பரண்டே இருந்தார்.

15) மிதுன் சக்கரவர்த்தி என்று தன்னை அழைத்துக் கொண்ட ஒருவரால் பயிற்சியானது அளிக்கப்பட்டது. (பின்னர்தான் இவரது உண்மையான பெயர் ரவி தேவ் என்றும் இவர் பஜ்ரங்தள்-இன் செயல்பாட்டாளர் எனவும் ஷிண்டேவுக்கு தெரியவந்தது) ராகேஷ் தவாடே என்ற ஒருவர், இவரை பயிற்சி நடைபெறும் இடத்திற்கு அழைத்து வருவதும், செல்வதுமாக இருந்தார். இந்த தவாடேதான் பின்னர் மாலேகான் 2008 குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டவர்.

16) மிதுன் சக்கரவர்த்தி என்று கூறப்பட்ட இந்த நபர் காலை 10 மணிக்கு முகாமிற்கு வந்து,





இரண்டு மணி நேரம் பயிற்சிகளை வெவ்வேறு குழுக்களாக நடத்துவார். பயிற்சி பெறுபவர் களுக்கு வெடிகுண்டுகளை தயாரிப்பதற்கான 3-4 வகையான பொடிகள், குழாய் துண்டுகள், கம்பிகள், பல்புகள், கடிகாரங்கள் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன. ஒருமுறை முகாம் நடந்துகொண்டிருக்கும்போது பெரும் அசம்பா விதம் ஒன்று தவிர்க்கப்பட்டது. இதற்கு காரணம் மிதுன் சக்கரவர்த்தியின் தவறே. பாதி எரிந்த தீக்குச்சி 1 வெடி பொருட்களுக்கு அருகில் விழுந்தது. அவரே, "கண்ட் ஹோடே ஹோடே பாக் கயா" என்று கத்தினார்.

17) முகாம் ஏற்பாட்டாளர்கள் பயிற்சி முடிந்த பிறகு பயிற்சியாளர்களை ஒரு வாகனத்தில் ஏற்றிக்கொண்டு ஒதுக்குப்புறமான காட்டுப் பகுதிக்கு, வெடிகுண்டுகளை பரிசோதிக்கவும், குண்டுவெடிப்பு சோதனைக்கான ஒத்திகையை மேற்கொள்ளவும் அழைத்து சென்றுவிடுவார்கள். பயிற்சியாளர்கள் ஒரு குழியைத் தோண்டி, வெடிகுண்டை அந்தக் குழிக்குள் வைத்து, டைமர் வைத்து, அதை மண் மற்றும் பெரிய பாறைகளால் மூடி வெடிகுண்டை வெடிக்கச் செய்வார்கள். அவர்களின் சோதனை வெற்றி அடைந்தது. ஒரு பெரிய வெடி விபத்து ஏற்பட்டு பாறைகள் நீண்ட தூரத்திற்கு தூக்கி எறியப்பட்டன.

18) மிதுன் சக்ரவர்த்தியை பயிற்சி தளத்திற்கு அழைத்து வந்த ராகேஷ் தவாடேதான் பயிற்சி யாளர்களின் தங்கும் வசதி மற்றும் பிற ஏற்பாடு களை பயிற்சி மையத்தில் கவனித்து வந்தார். இவர் பயிற்சியின் கடைசி நாளுக்கு முந்தைய இரவில் பயிற்சி பெற்றவர்கள் அனைவரிடமும்

பேனா மற்றும் பேப்பரைக் கொடுத்து, உங்களால் வெடிகுண்டை வெடிக்க வைக்க முடியுமா என்று எழுதச் சொன்னார்? அப்படியானால் எங்கே? எனவும் வினவினார். அதற்கு ஷிண்டே கடுமையான ஆட்சேபனையை தெரிவித்த தோடு இது எழுத்துப்பூர்வமாக கொடுக்க வேண்டிய விஷயம் இல்லை என்றும் கூறினார். எழுத்துபூர்வமாக எதையும் கொடுக்க முடியாது எனவும் மறுத்துவிட்டார். மற்றவர்களும் மறுத்து விட்டனர்.

19) ஷிண்டே அந்த முகாமிற்கு பிறகு, பலமுறை நந்தேத்திற்குச் சென்று, ஹிமான்ஷூ பான்சேவை குண்டுவெடிப்பில் ஈடுபட வேண்டாம் என்று சமாதானப்படுத்த முயன்றார். ஏனெனில் இது பா.ஜ.க.வின் தேர்தல் வெற்றியை உறுதி செய்யும் சங்கபரிவாரத்தின் சதி. இவர் நந்தேத்திற்கு சென்றிருந்தபோது, ஹிமான்ஷூ பான்சேயின் நண்பர் கோண்டவர் என்பவரையும் அவர் அறிந்து கொண்டார். அவரும் நந்தேத் பகுதி யைச் சார்ந்தவர்தான். ஷிண்டே ஹிமான் ஷூவை பலமுறை எச்சரித்தார். ஷிண்டேவின் திருப்திக்காக அவர் "சரி" என்று கூறுவார். ஆனால் அவர் தலைவர்களின் அழுத்தத்தின் பேரில் தொடர் குண்டு வெடிப்புகளை ஏற்படுத்திய தாகவும் தெரிகிறது. பயிற்சிக்குப் பிறகு ஹிமான்ஷூ மகாராஷ்டிராவின் மராத்வாடா பகுதியில் 3 குண்டுவெடிப்புகள் ஏற்படுத்தினார். பிறகு அவுரங்காபாத்தில் உள்ள பிரதான மசூதி யில் ஒரு பெரிய குண்டுவெடிப்பை நிகழ்த்த அவர் திட்டமிட்டிருந்தார். அந்த குண்டு வெடிப்பிற்கான வெடிகுண்டு தயாரிக்கும் போது அவர் 2006ல் நதேத்-ல் தனது உயிரை இழந்தார். அவரது நண்பர் கோண்டவரும் அந்த விபத்தில் உயிரிழந்தார்.

20) 2007ல் ஒரு முறை, அதாவது 2003 சிங்காட் பயிற்சி முகாம் நடந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ஷிண்டே மிதுன் சக்கரவர்த்தியை மும்பை யின் பரலில் உள்ள மும்பையின் தலைமை ஆர்.எஸ். எஸ் அலுவலகமான "ய்ஸ்வந்த் பவனில்" பார்த்தார். இந்த மிதுன் சக்கரவர்த்தியின் உண்மையான பெயர் ரவி தேவ் என்று யஷ்வந்த் பவனில் இருந்த ஒருவர் விண்ணப்பதாரரிடம் தெரிவித்தார். அதுவரை ஷிண்டேவுக்கு அவரது உண்மையான பெயர் தெரியாது. அவரை "ரவி ஜி" என்று அழைத்தபோது ஷிண்டேவை அவர் பார்த்தார். ஆனால் அவரால் ஷிண்டேவை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. உடனே உனக்கு என்னை எப்படி தெரியும் என்று ஷிண்டேவைப் பார்த்து கேட்க, ஷிண்டேவோ வெடிகுண்டு தயாரிப்பு பயிற்சி அளிப்பதற்கு சிங்காட் வந்திருந்ததை கூறியபோது, ரவி தேவ்-ன் முகபாவங்கள் மாறியது. பயந்துபோய் அவசரமாக அங்கிருந்து சென்றுவிட்டார். ஷிண்டே அவர் பின்னால் சென்றார். ரவி தேவ், மிலிந்த் பரண டேவை சந்தித்து விண்ணப்பதாரரை பார்த்துக் கொண்டே பரண்டேவின் காதுகளில் ஏதோ கிசுகிசுத்தார். இதனைக்கேட்ட பரண்டே, சதித் திட்டத்தில் தனக்கும் தொடர்பு இருப்பது பற்றி ஷிண்டேவுக்கு தெரிய வந்திருக்கலாம் என பயந்தார். உண்மையில் நாடு தழுவிய குண்டு வெடிப்புத் திட்டத்தின் தலைவன் மிலிந்த் பரண்டே தான் என்று, ஹிமான்ஷூ பான்சே ஷிண்டேவுக்கு தெரிவித்திருந்ததால், இந்த சதித் திட்டத்தில் அவருக்கு இருந்த தொடர்பு முன்னரே ஷிண்டேவுக்குத் தெரியும்.

21) ஆர்.எஸ்.எஸ், வி.ஹெச்.பி மற்றும் பிஜேபி




**நாங்கள் தலைமறைவாக இருந்துகொண்டே குண்டுகளை வெடிக்கச் செய்தோம். எங்களுக்கு ஊடகங்களும், காவல்துறையும் உதவி செய்தன. அவை முஸ்லிம்கள் மீதே பழியைப் போட்டுக் கொண்டே இருந்தன. அது எங்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது.**

**- ஷிண்டே.**

தலைவர்கள் இந்த திட்டத்தில் வேண்டுமென்றே ஷிண்டேவை சேர்த்துள்ளனர். ஏனெனில் அவர் விரும்பினால், நாடு முழுவதும் குண்டு வெடிப்பு களை ஏற்படுத்தலாம். அவர் மகாராஷ்டிராவில் 'கர்ஜானா" அசாமில் " ஹிந்து யுவ சக்ர பரிஷத் (HYCP), ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்திரபிரதேசத்தின் "ஹிந்து ரக்ஷா சமிதி" மற்றும் கர்நாடகாவில் உள்ள " ஸ்ரீ ராம் சேனா" ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தார்.

மேற்கு வங்கம் மற்றும் பிற மாநிலங்களில் வி.ஹெச்.பி-யின் மூத்த தலைவர் தபன் கோஷ் உடனும் தொடர்பு வைத்திருந்தார். அவர் நினைத் திருந்தால் 500 முதல் 600 குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியிருக்க முடியும். ஆனால் அவர் தலை வர்களின் உள்நோக்கங்களை அறிந்திருந்ததால், அவர்களின் திட்டத்தைத் தவிர்த்தார். அதை வெற்றிபெற அனுமதிக்கவில்லை. மேலும் தலைவர்களின் தவறான நோக்கத்தைப் பற்றி தபன் கோஷ்க்கு புரிய வைத்தார். தபன் கோஷ் அவருடன் உடன்பட்டு, இந்த மோசமான செயல்களில் இருந்து விலகிக்கொண்டார். அதேபோல் தபன் கோஷ் உடன் நெருக்கமாக இருந்த கர்நாடகாவின் ஸ்ரீ ராம் சேனாவை சேர்ந்த பிரமோத் முத்தலிக் என்பவரும் எதுவும் செய்யவில்லை. இவ்வாறு ஷிண்டே ஆர்.எஸ். எஸ் மற்றும் பி.ஜே.பி.யின் அழிவுத் திட்டத்தை நாசமாக்கியதோடு, பல அப்பாவி இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உயிரைக் காப்பாற்றினார்.

*22)* நாடு முழுவதும் குண்டுவெடிப்புகளை நிகழ்த்தும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் வி.ஹெச்.பி யின் திட்டம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறாததால் பிஜேபிக்கு அரசியல்ரீதியாக அது பலனளிக்கவில்லை. இதன் விளைவாக 2004 தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றது. முக்கிய சதிகாரர்களாக இருந்த மிலிந்த் பரண்டே போன்றவர்கள் பயந்து தலைமறை வானார்கள். ஆனால் ரகசியமாக சதித்திட்டத் தைத் தொடர்ந்தனர். தலைமறைவாக இருந்து கொண்டே நாடு முழுவதும் குண்டுவெடிப்புகளை ஒருதலைபட்சமாக காவல் துறையின் உதவியுடன் நடத்தி, ஒருதலைப்பட்சமான ஊடகங்களின் உதவியுடன் பழியை முஸ்லிம்கள் மீது போட்டனர்.

*23) 2014*ல் பாஜக மத்தியில் ஆட்சியை கைப்பற்றி நரேந்திர மோடி பிரதமரானார். இதன் விளைவாக தலைமறைவாக இருந்த விஷ்வ ஹிந்து பரிஷத் (VHP) மற்றும் ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கம் (RSS) திடீரென சக்தி கொண்டு செயல் பட்டன.

மேற்கு வங்கம், ஜம்மு காஷ்மீர், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பயங்கரவாத அரசியல் சாசனத்திற்கு பின்னால் அதே நபர்கள் இருந்ததை ஷிண்டே கண்டுகொண்டார். மேலும் இவர்கள் நாடு முழுவதும் அவநம்பிக்கையையும், அச்சம் நிறைந்த சூழலையும் உருவாக்க முயற்சிகள் செய்தனர். பாஜக தலைவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மிலிந்த் பரண்டே மீண்டும் சுறுசுறுப்பாக செயல்பட்டு, அழிவுகர மான நடவடிக்கைகளுக்கு சுப்பாரி (ஒப்பந்தம்) எடுத்தார். விண்ணப்பதாரர் மிலிந்த் பரண்டே வின் அழிவுத் திட்டங்களைப் பற்றி மூத்த விஷ்வ ஹிந்து பரிஷத் தலைவர், வியாங்கேஷ் ஆப்தே வுக்கும், ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கத்தின் (RSS) மத்திய நிலை செயற்குழு உறுப்பினர் ஸ்ரீகாந்த் ஜோஷிக்கும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர்கள் மிலிந்த் பரண்டே மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது மிலிந்த் பரண்டே விஹெச்பி-யில் மிக உயர்ந்த பதவியில் உள்ளார். அவர் விஹெச்பியின் "கேந் திரிய சங்கதக் "(தேசிய அமைப்பாளர்) மற்றும் டெல்லியின் RK.புரத்தில் உள்ள வி.ஹெச்.பி-யின் முதன்மை அலுவலகத்தில் இருக்கிறார்.

*24)* ஷிண்டே, ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் சங்கம் (RSS) மற்றும் விஸ்வ ஹிந்து பரிஷத் (VHP) தொண்டர்கள் ஏன் பாஜகவின் நலனுக்காக பயன்

படுத்தப் படுகிறார்கள் என்பது குறித்த தனது கவலையை மீண்டும் எழுப்பினார். மும்பையில் உள்ள ஃபிரோசா மேன்ஷனில் அமைந்துள்ள விஷ்வ ஹிந்து பரிஷத்தின் தலைமை அலுவலகத்தில், ஆப்தேவை பலமுறை சந்தித்து இந்த விஷயத்தில் அவர் ஏன் எதுவும் செய்யவில்லை என்று கேட்டார். ஷிண்டேவின் திருப்திக்காக அவர் அதைப்பற்றி பார்ப்பதாகச் சொன்னார்.

ஆனால் எதுவும் செய்யவில்லை. ஷிண்டே ஸ்ரீகாந்த் ஜோஷியைச் சந்தித்து அதே கேள்வியைக் கேட்டபோது, ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக சங்கத்தின் அப்போதைய சஹ்கார்யவஹக் மோகன் பகவத் அவர்களுடன் பேசுவதாகத் தெரிவித்தார். ஆனால் அவர் எந்த வகையிலும் உதவமுடியவில்லை என்ற இயலாமையை வெளிப்படுத்தினார். இந்த தலைவர்களின் சாக்குகளைக் கேட்ட ஷிண்டே, ஆர்.எஸ்.எஸ் மற்றும் விஹெச்பியின் மூத்த தலைவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளை மறைமுகமாக ஆதரித்துள்ளனர் என்பதும், 2014ல் பாஜக ஆட்சிக்கு வந்ததும் அவர்கள் மேலும் ஊக்குவிக்கப்பட்டு, இத்தகைய நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர் என்றும் முடிவுக்கு வந்தார்.

25) ஷிண்டே, இந்துமதம் மிகவும் உன்னதமான மதம் என்று உறுதியாக நம்புகிறார். பொதுவாக இந்துக்கள் பயங்கரவாத போக்குடையவர்கள் அல்ல, ஆனால் ஆர்எஸ்எஸ், விஹெச்பி, பஜ்ரங்தள் போன்ற சில இந்து அமைப்புகளும், தேசிய அரசியல் கட்சிகளில் ஒன்றான பாஜகவும் தங்களின் அரசியல் ஆதாயத்திற்காக பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகின்றன.

26) விண்ணப்பதாரர் (ஷிண்டே) மேற்கூறியவை அனைத்தும் அவரது அறிவு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் உண்மையே.

1) மனுவில் அவர் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் அரசின் பதிவில் இருந்தோ அல்லது தொடர்புடைய காலகட்டத்தின் செய்தி அறிக்கைகளிலிருந்தும் சரிபார்க்கப்படலாம்.

2) மனுவில் அவர் குறிப்பிட்டுள்ள தலைவர்கள் மற்றும் பிற நபர்களை எதிர் கொள்ள அவர் தயாராக இருக்கிறார்.

3) இதுதொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவும் அவர் தயாராக இருக்கிறார்.

27) 2003 முதல் நடந்த பல குண்டு வெடிப்புகளின் நாடு தழுவிய சதி குறித்து விண்ணப்பதாரரின் மேற்கூறிய அபிப்பிராயங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன. இந்த மாண்புமிகு நீதிமன்றத்தில் விசாரணை நடந்துவரும், 2006 ஆம் ஆண்டு நந்தேத் குண்டுவெடிப்பும் இந்த சதியின் விளைவே ஆகும். 2003 ஆம் ஆண்டு புனே அருகே சின்ஹாட் என்ற இடத்தில் பயிற்சி பெற்ற ஹிமான்ஷூ பான்சே மற்றும் அவரது கூட்டாளிகள், இந்த சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக, அவுரங்காபாத்தில் பெரும் குண்டுவெடிப்பை ஏற்படுத்த வெடிகுண்டுகளை தயாரித்து வந்தனர்.

28) விண்ணப்பதாரர் இந்த வழக்கில் தொடர்புடைய குற்றம் சாட்டப்பட்டவர்களுடன் புனேவில் உள்ள சிங்காட்டில் நடந்த பயங்கரவாத பயிற்சி முகாமில் கலந்து கொண்டதால், இவர் இந்த வழக்கின் முக்கியமான சாட்சி. மேலும் 2003 ஆம் ஆண்டு மும்பை கெத்வாடியில் உள்ள கோல் டியூலில் தான் (சுற்றுக் கோயில்) முதன்முதலில் சதித்திட்டம் தீட்டப்பட்டது. எனவே இந்த வழக்கில் மனுதாரரை சாட்சியாக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு விஷயத்தை விசாரிக்கவும், குறுக்கு விசாரணை செய்யவும் அவர் தயாராக இருக்கிறார்.

29) மேலும் விண்ணப்பதாரருக்குத் தெரிந்த வரை, இந்த வழக்கின் முக்கிய சதிகாரர்கள்

1. மிலிந்த் பரண்டே

2. ராகேஷ் தவாடே புனே அருகே உள்ள சிங்காட்டில் பயிற்சி முகாமின் அமைப்பாளராக இருந்தவர்.

3. ரவிதேவ் (மிதுன்சக்கரவர்த்தி) வெடிகுண்டு தயாரிப்பில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு பயிற்சி அளித்தவர்.

இவர்கள் யாரும் இந்த வழக்கில் கைது செய்யப்படவோ, குற்றம்சாட்டப்பட்டவோயில்லை. விண்ணப்பதாரருக்கு தெரிந்த வரை அவர்கள் இருக்குமிடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

1. மிலிந்த் பரண்டே தற்போது விஹெச்பியின்

கேந்திரியசங்கதக்(தேசிய அமைப்பாளர்) ஆவார். இவர் விஹெச்பியின் டெல்லி RK.புரத்தின் பிரதான அலுவலகத்தில் இருக்கிறார்.

*2.* ராக்கேஷ் தவாடே புனேவைச் சேர்ந் தவர், *2008* மாலேகான் குண்டுவெடிப்பு மற்றும் வேறுசில குண்டுவெடிப்பு வழக்குகளில் கைது செய்யப்பட்டவர். தற்போது அவர் ஜாமீனில் இருக்கிறார்.

*3.* ரவி தேவ்(மிதுன் சக்கரவர்த்தி) ஹரித்து வாரில் வசிக்கிறார், அவருடைய மொபைல் எண் *9411786614.*

*2006*ஆம் ஆண்டு நந்தேத் குண்டுவெடிப்பு வழக்கில் மேற்கண்ட மூன்று பேர் முக்கிய சதி காரர்கள் என்று விண்ணப்பதாரர் கூறுகிறார். இந்த விஷயத்தை நன்கு ஆழமாக விசாரிக்கவில்லை, எனவே மிலிந்த் பரண்டே, ராக்கேஷ் தவாடே மற்றும் ரவி தேவ் (மிதுன் சக்கரவர்த்தி) ஆகியோர் குற்றம்சாட்டப்படவில்லை. வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி விண்ணப்பதாரர் நன்கு அறிந்தவர்.

எனவே விண்ணப்பதாரரை வழக்கில் சாட்சி யாக எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டு விசார ணைக்கு உட்படுத்த வேண்டும் என்று மனுதாரர் கோருகிறார்.

எனவே வேண்டுகோள்

*1.* விண்ணப்பதாரர் தயவு செய்து இந்த வழக்கில் சாட்சியாக ஆக்கப்படவேண்டும்.

*2.* முக்கிய சதிகாரர்களான மிலிந்த் பரண்டே, ராக்கேஷ் தவாடே மற்றும் ரவி தேவ்(மிதுன் சக்கரவர்த்தி) இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படலாம்.

**சரிபார்ப்பு**

*1.* யஷ்வந்த் சஹ்தேவ் ஷிண்டே, வயது : *49* வருடங்கள், தொழில் : வணிகம், வசிக்குமிடம் : *279/சி15,* சம்பாஜி நகர் சொசைட்டி, N.M. ஜோஷி மார்க், மும்பை-*400013.* மேலே குறிப்பிட்ட ஒன்று முதல் *29* வரையுள்ள பத்திகளின் உள்ள டக்கங்கள், எங்களுடைய தனிப்பட்ட அறிவு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் சரிபார்க் கப்பட்டதே. இதில் எந்த உண்மையையும் குறைத்துக் குறிப்பிடவில்லை. நந்தேத்தில் ஆணித் தரமாக உறுதி செய்யப்பட்டது.

ஆகஸ்ட் *29,2022.*
S.R. டெல்மேட் (வழக்கறிஞர்)

விண்ணப்பதாரர்
**யஷ்வந்த் சஹ்தேவ் ஷிண்டே.**



ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமைப் பயணத்தின் 2ம் நாள் நிகழ்வில் கரூர் எம்.பி. ஜோதிமணி அவர்கள் கொடிக்கால் சேக் அப்துல்லா அவர்களை வரவேற்றபோது... உடன் இனாமுல் ஹசன், அன்சார் மீரான்

**ஷிண்டேவைப் போல் எத்தனையோ பேர் வாக்குமூலங்கள் கொடுத்துவிட்டார்கள். அப்போதே அசீமானந்தா என்பவர் வாக்குமூலம் கொடுத்தார்.**

ஆனால், அத்தனையையும் புறந்தள்ளிவிட்டு, அவரைசிறையில்அடைக்கமறுத்துவிட்டார்கள். அவருக்குப்பிணை வழங்கினார்கள்.

பிணை வழங்கியபோது நீதிமன்றம் இப்படிக் கூறியது

“அவர் மீது பல குண்டுவெடிப்பு வழக்குகள் இருக்கின்றன. அத்தனையையும் முடித்துவரும் போது அவருடைய ஆயுள் முடிந்துபோகும். அதனால் அவருக்குப் பிணை வழங்குகின் றோம்.” இதனை பலமுறை ஆதாரங்களுடன் வைகறை வெளிச்சத்தில் ஆதாரங்களுடன் வெளி யிட்டிருக்கின்றோம். இப்படியொரு விசித்திர மான காரணத்தைச் சொல்லிப் பிணை வழங்கி யது நமது இந்திய நீதிமன்றம்தாம். அதுவும் இந்துத்துவ தீவிரவாதிகளுக்குத்தான். உலக நீதித்துறையின் வரலாற்றில் நமது நீதிமன்றங் களில்தான் இதுபோன்ற காரணங்களைச் சொல்லி பிணை வழங்குகின்றார்கள்.

ஆக இதுபோல் நாங்கள்தாம் குண்டு வைத்தோம் என்ன செய்வீர்கள்? என்று அரசு நிருவாகத்தையும், நீதிமன்றங்களையும் கேட்பது போல் கேட்கின்றார்கள். இந்தியாவில் நீதி பல வருடங்கள் ஆனால் எந்த குற்றமும் செய்யாத அப்பாவி முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் சிறை யிலிருக்கின்றார்கள்.

25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என சிறையி லிருந்த பின் அவர்கள் எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள் என வெளியே விடப்படுகின்றார்கள்.

“வாழ்க்கைத் தொலைந்து போனது”

“குடும்பங்கள் சீரழிந்து போயின”

“இனிதலையெடுக்கமுடியாதுஎன்றஅளவில், கதிஅற்றவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்”

**இந்தியாவுக்குப் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் என்ன செய்து கொண்டிருக்கின்றன பாதுகாப்பு அமைப்புகள்**

இந்துதத்துவ வெறி தலைக்கேறிய வழக்கறிஞர் கள் சிலர், நாங்கள் இந்து ராஷ்ட்டிராவுக்கான அரசியல் சாசன சட்டத்தை வரைந்துவிட்டோம், என மார்தட்டுகின்றனர். அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் முஸ்லிம்களுக்கும் இதர சிறுபான்மையினருக்கும் வாக்குரிமை இல்லை எனத் தம்பட்டம் அடிக்கின்றார்கள்.

இவர்களுக்குரிய அரசியல் அமைப்புச் சட்டத்தையே மாற்றுவோம் எனக் கூப்பாடு போடுவது, இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானது. இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டிற்கும் எதிரானது.

ஆனால்இதையாரும்கண்டுகொள்ளவில்லை.



# இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு நீதித்துறையின் அனுசரணை

காரணம் தங்கள் எஜமானர்களாகிய ஆர்.எஸ்.எஸ். அமைப்பிடமிருந்து ஆணை வரவில்லை போலும், இவர்களே அந்த அமைப்பின் கைத் தடிகள்தாம்.

**குண்டு வைப்பு வரலாறு**

இந்தியாவில் குண்டு வைப்பவர்கள் என நிரூபிக்கப்பட்டக் குற்றவாளிகள் ஆர்.எஸ்.எஸ்.; அதன் கிளை அமைப்புகள் அபிநவ்பாரத்; வந்தே மாதரம்; சனாதன் சாஸ்த்தா

(இவற்றின் செயல்பாடுகள் பற்றி, அவ்வப் போது விளக்கமாகவே வைகறை வெளிச்சம் இதழில் குறிப்பிட்டுள்ளோம்)


இவர்கள்தாம் குண்டுகளை வைத்தார்கள் என்பதை பல வழக்குகளில் நீதிமன்றங்களில் நீருபித்திருக்கின்றன நமது புலனாய்வு அமைப் புகள் அப்படி நிரூபிடிக்கப்பட்டவற்றை யெல்லாம் ஒன்று திரட்டி, நீதிமன்றங்களில் தந்தோம், நீதிமன்றங்கள் நீதி வழங்கிடவில்லை.

**உச்ச நீதிமன்றம்?**

நாட்டின் நலனில் பாதுகாப்பும் அக்கறை யுள்ள முஸ்லிம்கள், இந்துக்கள் அனைவரும் இணைந்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார்கள். அதில் முஸ்லிம்கள் சார்பில், குல்சார், அஹ்மத் அவர்களும் (இவர் ஜம்மியத்தே உலமாயே ஹிந்த் அமைப்பின் சட்டக் குழுமத்தின் செயலாளர்கள்)

இந்துக்களின் சார்பில் கதிர் சுவாந்த் அவர் களும், (இவர் வட்டார சிறப்புப் படையில் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றவர். ஹிவ்ராய் கட்சி என்றொரு கட்சியை நடத்திக் கொண்டி ருப்பவர்.) இணைந்து உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்கள். (கிரிமினல் 19/2012) அதில் நாட்டில் நடந்த குண்டு வெடிப்புகள் அனைத்தையும் மேலே நாம் குறிப்பிட்ட நான்கு அமைப்புகளுந்தான் நடத்தி இருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தினார். நாட்டில் குண்டு வெடிப்புகள் நின்றிட வேண்டும் என்றால் இந்த நான்கு அமைப்புகளையும் தடை செய்து விட்டால் போதும் எனக் கேட்டுக் கொண்டார்கள். முதலில் ஒத்துக்கொண்ட நீதிமன்றம் பின்னர், அந்த மனுவை எந்தக் காரணத்தையும் சொல்லாமல் நிராகரித்து விட்டது.

உச்ச நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்த விதம் இந்த இந்துத்துவ அமைப்புகள் தாராள மாகக் குண்டு வைத்திடலாம் என சொல்லாமல் சொன்னதுபோல் இருந்தது.




<u>**இதுபோன்ற நூற்றுக்கணக்கான**</u>

<u>**தகவல்களுக்கு படியுங்கள்**</u>

- **கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்.**
- **26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?**
- **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு**
- **பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**

ஆசிரியர் - **S.M. MUSHRIF**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல்,
மராட்டிய மாநிலம்.

## கோவை

# நடந்தது என்ன?

## 2016 இன்றைய தேதி வரையிலான ஓர் முன்னோட்டம்

*22.09.2016* இரவு *10:40*க்கு இந்து முன்னணி செய்தி தொடர்பாளர் சசிக்குமார் கொலை.

*23.09.2016* வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு கோவை குர்ரத்துல்ஐன் பள்ளிவாசல், கீரைக்காரவீதி பள்ளிவாசல், பட்டேல் மொஹல்லா பள்ளிவாசல் போன்ற பள்ளிவாசல் களில் பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன.

அன்று தான் முதலமைச்சர் ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அன்று கோவையில் மதியம் 2 மணிக்கு சசிக்குமார் உடலை கொண்டு செல்லும் போது கலவலரம். சிறுபான்மையினரின் பள்ளிவாயில் கள், தேவாலயங்கள் கல்வி நிலையங்கள் பொது மக்களின் கடைகள் கடுமையான தாக்குதலுக்குள் ளாயின. (பார்க்க: அக்டோபர் 2016 வைகறை வெளிச்சம்)

08.10.2016 காவல்துறை துல்லியமாக சசிக்குமாரை கொலை செய்த கொலைகாரனை (கோவை - போத்தனூர் - மேட்டூர் பகுதியை சேர்ந்த ஆனந்தகுமார் என்பவனை) நெருங்கி விட்டது. உடனே கொலைகாரன் தன் உடலில் தீ வைத்துக் கொண்டு (அவனாக வைத்தானா? அல்லது கொலை செய்யச் சொன்னவர்கள் தீ வைத்தார்களா என்பது அன்றைய காவல்துறை யினருக்கு நன்றாக தெரியும்.) தற்கொலை செய்து கொண்டான்.

சசிக்குமார் உடலை எடுத்துச் செல்லும்போது ஏற்பட்ட கலவரத்தின் போது முஸ்லீம்கள் எதிர் வினையாற்றுவார்கள் (அதாவது திருப்பித் தாக்குவார்கள்) அதை வைத்து அரசியல் செய்யலாம் என்று நினைத்த கலவரக்காரர்களின் எண்ணத்தில் மண் விழுந்தது. கலவரம் செய்தே பழக்கப்பட்டவர்களால் பொறுக்க முடிய வில்லை.



*17.01.2017* ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்ததை தொடர்ந்து தமிழகம் முழுக்க மாபெரும் போராட்டம் வெடித்தது.

கோவையிலும் வ.உ.சி. மைதானத்தில் பெரும் திரளாக மக்கள் கூடினர். ஹிப்ஹாப் தமிழா என்ற ஆதி (இசையமைப்பாளர்) ஜல்லிக்கட்டு போராட்டத்தை தேசவிரோத போராட்டமாக மாற்றியது இவரது சமூக வலைத்தளம் தான். கோவை போராட்டத்தில் (வேறு எந்த மாவட்டத்திலுமில்லை) தேசவிரோத பேச்சுக்களும் மத்திய அரசை வசைபாடியும் மோடியை அசிங்கமாக பேசிய உணர்ச்சிகரமான பேச்சுக்களை குறைகூறி சமுக வலைதளங்களில் பதிவேற்றினார். காவல் துறையினர் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினர். தமிழத்திலேயே முதலில் ஒடுக்கப்பட்டது கோவையில்தான்.

*20.01.2017* “கோவை ஜல்லிக்கட்டு போராட்டத்தில் விக்னேஷ் வாசுதேவன் என்ற இளைஞர் தேசிய கொடியை ஏந்தி இருந்ததால் இஸ்லாமியர்களால் தாக்கப்பட்டார் என தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார் ஹெச்.ராஜா. இதற்கு மாணவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். “ஜாதிமத பேதமின்றி நாங்கள் போராடி வருகிறோம். நடக்காததை நடந்ததாக சொல்லி போராட்டத்தை நிறுத்த கலவரத்தை ஏற்படுத்த முயல வேண்டாம் என மாணவர்கள் நேரடியாகவே எச்சரித்தனர். (பிப்ரவரி 2017 வைகறை வெளிச்சம்)

*15.03.2017* ஆர்.எஸ்.எஸ். தேசிய தலைவர் மோகன் பகவத் கோவை வருகை.

*16.03.2017* இரவு திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஃபாரூக் கொலை செய்யப்பட்டார்.

*20.03.2017* சையது அபுதாஹிர் என்ற இளைஞர் உக்கடம் பேருந்து நிலையம் அருகில் துணி வியாபாரம் செய்து வந்தவர். 20.3.2017 அன்று இரவு 11 மணியளவில் சிபிசிஐடியினர் கடத்தி சென்றனர். குடும்பத்தினர் கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்தார். சரியான பதிலில்லை. வழக்கறிஞர் நவ்ஃபல் மூலம் 22.03.2017 அன்று சையது அபுதாஹிர் குடும்பத்தினர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தனர்.

நீதிமன்றத்தில் வழக்கறிஞர் நவ்ஃபல், “சையது அபுதாஹிர் சிபிசிஐடியினரால் தான் கடத்தப்பட்டிருக்கக் கூடும். எனவே சிபிசிஐடி அலுவலகத்தை சோதனையிட ஆணையிடுமாறு வாதாடினார். நீதிபதியும் ஆணையிட்டார். வழக்கறிஞர் சொன்னது போலவே சையது அபுதாஹிர் சிபிசிஐடி அலுவலகத்திலிருந்து மீட்கப்பட்டார். சசிக்குமார் கொலையை சையது அபுதாஹிர் மீது சாட்டுவற்காக சிபிசிஐடியினர் கடத்தியுள்ளனர் என்பது வெட்ட வெளிச்சமானது. (ஏப்ரல் 2017 வைகறை வெளிச்சம்)

*01.09.2018* அர்ஜூன் சம்பத்தை கொலை செய்ய முயன்றதாக ஐ.எஸ்.ஐ.எஸ் பெயரில் ஐந்து பேரை கைது செய்தனர் காவல்துறையினர். தமிழ்நாட்டிலேயே ஐ.எஸ்.ஐ.எஸ் பெயரில் கைது செய்யப்படும் முதல் வழக்கு இதுதான்.


*11.06.2019* கோவையில் கரும்புக்கடை, உக்கடம், போத்தனுர் மற்றும் குனியமுத்தூர் உட்பட முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் இலங்கை குண்டு வெடிப்பில் சந்தேகிக்கப்படும் சஹ்ரான் ஆஸிமுடன் தொடர்பு கொண்டிருந்ததாக முஹம்மது அசாருதீன், ஷேக் ஹிதாயத்துல்லா, இப்ராஹிம் என்ற ஷாஹின்ஷா, அக்ரம் ஜிந்தா, அபுபக்கர் மற்றும் சதாம் உசேன் உட்பட 6 பேரை என்.ஐ.ஏ. கைது செய்தது.

*02.03.2020* சிஏஏவுக்கு ஆதரவான போராட்டம் என்ற பெயரில் இந்துத்துவ அமைப்புகள் காந்திபுரம் பஸ் ஸ்டேண்ட்டிற்கு எதிராக பந்தல் அமைத்தனர். அந்த வழியாக சென்ற எம்.டி.எஸ். (முஸ்லிம்களின்) ஆட்டோக்களை குறிவைத்து தாக்கினர்.

*03.03.2020* இரவு இந்து முண்ணணியின் மாவட்ட செயலாளர் ஆனந்த் நஞ்சுண்டாபுரத்தில் தாக்கப்பட்டார்.

*04.03.2020* இந்துத்துவ அமைப்புகள் ஆனந்த் தாக்கப்பட்டதை கண்டித்து கடையடைப்பு நடத்தினர். அப்போது வன்முறையில் இறங்கிய இந்துத்துவ அமைப்பினர் ரயில் நிலையம் எதிரில் இருந்த ஆட்டோக்களையும். ஆட்டோ ஓட்டுநர்களையும் அரசு மருத்துவமனை எதிரில் நின்றிருந்த ஆட்டோக்களையும் தாக்கினர்.

*04.03.2020* இரவு கணபதி வேதாம்பாள் நகரிலுள்ள பள்ளிவாசல் மீது பெட்ரோல் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தினர் இந்துத்துவாவினர்.



*07.03.2020* அன்று முஸ்லீம்களும் பள்ளி வாசலும் தாக்குதலுக்குண்டானதை கண்டித்து முஸ்லிம்கள் கடையடைப்பு அறிவித்தனர். உடனே அதே தினத்தன்று இந்துத்துவ அமைப்பினரும் கடையடைப்பை அறிவித்தனர். இவர்களின் கலவர புத்தியை உணர்ந்த முஸ்லிம்கள் தங்களின் அறிவிப்பை வாபஸ் பெற்றனர். இந்துத்துவவினரோ ஏமாற்றமும் ஆத்திரமுமடைந்தனர்.

*09.03.2020* அன்று மதியம் 12:30 மணியளவில் காட்டூரிலுள்ள இந்து முண்ணணி அலுவலகம் தாக்குதலுக்குள்ளானது. 3:15 மணியளவில் அதே பகுதியிலுள்ள டயர் கடை நடத்தி வரும் முகமது இக்பால் மற்றும் அவரின் நண்பர் ஷாஜஹான் இருவரையும் 7 பேர் கொண்ட இந்துத்துவ தீவிரவாத கும்பல் கூர்மையான ஆயுதங்களால் கடுமையாக தாக்கினர்.

*10.03.2020* அணைத்து முஸ்லிம் ஜமாத் கூட்டமைப்பினர் காவல் ஆணையரை சந்தித்து தொடர்ச்சியாக முஸ்லிம்கள் தாக்குதலுக்குள்ளாவதையும் முஸ்லிம்களின் ஆட்டோக்கள் தாக்கப்படுவதையும் தடுத்து அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றும் மனு அளித்தனர்.

*11.03.2020* அன்று மாலை சுந்தராபுரத்தில் சூரி என்பவர் தன்னுடைய கடையில் தாக்கப்படுகின்றார்.

*13.03.2020* மாலை கோவை தெருமுனை கூட்டத்தில் பேசிய இந்து முண்ணணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியன் ஏப்ரல் 5ம் தேதி ஒரு லட்சம் பேர் கொண்ட பேரணி உக்கடத்திலிருந்து துவங்கும். இது 1998 கலவரத்தைப் போலல்லாமல் வேறு வகையில் நடக்கும். காவல்துறையால் கட்டுப்படுத்த முடியாது என்றார்.

*15.03.2020* இரவு நஞ்சுண்டாபுரம் - போத்தனூர் சாலை சந்திப்பு ராமநாதபுர சிக்னலில் ஒரு குவாலிஸ் காரில் 6 பேர் கொண்ட கும்பல் ஆயுதங்களுடன் பிடிபட்டனர். அவர்கள் யார்? என்ன சதிச் செயலை செய்ய வந்தனர்? என்ற விவரம் போலீசாரால் வெளியிடப்படவில்லை!

*22.03.2020* ஞாயிற்றுக்கிழமை குறிச்சி காந்தி நகரில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் பயிற்சி மேற்கொண்டனர். காடேஸ்வரா சுப்ரமணியன் சொன்ன ஏப்ரல் 5ம் தேதிக்கான ஒத்திகையாக இருந்திருக்கக்கூடும்!

முஸ்லிம்களின் பலவீனமான வீரத்தையும் விவேகமில்லாதனத்தையும் அறிந்த மாபெரும் கிருபையாளனான அல்லாஹ்வின் அருளால் லாக்டவுன் ஆரம்பமானது. இந்துத்துவவினரின் தொடர் தாக்குதல்களிலிருந்து தற்காலிகமாக தப்பித்தனர் முஸ்லிம்கள். இதில் ரமளானும் உள்ளடக்கம். காடேஸ்வராவின் ஏப்ரல் 5 திட்டம் லாக்டவுனில் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது.

*07.05.2020* தங்களுடைய எந்தத் திட்டமும் நடைமுறைப்படுத்த முடியவில்லையே என்ற ஆத்திரத்திலிருந்த இந்துத்துவவினர் பெரிய நாயக்கன் பாளையத்திலுள்ள பள்ளிவாசலை கல்வீசி தாக்கினர். மனோஜ் என்ற குடிகாரன் குடிபோதையில் கல்வீசியதாக காவல்துறையினர் சிம்பிளாக வழக்கை முடித்துக் கொண்டனர்.

*29.05.2020* காலை கோவையின் பிரதான பகுதியான வைசியாள் வீதியிலுள்ள வேணு கோபால கிருஷ்ணசாமி கோவிலிலும் அதன் அருகேயுள்ள ராகவேந்திரா கோவிலிலும் பன்றி இறைச்சியை வீசிவிட்டு ஒருவன் தப்பி ஓட முயன்றான். கோவில் வாசலில் பூவிற்ற பெண் கூச்சலிடவே பொதுமக்கள் பிடித்துவிட்டனர். அவன் பெயர் ஹரி. மறுநாள் செய்தித்தாள்களில் எப்படி செய்தி வெளியிட்டனர் தெரியுமா? "கோவிலில் இறைச்சி வீசிய இன்ஜினியர் கைது"!

காவல் துறையினர் இந்த வழக்கை கையாண்ட விதம் தான் அதிசயம்! பன்றிக்கறியை வாங்கிக்

கொண்டு இரு சக்கர வாகனத்தில் வந்து தெளிவாக இரு கோவில்களை தேர்வு செய்து கலவரம் ஏற்படட்டும் என்ற நோக்கத்தோடு வீசியவனை “மனநோயாளி” என்று மிக சிம்பிளாக வழக்கை முடித்துக் கொண்டனர் காவல் துறையினர்.

*02.06.2020* அன்று இரவு மைல்கல் அறிவொளி நகரிலுள்ள மதரஸா தாக்குதலுக்குள்ளானது. உள்ளே நுழைந்த அயோக்கியர்கள் அங்கிருந்த குர்ஆனை கிழித்து டியூப்லைட் மின் விசிறிகளை உடைத்து தண்ணீர் குடத்தை நொறுக்கி உள்ளே சிறுநீர் கழித்து வெறியாட்டம் ஆடியுள்ளனர்.

*15.07.2020* ஆர்.எஸ்.எஸ். தேசிய தலைவர் மோகன் பகவத் கோவை வருகை. ஒரு ஊர் விட்டு இன்னொரு ஊர் செல்ல முடியாத கொரோனா பெருந்தொற்று காலத்தில் பல மாநிலங்களை கடந்து சென்னை வந்து அங்கிருந்து பல மாவட்டங்களை கடந்து கோவை வந்தார். அப்படியென்ன அவசிய வருகை? அமிர்தா பள்ளியில் இவர்களின் ரகசியக் கூட்டம்!



*18.07.2020* கோவையில் 6 கோவில்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இத்தனைக்கும் ஆர்.எஸ்.எஸ். தேசிய தலைவர் மோகன் பகவத் கோவையில் தான் இருந்தார். எவ்வளவு பெரிய கலவரம் நடந்திருக்க வேண்டும்? நடக்கவில்லை. ஏன்? இதை செய்தவனை காவல்துறையினர் பிடித்து விட்டனர்! குற்றவாளி ஒரு மன நோயாளியாம்!

ஒட்டு மொத்த ஊரும் லாக்டவுன். எந்த பேருந்து வசதியும் கிடையாது. சேலத்திலிருந்து ஒரு மனநோயாளி வீட்டை விட்டு கிளம்பி எந்த வாகன வசதியுமில்லாமல் கோவைக்கு வந்து அதிகாலை 3 மணியளவில் 6 கோவில்களுக்கு (ஒரு கோவிலை விட்டு இன்னொரு கோவிலுக்கு செல்லவே அரைமணி நேரமாகும். அதிலும் நல்லாம்பாளையத்திலுள்ள கோவிலுக்கு செல்ல வேண்டுமென்றால் உள்ளூர்காரர்களான எங்களுக்கே வாகனத்தில் செல்லவே அரைமணி நேரம் ஆகும்!) சாவகாசமாக தீ வைத்தானாம். இது தான் காவல்துறையினர் வழக்கு பதிந்த (கதை அளந்த) லட்சணம். மக்கள் தெளிவாகவே புரிந்து கொண்டனர். காவல்துறையினரும் இந்துத் துவவாதிகளும் சேர்ந்து செய்த சதியென்று!

ஆக வழிபாட்டுத்தலங்களில் குண்டுகள் வீசப் படுகின்றனவா? கோவில்கள் தீக்கிரையாக்கப் படுகின்றனவா? கோவில்கள் சேதப்படுத்தப்படு கின்றனவா? நிச்சயமாக அதை செய்பவர்கள் இந்துத்துவவாதிகள் தான் என்பதை மேற் சொன்ன ஆதாரங்கள் போதுமானவை.

*31.03.2021* கோவை தெற்கு தொகுதியில் பா.ஜ.க சார்பில் போட்டி யிடும் வானதி சீனிவாசனை ஆதரித்து பிரச்சாரம் செய்ய உத்திரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் கோவை வந்தார். அவருடைய பிரச் சாரத்தின் போது செருப்பு வீசப்பட்டது என்று சில முஸ்லீம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தலில் கோவை யில் ஒரு திமுக வேட்பாளர் கூட வெற்றி பெற இயல வில்லை. பிஜேபி ஆளும் மாநிலங்களில் எப்படி தேர்தல் நடக்குமோ அவ்வாறு தான் கோவையிலும் தேர்தல் நடந்தது. காலை 7 மணி முதலே ஆர்எஸ்எஸ் அமைப்பினர் அனைத்து பூத்களிலும் குறிப்பாக திமுக பெரும் பான்மை யாக வாக்களிக்கும் பூத்களில் அதிமுக ஏஜெண்ட்களாக வேடமிட்டிருந்ததை நாம் நேடியாகவே கண்டோம். நடந்து முடிந்த சம்பவங்களை முன்னோட்ட மாக கண்டோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா இந்து சனாதன தர்மத்தைப் பற்றி பேசியதை கண்டித்து

கோவை பிஜேபி மாவட்ட தலைவர் உத்தம ராமசாமி "கோவைக்கு நீ வந்து பார் என்றும் தரங்கெட்ட வார்த்தைகளால் வசைமாறி பொழிய பிரச்சினை மீண்டும் ஆரம்பமானது கோவையில்!

21.09.2022 கோவை மாவட்ட பிஜேபி தலைவரை பீளமேடு போலீசார் கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். அதற்குள் பிஜேபியினர் திரண்டு வந்து காவல் நிலையத் திற்குள் நுழைய முயன்றனர். தடுப்புகளை வைத்து காவல் நிலையத்தை பாதுகாத்தனர் காவலர்கள். உடனே பிஜேபியினர் அவினாசி ரோட்டில் சாலைமறியலில் ஈடுபட்டனர். கோவை நகரின் அதிமுக்கிய மற்றும் எப்போதும் போக்குவரத்து நெரிசலான சாலை தான் அவினாசி சாலை. இவர்களின் சாலை மறியலால் வேலைக்கு செல்வோர், பள்ளி கல்லூரி செல்லும் மாண வர்கள் பாதிப்படைந்தனர். கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மறியலில் ஈடுபட்ட பிஜேபி யினரை போலீசார் கைது செய்தனர்.

பிஜேபியினரை கைது செய்ததை கண்டித்து மாநில தலைவர் அண்ணாமலை வரும் செப்.26ம் தேதி கோவையில் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும் அணைத்து மாவட்டங்களை சேர்ந்தோரும் கோவையை நோக்கி வாருங்கள் என்றும் அழைப்பு விடுத்தார். இதற்கிடையே பிஜேபி பிரமுகர் ஒருவர் ஒரு காவலரிடம் பேசும் வீடியோ வைரலானது. அதில், "இது எங்களுக்கும் திமுகவுக்கும் நடக்கும் போராட்டம். இதில் நீங்கள் தலையிடாதீர்கள். " என்று எச்சரிப்பார்.

22.09.22 காலை 4:00 மணியளவில் கோவை வந்த பாப்புலர் ஃபிரண்ட் தேசிய செயலாளர் முகமது சாகிப்பை என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். 5:30 மணிக்கு கோவை மாவட்ட பாப்புலர் ஃபிரண்ட் பிரமுகர் ஏ.எஸ். இஸ்மாயிலும் கைது செய்யப்பட்டார். அந்த அமைப்பை சார்ந் தவர்கள் ஆங்காங்கே மறியலில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட 108 பேரை போலீசார் கைது செய்தனர்.

பிரதமர் மோடி பிறந்தநாளுக்காக வைக் கப்பட்ட பேனரை கிழித்து விட்டதாக திமுக வினர் மீது பெரியநாயக்கன் பாளையம் பிஜேபி யினர் காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். திமுகவினரும் புகார் அளித்தனர். இதற்கிடையே பாஜகவின் கொடிக்கம்பத்தை திமுகவினர் வெட்டி அகற்றியதாக கூறப்படுகிறது. திமுக பாஜகவினரிடையே மோதல் ஏற்பட்டது. பாஜக வடக்கு மாவட்ட தலைவர் சங்கீதா இந்து முண்ணணி வடக்கு மாவட்ட தலைவர் உருவை பாலன் ஆகியோருடன் காடேஸ்வரா சுப்ர மணியன் காவல் நிலையம் வந்தார். அங்கு துணை சூப்பிரண்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி தலைவர் விஸ்வபிரகாஷ் மற்றும் அவரது மனைவி சுசிலா உள்பட 20 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

இரவு 8:35 மணியளவில் பா.ஜ.க. அலுவ லகம் மற்றும் ஒப்பணக்கார வீதியிலுள்ள லட்சு மணன் என்பவரது துணிக்கடை பெட்ரோல் குண்டு வீச்சுக்கு ஆளானது. உடனே பி.ஜே.பி. யினர் திரண்டு காந்திபுரத்தில் சாலை மறியல் செய்தனர். இந்த சாலை மறியலுக்கு இந்து முண்ணணி மாநில தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியன் தலைமை தாங்கினார்.

இதே 22.09.2022 சென்னை உயர்நீதி மன்றம், "அக்டோபர் 2ம்தேதி ஆர்.எஸ்.எஸ். அணிவகுப்பு ஊர்வலம் நடத்த அனுமதி வழங்கி செப்.28ம் தேதிக்குள் போலீசார் தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

23.09.2022 கோவை குனியமுத்தூர், பொள்ளாச்சியில் கார்கள் மீது பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. மற்றும் ஆட்டோக்கள் உடைப்பு, மேட்டுப்பாளையத்தில் பிளைவுட் குடோன்கள் மீது குண்டுவீச்சு என ஏகப்பட்ட பதற்றம். கோவை கண்ணப்ப நகரில் நடந்து சென்று கொண்டிருந்த ஆட்டோ டிரைவர் ஜபருல்லாவை இந்து முண்ணணியை சேர்ந்த விக்னேஷ் உட்பட மூன்று பேரும் தாக்கினர். பதற்றம் அதிகமானது. அதிவிரைவுப்படையினர் குவிக்கப்பட்டனர். அமைதிக்கு பங்கம் விளை விக்கும் நபர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுவர் என போலீஸ் கமிஷனர் எச்சரித் தாரேயொழிய ஆட்டோ டிரைவர் ஜபருல் லாவை தாக்கியவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்யவில்லை!

கோவைப்புதூர் ஆனந்த கல்யாண கிருஷ்ணன் என்பவர் தன் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசியதாக சமூக வலைதளத்தில் பதிவேற்றம் செய்தார். அதையும் காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.



அப்பாவி முஸ்லிம்களும் கைதாகிக் கொண்டே இருந்தது தான் பரிதாபம்.

கோவை குனியமுத்தூர் பகுதியில் நடந்த பெட்ரோல் குண்டுவீச்சு சம்பவத்திற்கு எஸ்.டி.பி.ஐ. கட்சியை சேர்ந்த 2 பேரை கைது செய்தனர். எல்லா குற்றங் களையும் கண்டுபிடிப் பதில் காவல்துறையினர் ஏன் இவ்வளவு தடுமாற்றங்கள் என்று பார்த்தால் கோவை நகரப் பகுதியிலுள்ள பல சிசிடிவி கேமராக்கள் செயல்படாமல் இருப்பதுதான் காரணம் என தெரியவந்தது. உண்மையிலேயே செயல்படவில்லையா? அல்லது செயல்படாமல் ஆக்கப்பட்டனவா? என சந்தேகம் எழுந்தது இயற்கையானதுதானே?

*24.09.2022* தமிழகத்தில் தேசபாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவுவதாகவும் வகுப்புவாத சக்திகளுக்கு தமிழக அரசு துணை போவதாகவும் பா.ஜ.க. தமிழக தலைவர் அண்ணாமலை உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஆனால் இவர்தான் போலீசாரை பார்த்து (அவினாசி ரோட்டில் சாலை மறியல் செய்த பா.ஜ.கவினரை கைது செய்த சம்பவத்தை மேற்கோள் காட்டி) "எங்கள் மீது கை வைத்த போலீசாரை நாங்கள் சும்மா விட மாட்டோம் "என மிரட்டியது சமூக வலைதளங்களில் வைரலானது.

மாவட்ட ஆட்சியர் சமீரன் முஸ்லிம் ஜமாத் தார்கள் மற்றும் இந்து அமைப்புக்களை சேர்ந்த வர்களை தனித்தனியே அழைத்து கோவை மக்கள் அமைதியாக வாழ ஒத்துழைப்பு தரவேண்டும் என்றார். முஸ்லிம்கள் தரப்பு: கோவையின் அமைதிக்கு ஒத்துழைப்பு கொடுப்போம். குற்றம் செய்தவர்கள் யாராவது எங்களது சமுதாயத்தை சேர்ந்தவர்கள் இருந்தால் நாங்களே பிடித்துக் கொடுப்போம். ஆனால் யாரோ செய்யும் செய லுக்கு ஒட்டுமொத்த சமுதாயத்தின் மீதும் குற்றம் சுமத்தக் கூடாது என்று கூறினர். ஆனால் இந்து அமைப்புகள் தரப்பினரோ எந்த உறுதியும் கொடுக்கவில்லை.

*25.09.2022* தமிழகத்தில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்போர் மீது "தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும் என டிஜிபி சைலேந்திரபாபு எச்சரிக்கை விடுத்தார்.

ஆனால் தொடர்ச்சியாக கோவை, ஈரோடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, சேலம் என எல்லா பகுதிகளிலும் பாப்புலர் ஃப்ரண்ட்டை சேர்ந்தவர்களும் எந்த அமைப்பிலும் இல்லாத

*26.09.2022* பி.ஜே.பி. ஆர்ப்பாட்டம். காவல்துறையின் கட்டுப்பாட்டினால் எந்தவித அச்சுறுத்தலுமின்றி அமைதியான முறையில் அரங்கேறியது.

அக்டோபர் 2ம் தேதி ஆர்.எஸ்.எஸ். பேரணியை எதிர்த்து சமூக நல்லிணக்க மனித சங்கிலியை அறிவித்தனர் வி.சி.க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியினர். ஒரே தேதியில் இரண்டு பேருக்கும் (ஆர்.எஸ்.எஸ். பேரணி மற்றும் மனிதசங்கிலி )பாதுபாப்பு அளிப்பது என்பது இயலாத காரியம் என காவல்துறை அறிவித்தது.

*28.09.2022* மேட்டுப்பாளையத்தில் இந்து அமைப்பு நிர்வாகியின் கார் கண்ணாடி கல்வீசி சேதப்படுத்தப்பட்டது. சிசிடிவி கேமராவை ஆராய்ந்த காவல்துறையினர் அதே பகுதியை சேர்ந்த தமிழ்செல்வன், ஹரிஹரன் என்ற இருவரை கைது செய்துள்ளனர்.

சர்வதேச பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாக பாப்புலர் ஃப்ரண்ட் அமைப்பை 5 ஆண்டுகளுக்கு தடை விதித்தது மத்திய அரசு.

*30.09.2022* ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் சார்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை (அதாவது பேரணி நடத்த போலீசார் பாது காப்பு வழங்கவில்லையென) நடைமுறைப்படுத்த

வில்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்தனர்.

அதற்கு போலீஸ் தரப்பில் ஆஜரான என்.ஆர். இளங்கோ மற்றும் மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்களை சுட்டிக்காட்டியதோடு 01.10.2022 அன்று நடைபெறும் அமைச்சர் பங்கேற்கக்கூடிய உள்ள ரங்கு கூட்டத்திற்கே அனுமதி மறுக்கப்பட் டுள்ளது எனவும் மாற்று தேதியில் நடத்துவதாக இருந்தால் அரசு பரிசீலிக்கும் எனவும் வாதிட்டனர்.

## என்ன நடக்குமோ நவம்பர் 6ல்?

நவம்பர் 6ம் தேதி ஆர்.எஸ்.எஸ். ஊர்வலம் நடத்தலாம் என உயர்நீதிமன்றம் ஆணை பிறப் பித்துள்ளது!

ஒட்டுமொத்த தமிழகமும் குறிப்பாக சொல் லப்போனால் கோவை மாநகரம் முழுவதும் நவம்.6ல் என்ன நடக்குமோ என்ற பதை பதைப் பில் தான் மக்கள் தங்கள் நாட்களை கடத்து கின்றனர்.

பிஜேபியின் அடிமைகளாக வாழ்ந்த அதிமுக நாங்கள் மேலே குறிப்பிட்டுள்ள (26.09.22 தவிர) அத்துணை சம்பவங்களிலும் போலீசார் நியாய மாக நடந்து கொண்டதேயில்லை என்பதை நீங்கள் படிக்கும் போதே தெரிந்து கொள்வீர்கள். சசிக்குமாரை கொலை செய்த கொலைகாரனை தெரிந்தும் இன்று வரை காவல்துறை அறிவிக்கவே இல்லை. ஏன்? யாருடைய அழுத்தம்? அதிமுக ஆட்சியில் காவல்துறை சுதந்திரமாக செயல் பட்டது! திமுக ஆட்சியில் அந்தச் சுதந்திரம் இல்லை என எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி 26.09.2022 அன்று பேட்டி கொடுத் திருக்கிறார்!

## தூசு தட்டப்படுமா நிலுவையிலுள்ள வழக்குகள்

சசிக்குமார் கொலை முதல் உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் கோவை வருகை வரை யாருடைய ஆட்சி தமிழகத்தில் இருந்தது? அதிமுக ஆட்சி தானே? ஆண்மை இருந்தால் அறிவிக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம் யார் சசிக்குமாரை கொலை செய்தவனென்று? காவல் துறை முதல் ஆட்சியாளர் வரை அணைவருக்கும் தெரியும் பெட்ரோல் குண்டுகள் வீசுவது யார்? தங்கள் கட்சி நிர்வாகிகளையே கொலை செய்வது யார்? சமூக நல்லிணக்கத்தை கெடுப் பது யாரென்று. மீண்டும் தூசு தட்டப்படுமா சசிக்குமார் கொலை வழக்கு?


ஆடிட்டர் ரமேஷை கொலை செய்தவனை கண்டுபிடித்து விட்டார்களா காவல்துறையினர்? கொலைகாரன் யாரென்று நாளை சொல்கிறேன் என்று சொன்ன ஆடிட்டர் ரமேஷின் உதவி யாளர் ராஜேஸ்வரி மறுநாள் தற்கொலை செய்து கொண்டது எப்படி? மீண்டும் அந்த வழக்கை எடுத்து விசாரித்து உண்மை குற்றவாளியை தண்டிக்கும் ஆண்மை உள்ளதா காவல்துறைக்கு?

சசிக்குமார் உடலை எடுத்துச் சென்றபோது 12 கிலோ மீட்டர் வன்முறை ஆட்டம் ஆடி பல தேவாலயங்கள் கல்விக்கூடங்கள் பள்ளிவாசல்கள் (யாரெல்லாம் பிஜேபியினருக்கு கேட்டபோது வசூல் கொடுக்கவில்லையோ அந்த) வணிக நிறுவனங்களை தாக்கினார்களே! ஒரு இடத்தில் கூட ஒரு சிசிடிவி கேமராகூட வேலை செய்ய வில்லையா? என்ன ஆட்சியாளர்கள்? அந்த பாதிப்பைப் பற்றி எந்தக் கட்சியினராவது என்றாவது ஒரு நாள் விசாரித்திருப்பார்களா திமுக உட்பட? கிட்டத்தட்ட 15 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது இந்த வன்முறையால் என பியூசிஎல் மற்றும் உண்மை கண்டறியும் குழுக்கள் அறிக்கை தாக்கல் செய்தனவே! ஒரு பைசாவா வது அதிமுக அரசு அளித்திருக்குமா? எடப்பாடி பழனிச்சாமிக்கெல்லாம் சட்டம் ஒழுங்கை பற்றி பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

6 கோவில்கள் தீக்கிரையாயினவே? ஒரு இந்து அமைப்பாவது ஆர்ப்பாட்டமோ போராட் டமோ அறிவித்தார்களா? அமைதியாக இருந்த னரே! ஏன்? இந்த பிண்ணணியை (மீண்டும் இந்த வழக்கை நியாயமான முறையில்) விசாரிக்க திராணியுள்ளதா காவல்துறைக்கு? ஆணையிடு வார்களா ஆட்சியாளர்கள்?

2 கோவில்களில் பன்றிக்கறி வீசிய இன்ஜினியர் யார்? அவரின் பிண்ணணி என்ன? எந்த நோக்கத்திற்காக வீசப்பட்டது? கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக? யார் வீசச் சொன்னார்கள்? விசாரிக்குமா மக்கள் நல அரசு?

**– கோவையிலிருந்து நமது நிருபர்கள்**




**ஜைனபுல் கஸ்ஸாலி (மிஸ்ரி)**
**தமிழில் : மு. குலாம் முஹம்மத்**

இதுபோன்ற இலக்கியங்கள் மக்களால் அதிகமாக வாங்கப்படும் காலம் இது! குறிப்பாக சகோதரர்களால். ஆச்சர்யம் ஆனால் உண்மை.

திடீர் என சில சகோதரர்கள் இந்த நூலை படித்துவிட்டு சமூக வலைத்தளங்களில் படர விட்டார்கள். ஆய்வுகளுக்கு உள்ளாக்கினார்கள். ஆனால் சகோதரர்கள் அதிகமாக வாங்கினர். சிலபல இயக்கத்தவர்கள் இந்த நூலை, தங்கள் உறுப்பினர்கள் அவசியம் படித்தாக வேண்டும் என விதி வகுத்ததாகவும் கேள்விப் பட்டேன். அல்ஹம்துலில்லாஹ்.

அவர்கள் கொத்துக் கொத்தாக பிரதிகளை வாங்கியதால், விற்றுத் தீர்ந்து போனது வெகு நாள்களுக்கு முன்னால்!

மீண்டும் பதிப்பிக்க, மீண்டும் ஒருமுறை ஒளி அச்சுக்கோவையைச் செய்திட வேண்டியதாயிற்று. உண்மையில் ஒரு 'நூல் தொடர்பான எல்லா வேலைகளையும் மீண்டும் செய்திட வேண்டிய கட்டாயம்! அதனால் கால தாமதம்! நமது பதிப்பகத்தின் நூல்கள் மறுபதிப்பிற்குக் காத்திருந்தாலும் இந்த நூலுக்கு முன்னுரிமை தந்தோம். இதனால் இப்போதைய வாசகர்களின் தேவைக்கு நூல் வசப்பட்டுவிட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

இன்ஷாஅல்லாஹ் இனிமேல் இப்படி நெருக்கடி வராமல் தொடர்ந்து நூல்கள் கிடைக்க ஆவண செய்வோம்.

நிறைய ஜெய்னப் அல் கஸ்ஸாலி அவர்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்

இன்னும் நிறைய உருவாக்கிட அல்லாஹ் அருள் புரிவானாக! அதுவே இப்போதைய தேவை. முன்னே வைத்தபோதும் தேவை இருந்ததில்லை. வழக்கம் போல் சகோதர, சகோதரிகளின் ஆதரவையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

இன்ஷாஅல்லாஹ்.
அஸ்ஸலாம்.

இவண்
**மு. குலாம் முஹம்மத்**
காப்பாளர் - வேர்கள் பதிப்பகம்

# திரு. முகம்மது நபியைப் பின்பற்றுங்கள்

## - தந்தை பெரியார்



**எனது அன்பார்ந்த இந்து முஸ்லீம் சகோதரர்களே!**

இன்றைய தினமானது ஒரு பெரிய மகானின் பிறந்த தினமாகக் கொண்டாடப்படும் தினமாகும். ஆனால், அம்மகான் முகம்மதியர்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் என்றும், ஆதலால் அவர்கள் மாத்திரம்தான் அம்மகானின் பிறந்த நாள் கொண்டாட உரிமையுடையவர்களென்றும் நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கலாம்.

அவ்வளவோடு மாத்திரமல்லாமல் அக்கூட்டத்தில் ஒரு இந்து என்பவனாகிய நான் எப்படித் தலைமை வகிக்கக் கூடுமென்றுகூட பலர் கருதலாம். மேலும் இவற்றிற்கு நான் சமாதானம் கூறும்போது எனது இந்து சகோதரர்கள் என்பவர்கள் பலர் என் மீதும் சந்தேகப்பட்டு நான் முகம்மதியர்களுக்கோ, முகம்மதிய மதத்திற்கோ வக்காலத்து வாங்கிப் பேசுவதாகவும் கருதலாம் என்றாலும் இந்துக்கள் என்பவர்கள் என்னைப் பற்றி எப்படிக் கருதுகிறார்கள் என்பதைப் பற்றி நான் சற்றும் கவலைப்படமாட்டாது முகம்மதிய சகோதரர்கள் என்னை இவ்விழாவில் கலந்து கொள்ள ஊக்க மளித்ததுடன், மிகப்பெருமையான இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தையும் எனக்களித்ததற்கு முதன் முதலாக நான் என் மனப் பூர்வமான நன்றியறிதலை எனது முஸ்லீம் சகோ தரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மதம்**

சகோதரர்களே! நான் மதங்கள் என்பவைகளையெல்லாம் மக்களின் இவ்வுலக வாழ்க்கை நலத்திற்கும், இன்ப அனுபவத்திற்கும் அனுகூலமாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தோடு அவ்வக்காலத்திய அறிஞர்களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் என்றுதான் கருதுகின்றவனேயல்லாமல், அவற்றை ஒரு "ஆத்மார்த்த சாதனம்" என்றோ, "தெய்வீகத் தன்மை" யுடையதென்றோ, இவ்வுலக வாழ்க்கைக்கு மேற்பட்ட ஏதோ ஒரு கதிக்கு மார்க்கமென்றோ நான் சிறிதும் கருதுவதும் இல்லை; அதைப் பற்றி நான் சிறிதும் கவலை கொள்ளுவதுமில்லை. அப்படி வேறு யாராவது கருதுவதாய் இருந்தாலும் கூட இவ்வுலக வாழ்க்கையின் அனுபவத்தைப் பொறுத்துத்தான் அத் "தெய்வீக கதிகள்" என்பவை களின் பலன்களும் இருக்கக் கூடுமே ஒழிய அதற்கு விபரீதமாய் இருக்க முடியாது.

ஆதலால் அதற்கென்று வேறு முயற்சிகள் வேண்டாம் என்றே அப்படிப்பட்டவர்களுக்கு நான் சொல்லுவது வழக்கம். மற்றும் அதுபோலவே தான் எந்த மதக் கொள்கைகளையும் ஒரு கடவுள் உண்டாக்கினார் என்றோ அது எப்போதைக்கும் பொருத்தமானதென்றோ, அவற்றில் ஒரு சிறிது கூட காலதேச வர்த்தமானத்தை அனுசரித்து

மாற்றக்கூடாதது என்றோ நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளுவதுமில்லை. அதுபோலவே எல்லா மதத் தலைவர்கள் என்பவர்களைப் பற்றியும் கூட நான் அவர்களை ஒரு பொதுநல சேவைக்காரர் என்றும், மக்களிடம் அன்பும் இரக்கமும் கொண்ட பெரியார் என்றும் உலக நன்மைக்காக தன்னலம் விடுத்து பிறர் நலத்திற் காகவே உழைத்த உத்தமத் தியாகிகள் என்றும் தான் நான் கருதுவதே தவிர, மதத் தலை வர்களை எல்லாம் கடவுள் என்பவர் என்றோ, கடவுளால் அனுப்பப்பட்டவர் என்றோ, கடவுள் அவதாரம் என்றோ, நான் சிறிதும் கருதுவதில்லை.

ஏனெனில், உலகில் பல மதங்களும், பல மதக் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரணாகவும், ஒருவருக்கொருவர் ஒப்புக்கொள்ள முடியாம லிருக்கும்போது ஒரே கடவுள் இத்தனை மதங் களையும் உண்டாக்கி இருப்பாரென்று எப்படி ஒப்புக் கொள்ள முடியுமென்று தோன்றுவதா லேயேதான், இது ஒருபுறமிருந்தாலும், மற்றொரு புறத்தில் இந்துமதத் தலைவர்கள் மாத்திரம் கடவுளாலேயே அனுப்பப்பட்டவர்களென்று கருதுகின்றவர்களுக்கு வேறு சமாதானம் என்ன வென்றால், "எல்லா படைப்பும் எல்லா தோற் றமும் எல்லா மக்களும் கடவுளால் உண்டாக்கப் பட்டது" என்று சொல்லப்படுகையில் ஒரு சிலருக்குமாத்திரம் கடவுள் அவதாரம், கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்கின்ற பேர் எப்படிப் பொருந்தும் என்பதே நமது பதிலாகும். இப்படி இருக்க ஒரு சிலரை மாத்திரம் மக்கள் தெய்வத் தன்மை பொருந்தியவர்கள் என்றும், அவதார புருஷர்கள் என்றும், கடவுளால் அனுப்பியவர்கள் என்றும் ஏன் சொல்லுகின்றார்கள் என்று பார்ப் போமானால், அதற்கும் ஒரு சமாதானம் இருக்கின்றதென்பதே நமது அபிப்பிராயம். என்னவெனில் நாம் பொதுவாக மக்களின் சக்தியும் குணமும் இவ்வளவுதான் என்று ஒரு அளவுக்குட் படுத்தி நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றோம். அந்த அளவுக்கு மேற்பட்ட சக்தியையும் குணத் தையும் எங்காவது கண்டு அது மனிதத்தன்மைக்கு மீறியது என்பதாக நாம் முடிவு செய்யும்போது, சாதாரணமாக நமது வாழ்வில் மனிதத் தன்மைக்கு மீறினதாகக் கருதும் எதையும் நாம் 'தெய்வத்தன்மை' என்று கருதுகின்ற வழக்கமாய் விட்டதால் இதையும் "தெய்வத்தன்மை" என்று சொல்ல வேண்டியவர் களாகிவிடுகின்றோம்.

எப்படியானாலும் அப்படிப்பட்டவர்கள் பெரியார்கள் என்பதிலும், பாராட்டப்படவும், கொண்டாடவும், மரியாதை செய்யப்படவும் உரியவர்கள் என்பதிலும் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அவர்களைக் கொண்டாடுவது என்பது அவர்களைப் போன்ற உருவத்தை ஊர்வலம் செய்வதற்கோ, பூஜை, அபிடேகம், உற்சவம் செய்வதற்கோ, அவர்கள் மீது பாட்டு, பஜனை பாடுவதற்கோ, கொண்டாட்டம் செய்வது என்பது பைத்தியக்காரத்தனம் என்பதே நமது அபிப்பிராயம். மற்றபடி வேறு எதற்கு என்போ மானால் நாம் பெரியார் என்றும், மனிதத் தன்மைக்கு மீறினவர் என்றும் ஒப்புக்கொண்ட ஒருவரை பின்பற்றவும், அவரது உபதேசப்படி நடக்கவும் மற்றும் அந்தப்படி மக்களை நடப் பிக்கச் செய்ய முயற்சிக்கவுமான காரியங்களுக்கே தான் அவ்வித பெரியாரின் கொண்டாட்டங்களை உபயோகிக்க வேண்டும் என்பேன்.

எனவே, இன்று நாம் கொண்டாடும் திரு. முகம்மது நபி அவர்களின் பிறந்த நாள் கொண் டாட்டமானது நான் முன்சொன்ன முறையில் கொண் டாடத்தக்க ஒரு ஒப்பற்ற பெரியாரின் கொண்டாட்டம் என்றே சொல்லுவேன். இன்னமும் விளக்கமாகச் சொல்வதானால் இப்போது நம்மால் மதத்தலைவர்கள் என்று சொல்லப்படும் பெரியார்களில் எல்லாம் திரு.முகம்மது நபி அவர்கள் மேலானவர்கள் என்றும், எல்லா மக்களும் பொதுவாகப் பெரிதும் அவரைப் பின்பற்ற உரியார் என்றும் கூட தைரிய மாய்ச் சொல்லுவேன்.

ஏனெனில் திரு. முகம்மது நபி அவர்களின் மதமே (கொள்கை களே) மற்ற எல்லா மதத்தை விட பிந்தியதும் சமீபமானதுமான மதமாகும். ஆதலால் அது மற்ற மதங்களில் உள்ள குற்றம் குறைகளை எல்லாம் நீக்கிச் சற்றேறக்குறைய எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய அளவு சீர்திருத்தமுடையதென்றும் சொல்லுவேன். எப்படியெனில் சுமார் இரண்டு மூன்று ஆயிர ஆண்டுகளுக்கு முன்பு உலகத்தில் எங்கும் இந்து மதக் கொள்கைகள், அதாவது, ஆரிய மதக் கொள்கைகளே பரவி வந்திருந்ததாகத் தெரிய வருகின்றது.

அது எப்படியெனில், பல தெய்வ வணக்கமும், விக்கிரக வணக்கமும், ஜீவபலியிடுவதும் முதலான காரியங்களே 'ஒரு காலத்தில்: உலகத்தில்

மதக் கொள்கையாய் இருந்து வந்திருக்கின்றது. அதிலிருந்து ஒருபுறம் புத்தரும் மற்றொரு புறம் கிறிஸ்துவும், மற்றும் பல பெரியாரும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டு மிகக் கஷ்டத்துடன் முயற்சி எடுத்து வந்திருக்கின்றார்கள். அவர்கள் முயற்சி யானது அந்தக் காலத்திற்குப் புதியதாய்த் தோன்றிய தாலேயே அவர்கள் நாத்திகர்கள் என்று பழிக்கப்படவும், துன்பத்திற்காளாகவும் நேர்ந்ததுடன், கிறிஸ்து நாதர், சாக்கரடீஸ் முதலிய வர்கள் கொல்லவும்பட்டார்கள். அதற்கும் வெகு காலத்திற்குப் பிறகு அக்கொள்கை களிலிருந்தும் சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டவரே நமது திரு.முகம்மது நபி அவர்களாவார்கள்.

எனவே, நபி அவர்கள் உயரிய புதுக் கொள்கை களை, அதாவது மிக்க மனிதத்தன்மை வாய்ந்த தாகவும், மனித வர்க்கத்திற்கு ஏற்றதும், அவசிய மானதும், பெரிதும் அறிவிற்குப் பொருந்திய தாகவும் கண்டுபிடித்துப்பரப்பினார். இவ்வித உயரிய கொள்கைகள் அவருக்கு மாத்திரம் எப்படி தோன்றிற்று என்போமானால், அவர் மற்ற மதங்களின் குணதோஷங்களை எல்லாம் நன்கு அறிந்து கடைசியில் பிந்திய காலத்தில் ஏற்படுத் தினமதமானதால் அது கூடுமானவரை திருத்தத் துடன் செய்ய முடிந்தது.

ஆனால் அப்பொழுதும் பழைய கொள்கைக் காரர்கள் திரு. நபி அவர்களையும் நாஸ்திகர் என்றும், கடவுள் துரோகி என்றும் சொல்லி பலவிதத்திலும் துன்புறுத்தி இருக்கின்றார்கள்; கொல்லவும் முயற்சித்திருக்கின்றார்கள். என்றாலும், திரு.நபி அவர்கள் எதற்கும் அஞ் சாமல் உறுதியுடன் நின்று தமது கொள்கையை மக்களிடம் நன்றாய் பதியும்படி செய்திருக்கிறார்.

எனவே, அவரை அக்காலத்திற்கேற்ற ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் என்றும், தன்னலமற்ற பெரிய தியாகி என்றும், தீர்க்கதரிசி என்றும் சொல்லியாக வேண்டும். நான் இப்படிச் சொல்லு வதற்கு ஆதாரமாக இன்றைய தினம் அப்பெரி யாரின் கொள்கைகளின் பெருமைகளைப் பற்றியும், அவற்றிற்கும் நமது இந்து மதக் கொள்கைகள் என்பவற்றிற்கு முள்ளதாரதம்மி யத்தைப் பற்றியும் தங்கள்முன் எனக்குத் தோன்றி யதை எடுத்துச் சொல்வதில் நீங்கள் சற்று கவனம் செலுத்தி நடு நிலைமையில் இருந்து கேட்க வேண்டும் என்று இந்து முஸ்லீம் சகோதரர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**தத்துவார்த்தமும் பிரத்தியட்ச அனுபவமும்**

சகோதரர்களே! நான் அந்தப்படி சொல்லு வதில் குரானில் என்ன சொல்லியிருக்கின்றது என்பதைப் பற்றியோ, இந்து வேதம் என்பதாகிய நான்கு வேதங்களில் என்ன சொல்லி இருக் கின்றது என்பதைப் பற்றியோ சொல்லப் புறப் பட்டு அவ்வம்மத ஆதாரங்களான புத்தகங்களில் எழுதப்பட்டவைகளைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை.

ஏனெனில், நான் அவைகளை எல்லாம் படித்தவனல்ல; அன்றியும் புத்தகங்களில் இருப்ப தாகச் சொல்லும் பெருமைகள் நமக்கு ஒரு பலனையும் தரமுடியாது.

**ஒரு காகிதத்தில் சர்க்கரை என்று எழுதிக் கொண்டு நக்கினால் இனிக்குமா?**

அன்றியும் அவற்றிற்கு எப்படி வேண்டு மானாலும் "தத்துவார்த்தம்" செய்யக்கூடும். ஆதலால் அதைப்பற்றி பிரஸ்தாபிக்காமல், இரண்டு மதத்தின் பேராலும், பிரத்தியட்சத்தில் நாம் காணும் விடயங்களைப் பற்றியும் அவ்வம் மதக்காரர்கள் அனுபவிக்கும் பலனைப் பற்றியும் எடுத்துப்பேசுகின்றேன்.

ஏனெனில், எந்த மதத்தின் கொள்கையின் பெருமையும் அந்தந்த மதத்தைப் பின்பற்றுகின்ற மக்களுக்கு நாட்டிற்கு உண்டாக்கி இருக்கும் பலன்களைக் கொண்டுதான் நிச்சயிக்க வேண்டு மேயல்லாமல், அது ஒரு காலத்தில் செய்ததாகச் சொல்லப்படும் கதைகளைக் கொண்டோ, அம்மதத் தலைவர்கள், ஒரு காலத்தில் செய்ததாக சொல்லப்படும் அற்புதங்களைக் கொண்டோ, வியாக்கியானம் செய்வதால் ஏற்படும் அழகிய கருத்துக்களைக் கொண்டோ நிச்சயித்து விட முடியாது. அப்படி நிச்சயிப்பதால் உலகத்திற்கு ஒரு பலனும் ஏற்பட்டுவிடாது.

ஆதலாலேயே தான் பிரத்தியட்ச அனுபவத்தைச் சொல்லுகின்றேன் :-

முகம்மதிய மதம் என்பது ஒரு தேசீய மதமாகும். அம்மதத்தின் முக்கிய தத்துவம் என்ன வென்றால், அம்மதத்தைப் பின்பற்றும் சமூகம் கொண்ட தேசங்களை அச்சமூக நன்மைக்கேற்ற தான, ஆட்சிக்குள் இருக்கச் செய்வதென்பது முக்கிய மானதாகும். அன்றியும் அம்மாதிரியான ஆட்சி நன்மைக்கே மதத்தைக் காப்பதுமாகும்.

மேலும் அது ஒரு சமத்துவக்கொள்கைக் கொண்ட மதமாகும்.

அதாவது முகம்மதிய மதத்தில் மக்களுக்குள் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது கிடையவே கிடையாது. பணக்காரன், ஏழை, படித்தவன் படியாதவன்; இளைத்தவன் பலசாலி என்கின்ற வித்தியாசமில்லாமல் சகல ருக்கும் வாழ்வில் சகல உரிமையும் அளிக்கின்றது.

மேலும் முகம்மதிய மதம் ஒற்றுமையையே அதிகமாய்க் கொண்டிருக்கிறது. அதாவது அந்த மதத்தைச் சேர்ந்த ஒரு தனி மனிதனுக்கு ஒரு சிறு தீங்கு அந்நியனால் செய்யப்பட்டாலும், உடனே அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி, தங்களுக்கு வந்ததுபோல் கருதி அவனுக்கு உதவி செய்ய அவசரமாய் முந்துகின்றார்கள். அன்றியும், அது அன்பையும் சகோதரத்துவத்தையும், அடிப் படையாகக் கொண்ட மதமாகும்.

என்னவென்றால், ஊர்பேர் தெரியாதவர்களா னாலும், முகம்மதியர் என்று தெரிந்தால், ஒரே இலையில் சாப்பிடும்படியான அன்பும் சகோத ரத்துவமும் கொண்டிருக்கிறது. அது "சண்டாளர் களையும்" ரட்சிக்கும் சமயமாகும். ஏனெனில் நம்மால் சண்டாளர்கள் என்று ஒதுக்கித் தள்ளப் பட்ட மக்களைத் தங்கள் சமயத்தில் சேர்த்து அவர்களுக்குச் சகல உரிமையையும் கொடுக் கின்றார்கள். மற்றும் முகம்மதிய மதமானது வீரத்தையும் அன்பையும் கொடுக்கும் மதமாகும்.

எப்படியெனில் அவர்களுக்கு எதிரிகளை விட துணிவு அதிகம்; அவர்களைக் கண்டால் மற்றவர் அஞ்சுகின்றார்களே ஒழிய அவர்கள் யாருக்கும் பயப்படுவதில்லை. முகம்மதிய மதத்தில் பெண்களுக்கு உரிமை இருக்கின்றது. அதாவது பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு; விதவா விவாகம் உண்டு; கணவனும் மனைவியும் ஒத்துக்கொள்ளா விட்டால் விலகிக் கொள்ளச் சுதந்தரம் உண்டு; படிக்கச் சுதந்தரம் உண்டு; ஆனால் கோஷா முறையைப் பற்றி குற்றம் சொல்லலாம்.

ஆனாலும் வரவர அதுவும் விலக்கப்படு கின்றது. உதாரண மாக துருக்கியில் பெண்கள் உத்தியோகம் வகிப்பதும், ஆப்கான் தேசத்தி லிருந்து பெண்களை வெளிநாட்டிற்குப் படிக்க அனுப்பி இருப்பதும், ஹைதராபாத், நைசாம் அவர்கள், தனது புத்திரிகளுடன் தாராளமாய்ச் சென்னையில் உலவினதுமான காரியங்களைக் கவனித்தால் அதுவும் சீக்கிரத்தில் மாற்றமடையக் கூடும். முகம்மதிய மதம் தெய்வ வணக்கத்தில் மிக்க கண்டிப்பையும் செலவு சுருக்கத்தையும் உடைய தாகும். அதாவது, ஒரே கடவுள் என்பதும் அதுவும் நாமம், ரூபம், குணம், குறி முதலிய வைகள் அற்றது என்பதும், அதற்கு விரோதமாய்ப் பல கடவுள்களை சொல்லுவதோ,

அல்லது கடவுளுக்கு ரூபம், பெண்டு, பிள்ளை, வைப்பாட்டிகளை ஏற்படுத்துவதோ, பூசை, உற்சவம் முதலிய வைகளில் செலவு செய்வதோ மிக்கதோஷம் என்றும் அப்படி கருதுகின்றவர் களையும் செய்கின்றவர்களையும் தங்கள் எதிரிகள் என்றும் கருதும்படி கற்பிக்கின்றது.

முகம்மதிய மதம் தர்ம விஷயத்தில் மிக்க பிரயோஜனமான காரியத்தைச் செய்விக்கிறது. அதாவது ஒரு முஸ்லிம் தனது சொத்தில், அல்லது தனது வரும்படியில் இன்ன பாகம் தர்மத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று இருப்பது அமுலில் இல்லாவிட்டாலும், கொடுக்கும் பணத்தை ஏழை களுக்கும் கஷ்டப்பட்டு சம்பாதித்து சாப்பிட முடியாதவர்களுக்கும் அநாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றி, கல்வி, தொழில் கற்றுக் கொடுப்ப தற்கும் உபயோகப்படுத்தப் படுகின்றதே ஒழிய தர்மத்தின் பேரால் சோம்பேறிகளை உற்பத்தி செய்வதில்லை. முகம்மதிய மதம் மற்ற மதங்களை விட, மிகவும் நாகரிகம் கொண்டது என்றுகூட சொல்லலாம்.

அதாவது முகம்மதியர்கள் உணவில் சத்துள்ள உணவு கொள்ளுகின்றார்கள். ஒரேவகை சாப்பாடு ருசி, பலம், சத்து, திருப்தி ஆகியவைகளைக் கொடுக்கும், நல்ல நல்ல பழ வர்க்கங்களும், சத்துள்ள விதை வர்க்கங்களும் பெரிதும் அவர் களாலேயே நமது நாட்டுக்குக் கொண்டு வரப் பட்டது. வைத்தியத்தில் மிக்க மேன்மையான முறையையுடையவர்கள். அல்வாவிலும் சர்ப்பத் திலுமே எம்மாதிரியான வியாதிக்கும் மருந்து உண்டு.

சங்கீதமோ மற்ற சங்கீதத்தைவிட மேன்மை யானது. கட்டிடங்கள் கட்டுவதிலோ மற்றவர் களைவிட அலங்காரமாக சித்திர வேலை களமைந் ததாகவும் கட்டுவார்கள். வாசனைத் திரவியங் களில் மற்றவர்களை விட சிறந்தவர்கள். அரசியல் ஆட்சிமுறையில் அவர்கள் மிக்க ஞானமுடைய



வர்கள்; நீதி உடையவர்கள் என்றும் சொல்லலாம். எப்படி எனில், அரசியல் அதிகாரங்களுக்கு அநேகமாய் முகம்மதிய பெயர்களே இப்போதும் வழங்குகின்றது. அன்றியும் அவர்களுடைய மூர் தண்ணியமான ஆதிகாலத்திலும் இந்தியாவின் செல்வத்தை அந்நிய நாட்டிற்குச் சுறண்டிக் கொண்டு போக வில்லை. அந்நியர் கொண்டு போக இடம் கொடுக்கவும் இல்லை. மற்றபடி ஏதாவது இரண்டொரு விஷயங்கள் மாறுபட்ட தாகக் காணப்படலாமாயின், அவைகள் முகம்மதிய கொள்கைகள் ஏற்படுத்தப்பட்ட அந்தக் காலத்திற்கும் இடத்திற்கும் இப்போதைய நிலைமைக்கும் உள்ள தார தம்மியத்தைப் பொறுத்திருக்கலாமே ஒழிய வேறில்லை. மற்றும் முல்லாக்களால் ஏதாவது சில மூட நம்பிக்கை களைப் புகுத்தியிருக்கலாம்.

ஆனாலும் அது அவர்கள் தேசீயத்தையாவது வாழ்க்கைச் சுதந்தரத்தையாவது கெடுக்கக் கூடிய அவ்வளவு கேடானதாக இல்லை. அன்றியும், அது இப்போதைய நிலைமைக்கு கால தேசவர்த்த மானத்திற்கு ஏற்றபடி சீர்திருத்தம் செய்து மாற்றிக் கொள்ளத் துணிந்தும் இருக்கின்றது. உதாரண மாக, துருக்கி சீர்திருத்தமும் ஆப்கான்ஸ்தான் சீர்திருத்தமும், அச்சீர்திருத்தம் செய்த அவ்வரசாங் கங்களை இந்திய முகம்மதி யர்கள் ஆதரிப்பதும், ஆகியவைகளைக் கவனித்தால் அதன் பெருமை விளங்கும்.

மேலும் முகம்மதிய மதம் மிக்க சுயமரியாதை உணர்ச்சியுடையது என்றும் சொல்லுவோம். எப்படி என்றால், அது இனி உலகத்திற்கு கடவுள் அவதாரங்களோ, நபிமார்களோ, தீர்க்கதரிசி களோ வரக்கூடும் என்பதை ஒருக்காலும் ஒப்புக் கொள்ளுவதில்லை. மனிதனை மனிதன் வணங்கு வதையோ, அவன் காலில் விழுவதையோ, அதுசிறிதும் சம்மதிப்பதில்லை. இனியும் இதன் பெருமைகள் ஆனந்தம் உண்டு. இவ்வளவு பெருமைகளுக்கும் காரணம் என்னவென்றால், முன் சொன்னபடி இது சமீபகால சீர்திருத்த மதமானதாலும், முகம்மது நபி அவர்கள் நல்ல அனுபவமும், ஞானமும், தீர்க்க தரிசனமும், உறுதியும் கொண்டவரானதாலும், உலகத்தில் உள்ள மதங்களில் எல்லாம் சிறந்த மதம் என்று சொல்லத்தக்க தாயிருக்கின்றது.

இதற்கு நேர் விரோதமாக நமது மதம் என்பதில் உள்ள குறைகளை எடுத்துச்சொல்ல இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ள எனக்கு இஷ்டமில்லாத தால் அவற்றை மற்றொரு சமயம் சொல்லலாம் என்று இருக்கின்றேன். கடைசியாக, நான் இந்து முகம்மதிய சகோதரர் களுக்குச் சொல்லுவதென்ன வென்றால், மதத்தின் காரணமாக இந்து முஸ்லீம்களுக்குத் துவேஷம் சிறிதும் இருக்கக் கூடாது என்பதேயாகும்.

எக்காரணத்தை முன்னிட்டோ, மதங்கள் என்றாலே முதலாவது, மற்றொரு மதத்தினிடத்தில் துவேஷம் கொள்ளுவதே முக்கிய கடமையாயிருக் கின்றது. உதாரணமாக இந்துக்கள் என்பவர் முகம்மதியர்களை வெகு இழிவாய்க் கருதுவது எனக்குத் தெரியும். அதாவது முகம்மதியனைத் தொட்ட அளவுக்கு சரீரத்திலுள்ள தசையை அறுத்தெறிய வேண்டும் என்று இந்துக்கள் சொல்லிக் கொண்டிருந்தது எனக்குத் தெரியும். இப்போதும் துலுக்கர் என்றால் மிலேச்சர் என்று சமஸ்கிருதங்களிலும் அதைச் சார்ந்த தமிழ் அகராதிகளிலும் அர்த்தம் எழுதப்பட்டிருக் கின்றது. துலுக்க பாஷையைக் கூட தமிழ் பாஷை யைப் பார்ப்பனர்கள் சொல்லு வதைப்போலவே மிலேச்சபாஷை என்றே பார்ப்பன நிகண்டு களிலும் அகராதிகளிலும் இன்னமும் இருக்கின்றது.

இவ்வித துவேஷ உணர்ச்சி உள்ளவர்களிடம் முகம்மதியர்கள் எப்படி ஒற்றுமையாய் இருக்க முடியும்? ஆதலால் இந்துக்கள்தான் முதன் முதலாக முகம்மதியர்களிடம் சகோதர பாவம் காட்டி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திர மாக வேண்டும்.

கூட்டத்தில் ஒன்றாய் உட்காந் திருப்பதா

லேயே ஒற்றுமை இருக்கின்றது என்று நினைத்து விடக்கூடாது. இந்நாட்டில் உள்ள 8 கோடி முகம்மதியர்களை அலட்சியம் செய்தோ, அவர்கள் கூட்டுறவில்லாமலோ, நமது நாட்டிற்கு நல்லரசாட்சியை உண்டாக்கிவிடவோ திருப்தி கரமான வாழ்க்கையை ஏற்படுத்தவோ முடியவே முடியாதென்றே சொல்லுவேன். அன்றியும் அவர்களை இருந்த நாட்டைவிட்டுத் துரத்தி விட முடியாதென்றும் சொல்லுவேன். இந்த நாட்டி லுள்ள 8 கோடி முகம்மதியர்களின் பலமானது 16 கோடி இந்துக்களின் பலத்திற்குச் சமானமான தென்றுகூட சொல்லுவேன்.

எப்படியென்றால், இந்துக்களிடத்தில் முகம் மதியர்களுக்கு அவநம்பிக்கை இல்லாமலிருந் திருந்தால் இந்தியாவுக்கு ஜவாப்தாரியான ஆட்சி வெகு காலத்திற்கு முன்பே ஏற்பட்டு அனுபவித் துக் கொண்டிருக்குமென்பதில் சிறிதும் எனக்குச் சந்தேகமில்லை. இப்பொழுதும் நமது நாட்டில் தீண்டாதவர்கள் என்னும் ஆறரைக் கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் நாளைக்கு முகம்மதியர் களாகிவிட்டால் மறுநாளே இந்தியாவின் நன்மைக்கேற்ற அரசாங்கம் ஏற்பட்டுவிடும் என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

நிற்க, இந்தியாவுக்கு ஏதாவது ஒரு காலத்தில் பொறுப்பாட்சி ஏற்பட யோக்கியதை உண்டாகி விட்டது என்று சொல்லப்படும் காலம் வருமானால், அந்தக் காலத்தில் இந்தியாவில் 15 கோடி முகம்மதியர் களாவது இருப்பார்கள். ஏனெனில், அந்தப்படி 15 கோடி முகம்மதியர்கள் இருந்தால்தான் இந்தியாவுக்கும் பொறுப்பாட்சி அடைய யோக்கியதை வரக்கூடும் என்ப தாகவும் சொல்லுவேன்.

ஏனெனில் பொறுப்பாட்சி அடைவதற்கு விரோதமான கொள்கைகள் முகம்மதிய மதத்தில் கிடையவே கிடையாது என்பதுதான் நான் இவ் வளவு தூரம் எடுத்துச் சொன்னதன் தத்துவமாகும். அது போலவே முகம்மதியர்களும் கவனிக்க வேண்டிய விடயமும் உண்டு. முகம்மதியர்கள் இனி இந்தியாவை விட்டு வெளியேறிவிடலாம் என்றோ, அல்லது இந்துக்களை இந்தியாவில் இல்லாமல் இருக்கும்படி செய்யலாம் என்றோ கருத முடியவே முடியாது. எப்படியானாலும் இந்த நாட்டில் இருவர்களும் இருந்துதான் ஆக வேண்டும்.

பொதுவாக இந்தியாவுக்கு ஏற்பட்ட லாப நஷ்டத்தில் இருவர்களுக்கும் பங்கு உண்டே தவிர முகம்மதியர்கள் எவ்விதத்திலும் விலக்கப் பட்டவர்கள் அல்ல. நாட்டின் நன்மையைக் கருதி இந்துக்களுடன் ஒத்துழைத்துத் தீர வேண்டிய அவசியம் அவர்களுக்கும் உண்டு. கூடிய சீக்கிரத் தில் இந்துக்கள் என்பவர்களுக்குள் இருக்கும் அநேக குறைபாடுகள் விலகி விடக் கூடும் என்றே நினைக்கின்றேன். அப்பொழுது இந்துக்கள் முஸ்லீம்கள் என்கின்ற வித்தியாசம் இவ்வளவு காணப்படமாட்டாது. இந்து யார்? முஸ்லீம் யார்? என்று சுலபத்தில் பிரித்துக் காண முடியாத அளவு ஒற்றுமை ஏற்படப் போகின்றது என்பதில் எனக்கு மிக்க நம்பிக்கை இருக்கின்றது. மதத்தின் பேரால் உள்ள வெளி வேடங்கள் எல்லாம் மறைந்து மனிதவர்க்கத்தின் நன்மைக்கு ஏற்ற அவசியமான ஒழுக்கங்களுடன் மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாய்க் காணப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றேன்

ஆதலால் முகம்மதிய சகோதரர்கள் மதத்தை விட, தேசத்தைவிட முதலாவது நாம் எல்லோரும் மனிதர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மனித சமூகத்தின் நன்மைக்கு ஏற்ற மார்க்கத்தில் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மூடப்பழக்க வழக்கங்களையும் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விரோதமானவைகளையும் உதறித்தள்ள மனிதர்கள் என்பவர்கள் எல்லாம் தயாராயிருக்க வேண்டும். கொள்கைகள்தான் மதமே ஒழிய, சடங்குகள், வேடங்கள் மதம் அல்ல என்கின்ற உணர்ச்சி தாராளமாய் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

இவைகளே இப்போது எனக்குத் தோன்றிய கருத்துக்களாகும். இவற்றை ஒளிக்காமல் உங்கள் முன்னிலையில் சொல்லி விட்டேன். ஏதாவது தவறுதல்கள் இருந்தால் அதை தள்ளிவிட்டு தங்களுக்கு சரி என்று பட்டதை மாத்திரம் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

குறிப்பு : 18.08.1929 ஆம் நாள் சத்தியமங் கலத்தில் நடைபெற்ற முகம்மது நபி பிறந்தநாள் விழா சொற்பொழிவு. குடி அரசு - சொற்பொழிவு - 25.08.1929

# "இது ஒரு காணான் தேசத்துப் பெண்ணின் கனவு"

காணான் தேசமாக
எங்களைக் கண்டவர்களே!
எங்கள் கனவையும் தான்
கொஞ்சம் கேளுங்களேன்!
அது கானல் நீராவதையும் தான்
பாருங்களேன்!



காலையில் எழுந்தா கணவனும் குழந்தையும்
கண் முன்ன இருக்கனும்!

காஷ்மீரின் குளிருக்கு காப்பி தண்ணீ குடிக்கனும்
பரபரப்பா ரெடியாக்கி பள்ளிக்கூடம் கிளப்பனும்
சலாம் சொல்லி கணவனையும் வேலைக்கு அனுப்பனும்

மதிய உணவுக்கு ரொட்டியும் தாலும் செஞ்சு
மத்தியில எடுத்து வெச்சு மக்களுக்குக் கொடுக்கனும்

பாங்கு சத்தம் கேட்டா வெளியில
தொழுக ஓடிப் போகனும்
பாங்கு சத்தம் கேட்டா -
வெளியே ஓடிப் போகனும்
தொலைஞ்சும் கிளைஞ்சும் போகாம
வீட்டுக்கே திரும்பனும்
எங்களுக்கு போரடிப்பதே கிடையாது
போர் மட்டும் தான்

பொன்னும் பொருளும் வேணாமுங்க
புதுப் புடவைக்கெல்லாம் ஆசையே இல்லை
Meesho - Amazon - Azio கலர் துணி எடுக்க,
களோபரம் இல்லை
போட்டிருக்கும் துணி சிகப்பாய்
மாறாமல் இருந்தாலே போதும்...

காட்டு மரமா நாங்கள் கோடாரி கொண்டு சாய்க்க
சாலையோர பூவோ நீங்கள் சாக்கடையில் வீழ்க்க
கஷ்மீரின் பெண்களடா! கஷ்மீரின் பெண்களடா!
நீதி கேட்டுப் போனா மானம் போகும் சாமி
தேமுதம்மா பாவம் தேவதைகளின் பூமி

ஆஸ்திக்கும் தான் எனக்கு மகனும் இல்லை பாரு
எங்கள் கற்புக்கும் தான் வேறு மாத்து உண்டா கூறு...

இந்த அபலைப் பெண்கள் தோள் சாய
கொண்டவன் இருந்தால் போதும்...

ஆஸ்திக்குன்னும் அழகுக்குன்னும் குழந்தை
குழந்தைகளை விட்டு வைத்தார்களா ஏதும்..!

3 வேளை பசிக்கு 2 வேளை சோறும்
உலகம் தெரிய படிப்பும் இளமையோட துடிப்பும்
முதுமை பட்டு முடங்கி மூச்சு நின்னாலே போதும்
இது பெரியா கனவா???
ஏன் கானல் நீராச்சு இறைவா!!!

– உம்மு ஆதம்



# காான்ஸ்டன்டின் நோபிள் வெற்றி

## நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு

**நாடக வடிவில்**

**நபி (ஸல்) அவர்கள் ரோமானியர்களின் தலைநகரம் கான்ஸ்டன்டின் நோபிளை முஸ்லிம்கள் வெற்றி கொள்வார்கள் என முன்னறிவிப்பு செய்தார்கள். இந்நகரம் இன்று இஸ்தான்புல் என அழைக்கப்படுகிறது. இது துருக்கி நாட்டில் அமைந்துள்ளது.**

இந்நகரத்தை கி.பி. 1453 மே மாதம் 29 அன்று 22 வயதே நிரம்பிய உஸ்மானிய (Ottoman) சுல்தான் மெஹ்மூத்-II, (Mehmet-II) வெற்றி கொண்டார்.

கிட்டத்தட்ட 2 மாத முற்றுமைக்குப் பின், உஸ்மானிய படைகளின் கடும் உயிர் சேதத்திற்குப் பின் வெற்றி கொள்ளப்பட்டது. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் பாலஸ்தீன் பூமியை ஆண்ட ரோமானிய வம்சத்தின் பைசாந்திய பேரரசின் தலைநகரமாக விளங்கியது கான்ஸ்டன்டின் நோபிள்.

இதை வென்று அவ்வூருக்கு சென்ற கட்டுகோப்பான உஸ்மானிய (Ottoman) படை சாமானிய, பொதுமக்களின் எதிர்ப்பை சந்திக்க வேண்டி வந்தது. அம்மக்கள் வீட்டில் பயன்படுத்தும் எளிய பொருள்களை ஆயுதங்களாக்கி எதிர்ப்பு காட்டினார்.

மேலும், சிலர் பிரம்மாண்டமான வழிபாட்டுத்தலமான "ஹகியா சோஃபியா"வில் அச்சத்துடன் தஞ்சமடைந்தனர்.

இவ்விரு நிகழ்வையும் சுல்தான் மெஹ்மத்-II எவ்வாறு எதிர்கொண்டார், தீர்வு கண்டார் என்பதை வரலாற்று ஆதார பின்னணி மற்றும் இஸ்லாமிய சட்டம், கலாச்சாரம், பண்பாட்டின் ஊடே "இவ்வாறுதான் சுல்தான் அவையில் இதற்கான ஆலோசனை நடந்திருக்க வாய்ப்பு உண்டு" என்ற எதார்த்தத்தை கொண்டு நாடகமாக தரப்பட்டுள்ளது.

**காட்சி-1**

கோட்டை சுவர்களை தாண்டி வெற்றிகரமான உஸ்மானிய சுல்தான் மெஹ்மத்-IIன் படைகள் கான்ஸ்டன்டின் நோபிள் நகரத்திற்குள் பிரவேசித்தல். இப்படைகள் அந்நகர பொதுமக்களின் கடும் எதிர்ப்பை சந்தித்தல்.

**படைத்தளபதிகள் :** அரசே, கான்ஸ்டன்டின் நோபிள் நகர மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து கடும் எதிர்ப்பை காட்டுகின்றனர். கற்கள், கொதிக்கும் எண்ணெய், தீகங்குகள் போன்றவைகளை

கொண்டு நம் படை வீரர்களை தாக்குகின்றனர்.

**மெஹ்மூத்-II** : அப்படியா! இதை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான் ஊருக்குள் அமைதி ஏற்படும். வாருங்கள். ஆலோசனை செய்வோம். முக்கியமாக, நமது இஸ்லாமிய சட்ட நிபுணர்களை மௌலவிகளான மதகுருமார்களையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்.

அரசரின் போர்க் கூடாரத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

**படைத்தளபதி-I** : **ஜகனாஸ் பாஷா** (இவர் கிறிஸ்த்துவத்திலிருந்து இஸ்லாத்தை தன் மத நம்பிக்கையாக ஏற்றவர்)

அரசே! இந்நகரத்தை நாம் எரித்து விடுவோம். ஏனெனில் இவ்வாறு எரித்துப் பொசுக்குவது இந்நகரத்திற்கு புதிதல்ல. கத்தோலிக்க சிலுவை படையும், ரோமானிய அரசர்களும் இவ்வூரை எரித்துத் தண்டித்துள்ளனர்.

**படைத்தளபதி-II** : **ஐஷக் பாஷா** (இவரும் இஸ்லாத்தை ஏற்ற கிறிஸ்தவர்)

ஆம் சுல்தான்! இதனால் நமக்கான எதிர்ப்பு சடுதியில் நின்றுவிடும். அதே நேரத்தில் நமக்கு எதிராக ஜீசஸ், நாடுகளை அணிதிரட்டும் கிறிஸ்தவ மத தலைமையிலான வாடிகன் போப்புக்கும் எச்சரிக்கையாக இருக்கும்.

**சுல்தான் மெஹ்மூத்-II** : இவ்வாறு செய்வது பாவச் செயல். கிறிஸ்தவர்களை பின்பற்றுவது நமது வேதத்தின் அறிவுரைபடி தவறாகும். வழி தவறியவர்களை பின்பற்றிட முடியாதல்லவா!

பின் மௌலவியை நோக்கி, மௌலானா தங்களின் மேலான ஆலோசனையை வழங்குங் கள். இஸ்லாம் என்றால் பிறர் நலன் நாடுவதே என மனித குலத்தின் இறுதி தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறி சென்றுள்ளார்கள்.

இவ்வாறான இக்கட்டான நேரத்தில் இவ்வூரையம், மக்களையும் காக்க வேண்டும். அதே சமயத்தில் நமது படை வீரர்களையும், நம்மையும் காத்துக்கொள்ள வேண்டும்.

**மௌலவி-I : அக்ஷம்செட்டின் –** ஆம் சுல்தான்! சரியாக சொன்னீர்கள். படைத் தளபதிகள் அவர்களுக்கே உரிய ராணுவ யுக்தியிலான ஆலோசனையை அளித்துள்ளார்கள். நாங்களோ, நமது மத நம்பிக்கை கூறும் "மனிதத்"தை கூறுவோம். தாங்கள் நம்மிரு பிரிவினரின் ஆலோசனைகளையும் கணக்கிலெடுத்து முடிவு காண வேண்டும்.

**சுல்தான் :** ஆம், நான் ராணுவ முடிவுக்கும், நாட்டு மக்களை நிர்வாகம் செய்யும் ஆட்சி ஒழுங்கு முறைக்கும் பொறுப்பானவன்.

**மௌலவி-II : கவுஷம்செட்டின் –** இந்த அகிலத்தையும், அதில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஒரே இறைவன்தான் படைத்தான். அதில் மனிதர்களையும் அவன்தான் படைத்தான். மனிதர்கள் அறியாமையால் மதங்களால் பிரிந்து கிடந்தாலும், அந்த ஓர் இறைவனே அனைவரையும் படைத்தான். இதை தான் முஸ்லிம்களாகிய நாம் நம்பிக்கை கொண்டு வாழ்கிறோம். இந்த இறைவன் அரபி மொழியில் "அல்லாஹ்" என்று அழைக்கிறோம். இவ்வாறு அனைத்து மொழிகளும் இறைவனை குறிப்பிட வார்த்தையை கொண்டுள்ளன. ஆனால், மற்ற சமூகங்களோ இந்த உண்மையை உணராமல் நம்மை எதிர்க்கின்றனர். அவர்களையும் படைத்த இறைவனைதான் நாம் வணங்கி வருகிறோம்.

ஆதலால் அனைவரையும் படைத்த அல்லாஹ்வின் இறுதி வேதமே மனிதர்களுக்கான அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு தருகிறது.

**மௌலவி-I** : காலங்காலமாக, நகரங்கள் வெற்றி கொள்ளப்படும்போது, அந்நகரங்களின் எதிர்ப்பை முடிவுக்கு கொண்டுவர ஜனங்களை வெட்டி சாய்ப்பதும், நகரத்தை எரிப்பதும் நடந்தேறி வருகிறது.

இப்படியான சூழல் இங்கு நடந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் இவ்வாலோசனை கூட்டத்தை கூட்டியுள்ளீர்கள்.

இது ஒரு இக்கட்டான பிரச்சினைதான். நமது நபி (ஸல்) அவர்கள்,

**"மண்ணில் உள்ளவர்களை நேசியுங்கள். விண்ணில் உள்ளவன் உங்களை நேசிப்பான்" என்றார்கள். (திர்மிதி)**

அதுபோல நமது திருமறைக்குர்ஆன்,

**"எவர் ஒருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழவைத்தோரை போலாவார்." என்கிறது. (5:32)**

**"அவர்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாத வற்றை ஏசாதீர்கள்" என்றும் கூறுகிறது. (6:108)**

**"அவர்கள் (இஸ்லாமிய அரசில் உள்ள முஸ்லிம் அல்லாத குடிமக்கள்) நம் அடைக் கலத்தில் உள்ளவர்கள். எனவே அவர்களின் உயிர் நம் உயிர் போன்றது. அவர்களின் சொத்து நம் சொத்து போன்றது" என நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் உறுதிபட கூறியுள்ளார்கள். (அபூதாவூத்)**

*ஆக, இவ்வூர் மக்கள் நம்மவர்கள். நம் மதத்தை சாராதவர்கள் என்பதால் துன்புறுத்த முடியாது. பலஹீனமானவர்களிடம் அன்பும், இரக்கமும் காட்ட நமது வேதம் நம்மை பணிக்கிறது.*

*இம்மக்கள் போர் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்கள் அல்ல. சாமானிய பொதுமக்கள். இதில் பெண்களும், குழந்தைகளும், போரில் கலந்து கொள்ள முடியாத ஆண்களும், முதியவர்களும், நோயாளிகளும் உள்ளனர். இப்பொழுது இவர்கள் காட்டும் எதிர்ப்பு "அவர்கள் தங்கள் பூமியின் மீதான பினைப்பின்" காரணமாகவே காட்டு கின்றனர்.*

*ஆகவே, மன்னிப்பு வழங்கலாம். அப்படி ஒன்று நடந்தால் அவர்களின் உள்ளங்கள் வெற்றி கொள்ளப்படலாம். இதுவே எங்களது ஃபத்வா (தீர்ப்பு)*

**படைத்தளபதிகள் :** *(ஒரே குரலில் எதிர்ப்பு காட்டுகின்றனர்)*

*ஜெருசலத்தை மீட்டெடுத்தார் சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி. சரணடைந்த அவ்வூர் வெள்ளை கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு மன்னிப்பளித்தார். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றியதோடு, அவ்வூரை விட்டு வெளி யேறிய கிறிஸ்தவர்களுக்கு பொன்னும், பொருளும் கொடுத்து அவர்களின் பயண சிரமத்தை எளி தாக்கினார். பெருந்தன்மையைக் காட்டினார்.*

*பின்பு என்ன நடந்தது என்பதை வரலாறு பேசுகிறது. வெளியேறிய வெள்ளை கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் படைகளும், பொதுமக்களும் அருகில் இருந்த டைர் (Tyre) என்ற கிறிஸ்தவ ஆட்சி பகுதியில் குடியேறினர். பெரும்படையாக அணி திரண்டனர். சுல்தான் சலாஹுத்தீன் மன்னிப்பையும், பெருந்தன்மையையும் அவருடைய ஏமாளித்தனத்தின் வெளிப்பாடாக கருதினர். இதை துருப்புச்சீட்டாக பயன்படுத்தி ஜெருசலம் அரசுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் விடுத்தனர்.*

*கத்தோலிக்கர்களுக்கு நன்றி விசுவாசம் என எதுவும் இல்லை. இதனால் அக்கா நகரத்தை இழந்தார் சலாவுத்தீன்.*

*அக்கா நகரம் சிலுவை படையால் முற்றுகை யிடப்பட்டது. இது இரண்டு வருடங்களாக தொடர்ந்தது. அந்நகரத்தின் கோட்டைக்குள் இருந்த சலாஹுத்தீன் படைகளும், பொதுமக் களும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டனர். பிறகு அக்கா நகரத்தை சிலுவையிடம் ஒப்படைத்து விட்டு வெளியேற சமாதான உடன்படிக்கை அக்கா நகர முஸ்லிம்கள் வேண்டினர்.*

*இதற்கு பகரமாக பாதுகாப்பாக பெண்களும், குழந்தைகளும், முதியோர்களும், படை வீரர்களும் மொத்த மக்களும் பாதுகாப்பாக வெளியேற சிலுவைபடையிடம் வேண்டி நின்றனர் முஸ்லிம்கள். அதன் பிறகு அக்கா நகரத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என முஸ்லிம்கள் தரப்பில் அதன்படைத்தளபதி பேச்சுவார்த்தை நடத்தினர்.*

*இப்பேச்சுவார்த்தையில் ஜெருசலத்தின் அனைத்து கிறிஸ்தவர்களும், அவர்களின் படை வீரர்கள் உட்பட மன்னிக்கப்பட்டு பாதுகாப்பாக வெளியேற முஸ்லிம்கள் செய்த உதவியை கோடிட்டுக் காட்டி அவ்வாறே இப்பொழுது கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிடம் நடந்துகொள்ள கோரிக்கை வைக்கப்பட்டது.*

*நயவஞ்சகத்துடன் நடந்துகொண்டது சிலுவைப்படை. முஸ்லிம்களின் கோரிக்கையை ஏற்பதாக நம்பவைத்து, உறுதி கொடுத்த சிலுவைப் படையினர் அக்கா நகர கோட்டை கதவுகள் திறந்தவுடன் உள்ளே சென்றனர்.*

*முதல் சிலுவை போரில் ஜெருசலத்தை ஆக்கிரமித்த போப்பின் சிலுவைப்படை எவ்வாறு ரத்தக் குளியலுடன் கைப்பற்றியதோ, அதே போன்று அக்கா நகரத்தில் படுகொலை செய்தனர். இரக்கம் காட்டவில்லை. இத்தனைக்கும் ஜெருசலம் சலாஹுத்தீனால் ரத்தமின்றி கைப்பற்றிய வருடத் திற்கும், அக்கா நகர முஸ்லிம் படுகொலைக்கும் தோராயமாக வெறும் 2 வருடங்கள்தான் வித்தி யாசம். அதிக காலம் எடுக்கவில்லை. அதே தலை முறை மன்னிப்பை பெற்று, அதே கிறிஸ்தவ*



தலைமுறைதான் அக்கா நகரில் முஸ்லிம்களின் படுகொலையை நிகழ்த்தியது. போர் தர்மங்களை மதிக்கவில்லை அவர்கள்.

சலாஹூத்தீனின் பெருந்தன்மைக்கு காரண மான திருக்குர்ஆனின் போதனைகளை நிராகரிப் பவர்கள் இந்த வழிகெட்ட கிறிஸ்தவர்கள். அவர்களின் வேதம் அன்பையும், இரக்கத்தையும் போதனை செய்வதாக கூறிக்கொண்டே, இப் பெரும் படுபாதகக் கொலைகளை செய்தனர். சமாதானத்தை மதிக்கவில்லை.

பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், படை வீரர்கள் என அனைவரும் நிராயுதபாணிகளாக் கப்பட்டு வெட்டி சாய்க்கப்பட்டனர். இந்த பைபிளின் வாரிசுகள் ரத்தக் குளியல் வரலாற் றுக்குச் சொந்தக்காரர்கள்.

ஆகவே, இவர்களை அவர்களின் வாழ்வில் பண்பாடு, வழிமுறைகளை கொண்டே தண்டிக்க வேண்டும். இங்கு குர்ஆனின் வழிகாட்டுதல் இவர்களுக்கு பொருந்தாது.

மேலும் கான்ஸ்டன்டின் நோபிள் தண்டிக்கப் படுவது புதிதல்ல. சுமார் 200 வருடங்களுக்கு முன் இதே கத்தோலிக்க படை கான்ஸ்டன்டின் நோபிளை தாக்கி கொள்ளை அடித்தனர். ஹகியா சோஃபியா தேவலாயமும் விட்டுவிடப் படவில்லை. பின்பு நகரின் ஒரு பெரும் பகுதியை எரித்து தீக்கிரையாக்கினர்.

**மெஹ்மத்-II** : (கையை உயர்த்தி நிறுத்தச் சொல்லி சைகளை காட்டிபடி)

படைத்தளபதிகளே! நீங்கள் உஸ்மானிய ஆட்சிக்கு கிடைத்த பொக்கிஷங்கள். ராணுவ நியதியின்படி தாங்கள் வழங்கிய ஆலோசனை எனக்குள் எச்சரிக்கை மணியை அடிக்கிறது.

ஆனாலும் இந்நகர மக்களையும், நகரத்தை யும் அழித்து உஸ்மானிய சுல்தான் ஆட்சியின் பலத்தை காட்ட வேண்டிய அவசியமில்லை.

வாடிகன் மத தலைமையால் அணிதிரட்டப் பட்ட அரசுகளின் தொடர் துரோகங்கள் என் தந்தையையும், என்னையும் மிகவும் தொந்தரவு செய்துள்ளது. நாம் நமது மக்களின் பாதுகாக் கவும், நிலத்தை பாதுகாக்கவும் இங்கு போர் செய்து பாதுகாப்பை உறுதி செய்துள்ளோம்.

இந்நகரம் மூன்று புறம் கடலால் சூழப் பட்டுள்ளது. இவர்களால் எங்கும் தப்பிக்க முடியாது. இதன் மக்கள் தொகை மிக சொற்பம். அதிகாரிகளையும், அவர்களையும் தூண்டிவிட்ட வாடிகன் போப்பின் ஆட்களையும் தண்டிப்பதை விட்டுவிட்டு, இவர்களின் மீதான கோபத்தை, கான்ஸ்டன்டின் நோபிள் நகர பொதுஜனத்தின் மீது நாம் காட்ட முடியாது.

கிறிஸ்தவர்கள் வழிகேடர்கள் என்பதை நாம் ஏற்றுள்ளோம். அவர்களின் போர் தர்ம நெறியை நாம் அரங்கேற்ற முடியுமா? அதற்கு ராஜதந்திரம் அனுமதிக்கத்தான் செய்கிறது.

இருப்பினும் சொற்ப தொகையினரான இவ்வூர் மக்கள், கடலால் சூழப்பட்ட இம்மக்கள் தப்பித்து நமக்கு எதிராக அணிதிரள வாய்ப் பில்லை என்பதையும் நாம் அறிவோம்.

ஆதலால் நான் இதுவரை கைது செய்த கான்ஸ்டன்டின் நோபிள் பைசாந்திய அரசின் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகளை மன்னிக்கிறேன். அவர்களுக்கு அன்பளிப்புகளை கொடுத்து நம்பிக்கை விதைக்கப் போகிறேன். (Ai) இதை நடைமுறைப்படுத்தும்படி உங்களுக்கு உத்தரவிடுகிறேன்.

மன்னிக்கப்பட்ட படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகளை நகர தெருக்களுக்கு அனுப்பி உஸ்மானிய சுல்தானின் பொதுமன்னிப்பை அறிவிக்கச் செய்யுங்கள்.

தங்கள் படைத்தளபதிகளின் வார்த்தையை இவ்வூர் மக்கள் மதிப்பார்கள். நம்பிக்கை கொள் வார்கள் என எதிர்பார்க்கிறேன். இதனால் மக்கள் எதிர்ப்பு நிறுத்தப்படலாம். இதை உடனடியாக செய்து முடியுங்கள் தளபதிகளே!

**படைத்தளபதிகள் மற்றும் மதகுருக்கள் :** ஆகட்டும் மன்னா. தங்கள் மேலான உத்தரவை நிறைவேறுகிறோம்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டன்டின் நோபிள் படைத்தளபதிகள் மற்றும் அதிகாரிகள் மன்னிக் கப்பட்டு, பரிசு பொருட்கள் கொடுக்கப்பட்டு கண்ணியப்படுத்தப்பட்டனர். அவர்களின் இனமான இவ்வூர் மக்களும் இவ்வாறே கண்ணி யத்தை அடைய கான்ஸ்டன்டின் நோபிள் படைத் தளபதிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்களும் ஆவலுடன் நகர வீதிகளில் சுல்தானின் பொதுமன்னிப்பு அறிவிப்பை அறிவித்தனர்.

இந்த மனிதாபிமான செயலால் கிரேக்க கிறிஸ்தவ பொது ஜனம் ஆச்சரியத்தில் மூழ்கியது. எதிர்ப்பை நிறுத்தினர். சுல்தானின் படைகளுடன் நேசமாக பழகினர்.

இருப்பினும் ஹகியா சோஃபியா என்ற பிரமாண்டமான தேவாலயத்தில் தஞ்சமடைந்த பெண்களும், குழந்தைகளும் காயப்பட்ட வீரர்களும், அக்கட்டிடத்தை விட்டு வெளியே மறுத்துவிட்டனர்.

**காட்சி-2**

**படைத்தளபதி-I** : மன்னா! தாங்கள் கூறியதை போன்று, மன்னிப்பு வழங்கப்பட்டதால், இவ்வூர் மக்கள் எதிர்ப்பை கைவிட்டு நம்மை வரவேற் கிறார்கள். நகரத்தின் பல பகுதிகளில் அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் சில பகுதிகள் வெகு விரைவில் அமைதி பெறும்.

**மெஹ்மத்-II** : நல்லது, நம்முடைய காரியங்களில் இறை பொருத்தத்தை நாடுவோம்.

**படைத்தளபதி-II** : மன்னா ! நகரில் எதிர்ப்பு குறைந்து சகஜ நிலைக்கு திரும்பினாலும், ஹகியா சோஃபியா தேவாலயம் உட்புறமாக பூட்டப் பட்டுள்ளது. அங்கு மக்களுடன் படை வீரர் களும் பதுங்கியுள்ளனர் என்பதாக செய்திகள் வருகின்றன. இது ஆபத்தில் முடியலாம்.

**மெஹ்மூத்-II** : அங்கேயும் மன்னிப்பு செய்தியை அறிவியுங்கள் அனைத்தும் நலமாக முடியும்.

**படைத்தளபதி-II** அறிவிப்பு செய்தாகிவிட்டது மன்னா. ஆனால், பதுங்கியுள்ளவர்கள் தேவலா யத்தின் கதவை திறக்கவில்லை. மறுப்பதாக தெரிகிறது.

**மெஹ்மூத்-II** : நானே வருகிறேன்.

குதிரையின் மீதேறி தேவலாயத்திற்கு விரைகிறார் மன்னர். மீண்டும் பொது மன்னிப்பு அறிவிக்கப்படுகிறது. தேவாலயத்திலிருந்து எந்த பதிலும் இல்லை. சுல்தான் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டுகிறார்.

**படைத்தளபதி-II** : தேவாலயத்தில் உள்ளோர் சரணடையவில்லை என்றால் காலங்காலமாக பின்பற்றப்படும் போர் மரபு பின்பற்றப்பட வேண்டும். அதன்படி தேவாலயம் தீக்கிரை யாக்கப்பட வேண்டும். பிறகு இக்கட்டிடம் வரலாற்றில் இடம் பெறப்போவதில்லை. காலப் போக்கில் மக்கள் மறந்திடுவார்கள்.

**மௌலவி-I** : எந்த ஒரு மத நம்பிக்கை யாளர்களும், தங்களுடைய கடைசி புகலிடமாக ஆக்கிக்கொள்வது வழிபாட்டுத்தலங்களைதான். இந்த வழிபாட்டுத்தலங்கள் அவர்களுக்கு மன அமைதியை தருகின்றன. அது புனித தலமாக

*இல்லாமல் இருந்தாலும் சரியே.*

*காலங்காலமாக நடைமுறையில் உள்ள வழக்கத்தைத் தான் இந்நரக கிறிஸ்தவ மக்கள் பின்பற்றியுள்ளனர்.*

*நமது நம்பிக்கை வேறாக இருக்கலாம். ஆனாலும், மனித நாகரிகத்தில் ஆன்மிகத்திற்கு முக்கியத்துவம் உண்டு. ஆன்மிக இடங்களுக்கு பொருத்தமான காரணமின்றி சேதாரம் விளை விப்பது மனித நாகரிகத்திற்கு ஆபத்தை விளை விப்பதாகும். நாம் நிதானமாக தான் முடிவெடுக்க வேண்டும். ஏனெனில் பதுங்கியுள்ளதாக நாம் கருதும் அவர்கள், தேவாலயத்திலிருந்து நம்மை தாக்கவில்லை. அப்படியே தாக்கினாலும் கால அவகாசம் கொடுத்தே சரணடைய செய்ய வேண் டும். அவர்களின் நிலை எதுவொன்றாக இருந் தாலும் கால அவகாசம் கொடுத்தால் நல்லது.*

**மெஹ்மூத்-II** : *மதகுருவே! நாம் கால அவகா சத்தை கைகொள்ளல் முடியாது. காலதாமதம் பல சங்கடங்களையும், குழப்பங்களையும், இழப்பு களையும் ஏற்படுத்தலாம். நாம் துரிதமாக நடவடிக்கை எடுத்து அமைதி நில செய்திட வேண்டும்.*

**மௌலவி-II**: *மன்னா! இப்பொழுது அல்லாஹ் வின் கருணைகொண்டு திருக்குர்ஆனின் வசனம் ஒன்று நினைவில் வருகிறது.*

*".... மனிதர்களில் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருப்பின் ஆசிரமங்களும், கிறிஸ்தவ ஆலயங்களும், யூத கோவில்களும், அல்லாஹ்வின் திருநாமம் அதிகமதிகம் கூறப் படும் பள்ளிவாசல்களும் இடிக்கப்பட்டுப் போயி ருக்கும். தனக்கு எவன் உதவி செய்கிறானோ, அவனுக்கு திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான்..."*

**நெருப்பால் தண்டனை வழங்குவதற்கு நெருப்பின் அதிபதியை தவிர (அல்லாஹ்வைத் தவிர) வேறு யாருக்கும் உரிமை கிடையாது. (அபூதாவூத்)**

**மடங்களில் உள்ள துறவிகளை கொல்லா தீர்கள். வணக்கஸ்தலங்களில் உள்ள மக்களைக் கொள்ளாதீர்கள். (அபூதாவூத்)**

*ஆக, தாங்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.*

**மெஹ்மூத்-II** : *அல்ஹம்துலில்லாஹ்! எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே விடை கிடைத்து விட்டது.*

*படைத்தளபதிகளே! நம்முடைய முஅத்தீன் யார்? அவரை அழைத்து வாருங்கள். நான் நமது மதகுரு நினைவுபடுத்திய "வழிபாட்டுத்தலத்தின் விதியை" கூறும் புனித குர்ஆனின் அறிவுத்தல்படி உத்திரவிட வேண்டும்.*

*முஅத்தின் அழைத்து வரப்படுகிறார்.*

**முஅத்தின் :** *மன்னா! அஸ்ஸலாமு அலைக்கும்,*

**மெஹ்மூத்-II** : *வஅலைக்கும் அஸ்ஸலாம். தாங்கள் வரவு நல்வரவாகட்டும். உஸ்மானிய ஆட்சிக்கு நல்வரவாகட்டும்.*

**முஅத்தின் :** *உத்தரவிடுங்கள் அரசே! ஆர்வத் துடன் காத்திருக்கிறேன்.*

**மெஹ்மூத்-II** : *முஅத்தீனே! ஹகியா சோஃபியா கிறிஸ்தவ ஆலயத்தில் பொதுமக்களும், படை வீரர்களும் பதுங்கியுள்ளதாக அறிகிறேன். அது அச்சத்தினாலா அல்லது நம்மை அச்சுறுத்தவா என்பதை அறியமுடியவில்லை. காரணம் எதுவா கினும் பொதுமன்னிப்பு செய்தி அறிவித்தும், அவர்கள் தேவாலயத்திலிருந்து வெளியே வரவில்லை. ஆதலால் அவர்களின் உயிர், உடை மைகள் காக்கப்படும் என்ற நமது உறுதி மொழியில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட, சில நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.*

*நம் படைத்தளபதிகள் தங்களை பாதுகாப்ப தோடு அத்தேவாலயத்திற்கு அழைத்துச் செல்வார்கள். தாங்கள் அத்தேவாலயத்திலிருந்து இஸ்லாமிய தொழுகைக்கான "பாங்கோசை" கொடுக்க வேண்டும். இதனால் நமது பரிசுத்த எண்ணம் வெற்றி பெறலாம். இம்மக்கள் நமது மத அனுஷ்டானங்களை நன்கறிந்தவர்கள். நமது மதத்தின் பண்பாட்டை அறிந்த இவர்கள், நம்மை பற்றி சந்தேகம் கொண்டிருக்கலாம்.*

*இந்த "பாங்கோசை" நமது வழிபாட்டு தலங்களில் கொடுக்கப்படுவது. இதை கேட்டும் அம்மக்கள் ஹகியா சோஃபியா, பள்ளிவாசலாக மாறிவிட்டதை புரிந்துகொண்டு, தேவாலயத் தின் கதவுகள் திறக்கப்படலாம். ஏனெனில் இச்செயல் பள்ளிவாசலில் படுகொலைகள் நடக் காது என்பதை உணர்த்தக் கூடியது. முஸ்லிம்கள் மதிக்கும் ஒரு இடத்தில் முஸ்லிம்கள் படுகொலை*

செய்யமாட்டார்கள் என்ற உணர்வால் அவர்கள் சரணடையலாம் அல்லவா!

**சொல்லுங்கள், பாங்கோசை கொடுங்கள்.**

முஅத்தீன் பாங்கோசை கொடுத்துக் முடிக்கிறார். சில நிமிடங்களில் தேவாலயத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. சுல்தான் உள்ளே சென்றார். அவர்களை காண்கிறார். அம்மக்கள் அச்சத்தால்தான் தஞ்சமடைந்துள்ளனர் என்பதை அம்மக்களின் முகபாவனைகளால் புரிந்து கொள்கிறார். அவர்கள் பாய்வதற்குப் பதுங்க வில்லை என்பதை அறிந்து கொண்டார். அம்மக் களிடம் மனம்விட்டு பேசுகிறார். அவர்களுடைய உயிர், உடைமை பாதுகாக்கப்படும் என்றும், வாடிகனின் தூண்டுதலால் ஒழிக்கப்பட்ட ஆர்த் தோடக்ஸ் கிறிஸ்தவ மத தலைமை உயிர்ப்பிக் கப்படும் என்றும் வாக்குறுதியளிக்கிறார். தஞ்ச மடைந்த மக்கள் நம்பிக்கைப் பெற்றனர். மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். தேவாலயத்திலிருந்து வெளியேறினர். இப்பொழுது கான்ஸ்டன்டின் நோபிள் சுல்தானின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**- ஜாஹிர் உசேன, மதுரை.**


*வரப்பெற்றோம்...*













**Seermai Publication**
No. 37/13, Pooram Prakasam Road,
Balaji Nagar, Royapettah, Chennai 600-014.
E-mail: seermainoolveli@gmail.com
Phone : +91 80721 23326
Website: www.seermai.com.



# மூவர்ணக்கொடி பிரச்சாரமும் கடந்த கால குறிப்புகளும்

அன்றைய அரசாங்கத்தின் வழி காட்டிகள் மூவர்ணம் பொருந்திய தேசியக்கொடியை இன்றுவரை எதிர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அன்றைய தினத்தின் இந்தியாவின் ஆட்சியாளர்கள் அதன் உடனிருப்பவர்கள், அரசாங்கத்தில் உள்ளவர்கள் இந்திய மூவர்ணக் கொடியின் மீது திடீரென்று அபரிமிதமான அன்பை வளர்த்துக் கொண்டனர். "ஹர் கர் திரங்கா" (ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக் கொடி)" பிரச்சாரத்தின் கீழ், 24 கோடி வீட்டில் நாடு முழுவதும் 75-வது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 13 முதல் 15 வரை விழாவை கொண்டாடினர் என்று ஊடக அறிக்கைகள் கூறியிருக்கிறது.

ஆனால் இதற்கு வாழ்த்து தெரிவிக்காத வகையில் ஆர்.எஸ்.எஸ் சட்டமன்ற நடப்புகள் தற்காலிக நிறுத்தத்தை செய்துள்ளது. ராஷ்டிரிய சுயம்சேவாக் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்), இது தொடங்கிய 1925-ஆம் ஆண்டிலிருந்து மூவர்ணக் கொடியை இந்திய தேசியக்கொடியாக ஏற்க இன்றுவரை மறுக்கின்றது. V.D.சாவர்க்கர் ஆவணக் காப்பகங்களை பின்பற்றி நடக்கக்கூடிய இந்துத் துவா சகோதரர்கள் நமது தேசிய கொடியின்மீது எல்லையில்லா வெறுப்பை சுமந்து நிற்கின்றனர்.

### சில ஒற்றுமைகள்

ஆங்கிலேயருக்கு எதிராக, இந்திய மக்களின் ஒன்றுபட்ட போராட்டங்களை பிரதிபலிக்கும் எதுவாக இருந்தாலும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் வெறுக்கின்றனர்.

டிசம்பர் 1929-ல் காங்கிரஸ், லாஹூர் அமர்வில், ஜனவரி 26 -ல், வரக்கூடிய பின்வரும் வருடங்களில் சுதந்திர தினத்தில் மூவர்ணக் கொடியை (அன்றைய தேசிய இயக்கத்தின் கொடி, நடுவில் இராட்டை இருக்கும்) காட்சிப்படுத்தி அதற்கு மரியாதை செலுத்துவதைக் காண வருமாறு மக்களை அழைத்தது.

கே.பி.ஹெட்கேவர் என்பவர் ஆர்.எஸ்.எஸ்-ல் முக்கிய நிறுவனர், அவர் மேற்கூறியவற்றிற்கு மாற்றமாக மூவர்ணக்கொடிக்கு மரியாதை செலுத்துவதை விட்டு, RSS -ன் சகோதரர்கள் அனைவரும் "பக்வா ஜன்டா" (காவிக் கொடி)க்கு வணக்கத்தை செலுத்துமாறு ஜனவரி 21, 1930 -ல் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டார்.

தேசிய ஒருமித்தக் கருத்தை மீறி, சுற்றறிக்கை யானது ஆர்.எஸ்.எஸ்-ன் பொறுப்பிலுள்ள

அனைத்து உறுப்பினர்களையும் அவர் அவர்களின் சுயம் சேவாக்கில், ஞாயிற்றுக்கிழமை 6 மணிக்கு, ஜனவரி 26, 1930 -ல் ஒன்று குழுமி, அவர்கள் சேரும் இடத்தில், அவர்கள் வடிவமைத்த தேசியக்கொடிக்கு அஃதாவது காவிக் கொடிக்கு வணக்கம் செலுத்துமாறு சுற்றறிக்கை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் கவனிக்கத்தக்க விசயம் என்னவெனில் இந்த சுற்றறிக்கையானது திரும்பப் பெறப்படவில்லை.

M.S.கோல்வால்கர் என்பவர் ஆர்.எஸ்.எஸ்-ன் முக்கியமான சித்தாந்தவாதியும், முக்கியமான தலைவரும் ஆவார். ஆர்.எஸ்.எஸ்-ன் தலைமை இடமான நாக்பூரில், ஜூலை 14, 1946-ல் குரு பூர்ணிமா கூட்டத்தில், அவர் கூறியதாவது:-

"இது ஒரு காவிக்கொடி, இவை முழுவதுமாக பாரதிய (இந்திய) கலாச்சாரத்தை மட்டுமே குறிக்கின்றது. இது கடவுளை உருவகப்படுத்துகின்றது. இறுதியில் இந்த முழு தேசமும் இந்தக் காவிக்கொடியின் முன் தலைவணங்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." (Golwalkar, M.S.Shri Guruji Samagr Dasshan, Vol 1 1, Bharhiye Vichar Sadhna, Nagpur, nd (No dare), P.98)

சுதந்திர தினத்தின் மாலை வேளையில், மூவர்ணக்கொடியை அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு ஏற்றுவதற்கு செங்கோட்டையின் அரண்கள் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது, இந்தியாவிலுள்ள எல்லா இடங்களிலும், சாதாரண பிரஜைகள் மூவர்ணக் கொடியை கையில் ஏந்தி நடைபோட்டனர். ஒவ்வொரு வீட்டின் உயரத்திலும் மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டது. ஆனால் அதிர்ச்சியளிக்கும் வண்ணமாக ஆங்கில உறுப்பான ஆர்.எஸ்.எஸ், அதன் ஒருங்கிணைப்பாளர் சொல்லப்பட்ட தேதியான ஆகஸ்ட் 14, 1947 தேசியக்கொடியை இழிவுப்படுத்தி (இதற்கு காரணம் அவர்களின், காவிக் கொடி) பின்வரும் வார்த்தைகளைக் கூறினர், "விதியின் காரணத்தால் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துள்ள ஆட்சியாளர்கள் எங்கள் கையில் மூவர்ணக்கொடியை கொடுக்கலாம்,

ஆனால் அவை இந்துக்களால் என்றைக்குமே உரிமை கொண்டாடப்படவோ, மதிக்கப்படவோ மாட்டாது. மூன்று என்ற வார்த்தையே தீயவையாகும், மூன்று நிறமான கொடி என்பது நிச்சயமாக மிகவும் மோசமான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் அவை தேசத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்."

ஆகவே, ஆர்.எஸ்.எஸ் பொருத்தவரையில், இந்திய தேசியக்கொடி இந்துக்களால் மதிக்கப்படபோவதுமில்லை, மேலும், இவை தேசத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்.

**அதற்கு விளக்கம்**

ஒருங்கிணைப்பாளர், தன்னுடைய விளக்கவுரையில், (நாட்டின் கொடி பற்றி ஜூலை 17, 1947) முன்பே மூவர்ணக் கொடியை தேசியக் கொடியாக முடிவு செய்தது. இந்திய அரசியல் நிர்ணய சபையின் கமிட்டியானது மேலும் மூவர்ணக் கொடியை ஏற்றுக்கொள்ளாத செய்தியை அறிந்து, இவ்வாறு எழுதியுள்ளது.

"இந்தக் கொடியானது எல்லாக் கட்சிகளாலும் சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை எங்களால் ஏற்கமுடியாது. இது சுத்த முட்டாள்தனம். இந்தக் கொடி ஒரே தேசமான இந்துஸ்தானுக்கு குறித்துக் காட்டக்கூடியதாக இருக்கிறது. எல்லா சமூகத்தின் ஆசைக்காகவும் விருப்பத்திற்காகவும் எங்களால் ஒரு கொடியை தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பில்லை. நம்மால் நமக்கு ஏற்றவாறு சட்டையோ கோட்டோ தையல்காரரிடம் தைக்க ஏவுமாறு, ஒரு நாட்டினுடைய தேசியக் கொடியை தன்னுடைய தேர்வுக்கு ஏற்றவாறு வடிவமைக்கக் கட்டளையிட முடியாது."

ஆகவே, மூவர்ணக் கொடியின் வடிவமைப் பின்நோக்கமானது, கொடியின் மூன்று நிறங்களும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை குறிப்பது போன்று உள்ளது.

**1947 -க்கு பிறகு :-**

சுதந்திரத்திற்குப் பிறகும் கூட, ஆர்.எஸ்.எஸ் மூவர்ணக் கொடியை தேசியக் கொடியாக ஏற்பதற்கு மறுத்துவிட்டது. கோல்வால்கர் என்பவர் மூவர்ணக் கொடி தேசியக் கொடியாக தேர்வு செய்ததற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக "பஞ்ச் ஆஃப் தாட்ஸ்" (Bunch of thoughts) - (கோல்வால்கருடைய எழுத்துக்களும் பேச்சுக்களும் கொண்டுள்ள தொகுப்பு) என்னும் புத்தகத்தில் "டிரிஃப்டிங் அன்ட் டிரிஃப்டிங்" (Driftin g and Drifting) என்னும் தலைப்பின் கீழ் எழுதியதாவது, எங்களுடைய தலைவர்கள் புதுக்கொடி



ஒன்றை நம் நாட்டிற்காக அமைத்திருக்கின்றனர். ஏன் இவ்வாறு அவர்கள் செய்தார்கள்? ஏனென்றால் அவர்களின் வழியைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு. எங்களுடையது புகழ்பெற்ற ஒரு பழமையான உயர்ந்த தேசமாக இருந்துள்ளது. இவ்வாறிருக்க எங்களுக்காக ஒரு கொடியை நாங்கள் சுயமாக வைத்திருக்கக் கூடாதா? இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக நமக்கு தேசியச்சின்னம் இருக்கக்கூடாதா? சந்தேகமின்றி நம்மிடம் உள்ளது. இவ்வாறிருக்க ஏன் வெறுமையும் வெற்றிடமும் நம் எண்ணத்தில் கொள்ள வேண்டும்?"

(Golwalkar,M.S.,Bunch of thoughts,Sahitya Sindhu Prakashan,Bangalore,1966,pp.237-38)

சாவர்க்கரும் மூவர்ணக் கொடி தேசியக் கொடியாக ஏற்க மறுத்துவிட்டார். அவரது புறக்கணிப்பைக் கோரும் வகையில் செப்டம்பர் 22,1941-ல் ஒரு அறிக்கையை அறிவித்தார். இதுவரை கொடியைப் பொறுத்தவரையில் இந்துக்களுக்கென்று முழுவதுமாக ஒரு கொடி இல்லை. "குண்டலினி கிருபனன்கீத்" மகாசபா கொடியானது "ஓம் மற்றும் சுவஸ்திக்" என்னும் இந்து இனத்தையும் கொள்கையையும் குறிக்கும் மிகப் பழமையான குறியீடு கொண்டு அமையப் பெற்றுள்ளது. இதனையே காலங்காலமாக இந்துஸ்தானில் கௌரவிக்கப்பட்டு வருகின்றது. ஆதலால் எந்த இடத்தில் அல்லது எந்த நிகழ்ச்சியில் அனைவருக்குமான இந்த காவிக் கொடியை ஏற்றபடவில்லையோ, அங்கே இந்து மகாசபா உறுப்பினர்கள் புறக்கணிப்போம்.


சுழலும் சக்கரம் (இராட்டை) கொடியானது காதி பந்தரைக் (காதி உற்பத்தி கடை) குறிக்கும். ஆனால் அந்த இராட்டை பழமையான புகழ்மிக்க தேசத்தைப் போன்ற இந்த இந்துக்களைக் குறிக்காது.

(Bhide, A.S.(ed.), Vinayak Damodar Savarkar's Whirlwind propaganda: Extracts from the President's diary of his Propagandist Tours interview from December 1937 to October 1941, na, Bombay pp. 469 473)

அன்றைய தினத்தில் அரசால் செய்யப்பட்ட பிரச்சாரமான "ஹர் கர் திரங்கா" என்பது பாரதிய ஜனதா கட்சியால் ஏற்பாடு செய்து மேற்கூறிய நம்பகத்தன்மையை ஆர்.எஸ்.எஸ் விதைத்து, மூவர்ணக் கொடியை இழிவுபடுத்தும் விதமாக நிகழ்ச்சியை நிராகரித்து மூவர்ணக் கொடிக்குப் பதிலாக காவிக்கொடியை மாற்றி ஏற்ற வேண்டும் என்பதே திட்டம் ஆகும். இதில் கவனிக்கத்தக்கவை என்னவென்றால், காவிக் கொடி என்பது இந்தியாவின் ஜனநாயக மதச் சார்பற்ற அரசியலை சீர்குலைக்கும் விதமாக பெரிய திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருக்கின்றது.

சம்சுல் இஸ்லாம் டெல்லி பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் கற்பித்தார். இந்தக் கட்டுரைக்கான ஆதாரங்கள் ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்து மகாசபா பதிப்பகத்தில் இருந்து எடுக்கப் பட்டது.

**தி ஹிந்து (ஆங்கிலம்) 26-08-2022**
**தமிழில்: ஷாஹின் ஜைனப்**



- அல்லாமா அபுல் ஹசன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி



# இந்திய இஸ்லாமிய நாகரிகம்

**நாகரிக உருவாக்கத்திற்கு தேவையான இரண்டு அடிப்படைக் கூறுகள்:**

எல்லா நாடுகளிலும் முஸ்லிம்களின் நாகரிகம் என்பது இரண்டு காரணி களின் மூலம் பிறந்திருக்கும், மேலும் இவையிரண்டின் முழு பிரதிபலிப் பாகவே அது விளங்கும்.

முதலாவது இஸ்லாமிய கொள்கை கள் (வாழ்க்கை மற்றும் ஒழுக்க நெறிகள் சார்ந்த அடிப்படை கொள்கைகள்).

இரண்டாவது முஸ்லிம்கள் வசிக் கும் நாடுகளில் அவர்கள் மீது படிந்த, அந்த நாடுகளுக்குரிய நாகரீகத்தின் தாக்கம். மற்றும் முஸ்லிம்களோடு வசிக்கக் கூடிய பிற மக்களோடும், அவர்களின் மரபுகளோடும் முஸ்லிம்கள் கொள்ளும் பிணைப்பு.

முதலாவது காரணி இஸ்லாமிய கொள்கைகள், வாழ்க்கை மற்றும் ஒழுக்க நெறிகள் சார்ந்த அடிப்படை கொள்கைகள். அனைத்து நாடுகளிலிருக்கும் முஸ்லிம் களின் நாகரிகமும் இதில் ஒன்றுபடும். அதாவது ஒரு முஸ்லிமானவன் எந்த நாட்டில் இருந்தாலும், உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அவனது ஆடை, அவனது மொழி, எது வேறுபட்டாலும், இந்த அடிப்படையில் அவன் உலகில் உள்ள ஏனைய அனைத்து முஸ்லிம்களோடு ஒன்றுப்படுவான். எனவே எல்லா இடங்களிலும் ஒரே நாகரிகத்தை பின்பற்றும், ஒரேக் குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்களை போல அவர்களைக் காண இயலும்.

இரண்டாவது காரணி, அவர்கள் வசிக்கும் நாடுகளுக் குரிய நாகரிகத்தின் தாக்கம். பிற நாட்டில் வாழக் கூடிய முஸ்லிம்களை விட்டும் தனித்துக் காட்டக் கூடியது இதுவே. அவர்கள் எந்த நாட்டின் மரபு வழியில் வந்தவர்கள் என்பதை விளக்குவதும் இந்த காரணியே.

இந்த பொதுவிதியிலிருந்து இந்திய முஸ்லிம்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. பல நூற்றாண்டுகளாக பரிணாமம் அடைந்த இவர்களது நாகரிகம், இந்திய இஸ்லாமிய கலவையின் தாக்கத்தை கொண்டது.

இதுவே இந்த நாகரீகத்தை பேரழகு நிறைந்த நாகரீக மாக மாற்றுகிறது. முஸ்லிம்கள் இந்த இந்திய நாட்டில் அந்நியனைப் போலவோ அல்லது வழிப்போக்கனைப் போலவோ வாழவில்லை மாறாக இந்த நாட்டின் குடிமக்களைப் போல நிம்மதியாக, நிரந்திரமாக வாழ்ந் தார்கள் என்பதனை எடுத்து இயம்புகிறது, இந்தியாவிற்கு வந்த முஸ்லிம்களின் மூலமாக உருவாகிய இந்த நாகரீகம்.

எவ்வாறென்றால் தங்களது இல்லங்களை இங்குள்ள சூழலுக்கும், தேவைக்கும் ஏற்பவும், பாரம்பரியமாக பின்பற்றப்பட்ட கலைவடிவிலும், நவீன கலைவடிவிலும் அமைத்துக் கொண்டார்கள். இதற்கும் மேலாக தாங்கள் வாழும் பகுதிகளில் மிக சிறந்த மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டார்கள்.

இங்கு ஒரு விஷயத்தை நாம் விளங்க வேண்டும். பொதுவாக ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் ஓர் இயல்பான

சுபாவம் உண்டு. அதேப்போல உலகின் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் அடிப்படை ஒழுக்க நெறிகளும் உண்டு. ஒரு கூட்டம் தனது தனித்துவத்தை நிலைநாட்டிக் கொள்வதற்காக இவையிரண்டிலிருந்து தன்னைத் தனிமைப் படுத்த முயல்வது தவறானமுயற்சியே.

ஏனென்றால் இந்த முயற்சி உலகின் அனைத்து மக்களும் ஒன்றுப்படும் சர்வதேச அடையாளத்தை இழக்க வழிவகுக்கும். அதேப்போல ஆன்மீக வளத்தில் மிகப்பெரிய வறட்சியை ஏற்படுத்தும். அதேப்போல ஒருக் கூட்டத்தாரை அவர் களுக்கே உரித்தான சூழலை விட்டும் தனித்து வாழுமாறும் அவர்களைச் சூழ்ந்துள்ள கல்வி ரீதியான வட்டத்தை விட்டு விலகி வாழுமாறும் அழைப்பு விடுப்பது மிகவும் ஆரோக்கியமற்ற முயற்சி மட்டுமல்ல இயற்கைக்கு நேரெதிரான ஏற்றுக்கொள்ள முடியாத முயற்சி.

**இப்ராஹீமிய்ய நாகரிகத்தின் மூன்று சிறப்பியல்புகள்**

அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுப்படும் இஸ்லாமிய நாகரிகத்தின் முதலாவது காரணி யைக் (வாழ்க்கை மற்றும் ஒழுக்க நெறிகள் சார்ந்த இஸ்லாமிய அடிப்படை கொள்கைகள்) கவனிக்கும் போது உலகின் பலப் பகுதிகளில் வாழும் பிற முஸ்லிம்களைப் போலவே ஓர் குறிப்பிட்ட நாகரிகத்தை இந்திய முஸ்லிம்களும் சுமந்துள்ளார்கள்.

இதனை இப்ராஹீமிய்ய நாகரிகம் என்று அழைப்பதே சாலச் சிறந்ததாக இருக்கும்.இந்த இப்ராஹீமிய்ய நாகரிகம் மூன்று சிறப்பியல்பு களைக் கொண்டது. இந்த மூன்று சிறப்பியல்பு களும் சிந்தனை மற்றும் சமூக அமைப்பில் தனித்துவமிக்க முத்திரையைப் பதிக்கிறது.இந்த முத்திரை வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பிரதி பலிக்கிறது. இதன் சாயல் இல்லாமல் எந்தவொரு செயல்களையும் செய்ய இயலாது. இந்த மூன்று சிறப்பியல்புகளும் அடிப்படையானவை.

முதலாவது, அல்லாஹ்வை ஈமான் கொள்வது. இரண்டாவது (இப்ராஹீம் (அலை) வழியில் வந்த அனைத்து நபிமார்களும் கற்பித்த, குர்ஆனில் விரிவாக இடம்பெற்ற) ஓரிறைக் கொள்கை. மூன்றாவது ஒரு சராசரி முஸ்லிமின் சிந்தினை யிலிருந்து என்றும் நீங்காத மனித சமூகத்தின் கண்ணியம் மற்றும் மனிதர்கள் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கொள்கை.

உலகில் உள்ள ஏனைய நாகரிகங்களுக்கு நேரெதிரான இந்த மூன்று சிறப்பியல்புகளைக் கொண்டுள்ள இஸ்லாமிய நாகரிகம் ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சுகிறது. இப்ராஹீமிய்ய நாகரி கத்தில் மிளிரும் இந்த சிறப்பியல்புகளை உலகில் வேறு எந்த நாகரிகத்திலும் பெற முடியாது.

**ஒரு முஸ்லிமின் வாழ்வில் இறை நினைவு**

இறைவன் இருக்கின்றான் என்று ஈமான் கொள்வது அந்த எண்ணத்தை சதா தனது சிந்தனையில் வைத்திருப்பது, முஸ்லிம்களின் நாகரிகத்திலிருந்து முழுமையாக பிரிக்க முடியாத தனித்துவமிக்க ஒரு சிறப்பம்சம். முஸ்லிம் சமூகத் தையும் அதன் நாகரிகத்தையும் நாம் பல்வேறு நாடுகளில், பல்வேறு பருவ நிலைக்கேற்ப, பல்வேறு வடிவமைப்பில், பல்வகை வேலைப் பாடு செய்யப்பட்ட பல்வகை ஆடைகளுக்கு நாம் ஒப்பிட முடியும். ஆனால் இவ்வனைத்து ஆடைகளும் ஒரே வர்ணத்தால் பூசப்பட்டிருக் கும். இந்த வர்ணம் பூசப்படாமல் எந்தவொரு பகுதியையும் பார்க்க இயலாது. நிச்சியமாக முஸ்லிம்களின் நாகரிகத்திலும் அவர்களது சமூக வாழ்க்கையிலும் இறை நினைவு என்பது அவர்களது நரம்பில் ஓடும் ரத்தத்தை போன்ற பிரிக்கமுடியாத அந்தஸ்தைப் பெற்றது.

சாதாரணமாக முஸ்லிம்களது வீட்டில் பிறக்கும் எல்லா குழந்தைகளும் பிறந்த உடனே அதன் செவிகளில் முதலில் சொல்லப்படுவது பாங்கு ஓசையே. உலகத்திற்கு வந்த விருந்தாளி தன் பெயரை அறிவதற்கு முன்பே அல்லாஹ்வின் பெயரை அறிந்துக் கொள்கிறது. பிறகு ஏழாம் நாள் நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த சுன்னா வின் அடிப்படையில் அகீகா கொடுக்கப்பட்டு ஓர் இஸ்லாமிய பெயர் அந்த குழந்தைக்கு வைக் கப்படும். இறைவனுக்கான அடிமைத்தனத்தை வெளிப்படுத்தும், இறைவனது ஓரிறைக் கோட் பாட்டை உறுதிப்படுத்தும் பெயர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். அல்லது ஏதேனும் நபியுடைய பெயர் அல்லது அவர்களைப் பின்பற்றி யவர்களது பெயர் வைக்கப்படும்.

பிறகு ஆரம்ப கல்விச்சாலை செல்ல தயாராகும் போது (கல்விப் பயணம் நன்கு அமைய வேண்டும் என்பதற்காக) இந்த நிகழ்வு அரங்கேறும் அதாவது குர்ஆனின் ஆரம்ப வசனங்களையோ அல்லது

ஏதேனும் பகுதி ஓதப்பட்டு இந்த கல்விக் கற்கும் பயணம் துவங்கப்படும். இந்த வழக்கம் இந்திய முஸ்லிம்களிடையே பரவலாக கடைபிடிக்கப் பட்டு வந்தது.

பிறகு திருமண வயதை நெருங்கியதும் திருமணத்தின் போது இறைவனது பெயரை முன்மொழிந்து அந்த ஆணையும் பெண்ணையும் இணைத்து, "இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு உறவினர் களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்.)" என்ற இறைவசனத்திற்கு ஏற்ப அல்லாஹ்வின் பெயரால் அவர்கள் இருவரும் ஒப்பந்தம் எடுத்துக் கொள்ளுவார்கள்.

பிறகு சுன்னத்தான குத்பா ஓதப்படும் அந்த உரையில் ஆதம் (அலை) அவர்கள் துவங்கி மனித வர்க்கத்தை ஜோடி ஜோடியாக படைத்து மனித சமூகத்திற்கு இறைவன் புரிந்த மாபெரும் அருள் நினைவுப்படுத்தப்படும். வாழ்வோ மரணமோ எதுவாயினும் அது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்த வண்ணமே அமைதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படும்.

அடுத்ததாக ஈது பெருநாளில் இறைவனின் மகத்துவத்தை போற்றும் விதமாக அவன் புரிந்த அருள்களுக்கு நன்றிச் செலுத்தும் விதமாக இரு ரக்அத்களை நிறைவேற்றுவதற்காக குளித்து, ஆடைகளை சுத்தம் செய்து, ஆடைகளில் உயர்ந்த ஆடைகளை அணியுமாறும், குறிப்பாக தியாகத் திருநாளில் அல்லாஹ்வின் பெயரால் பலி கொடுக்க வேண்டும் என்றும் முஸ்லிம்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள்.

பிறகு வாழ்வின் இறுதி தருணத்தை அடையும் போதும் அல்லாஹ்வின் பெயரே முன்மொழியப் படும். தங்களது வாழ்வின் கடைசி வார்த்தை அல்லாஹ்வின் திருநாமமாக இருக்க வேண்டும் என்பதும், அவன் நினைவிலிருந்த வண்ணமே இவ்வுலகிலிருந்து கரைந்து போக வேண்டும் என்பதும் முஸ்லிமாக பிறந்த ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் மிகப்பெரிய பேராவல். முஸ்லிம்கள் மரணச் செய்தியைக் கேட்டவுடனே தங்களுக்கு பரிச்சயமான "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" என்ற குர்ஆன் வசனமே அவர்களது நாவுகளில் தவழும்.

வழியனுப்பும் நேரம் நெருங்கியதும் அதாவது ஜனாஸா தொழுகையின் போதும் கூட அல்லாஹ்வின் பெயரே முதலிலும் கடைசியிலும் கூறப்படும். மரணித்தவரின் பாவமன்னிப்புக்காக துஆச் செய்யப்படும். மக்கள் இவ்வாறு பிரார்த் தனைச் செய்வார்கள் "எங்களில் எவரை நீ வாழச் செய்கிறாயோ அவரை இஸ்லாமிய அடிப்படை யில் வாழச் செய்வாயாக! "எங்களில் எவரை நீ மரணிக்கச் செய்கிறாயோ அவரை ஈமானுடன் மரணிக்கச் செய்வாயாக!".

பிறகு மண்ணறையில் அந்த மய்யித் வைக்கப் பட்டு "பிஸ்மில்லாஹி வஆலா மில்லதி ரசூலில்லாஹ்" என்றுக் கூறி அந்த மய்யித்தின் முகம் ஓரிறைக் கோட்பாட்டின் தலைமைக் கேந்திரமான புனித கஅபா ஷரீஃபை நோக்கி வைக்கப்படும். பூமியில் எந்த பகுதியில் மரணித்து புதைக்கப்படும் முஸ்லிமானாலும். அந்த மரணித் தவரின் முகம் கஅபாவை முன்னோக்கியே வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறாக மரணித்தவரை அடக்கம் செய்த பிறகு கடந்துச் செல்லக்கூடிய முஸ்லிமானவர் அந்த மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்ட நபருக்காக பாவமன்னிப்பு தேடுவார். அவருக்காக ஃபாத்திஹா ஓதுவார். இவ்வாறாக இறை நினைவு, இந்த நினைவோடு கலந்த உணர்வு எந்த நேரத் திலும் எந்த சூழ்நிலையிலும் ஒரு முஸ்லிமின் வாழ்விலிருந்து ஒரு போதும் விடுப்படாது.

இதுவரை நாம் கூறிவந்த அனைத்து விஷயங்களும் முஸ்லிம்களது வெளிப்படையான வாழ்க்கையில் கடைபிடிக்க படுபவை.இதேப் போல ஓர் முஸ்லிமின் தனிமனித வாழ்கையின் எந்த தருணமும் இறை நினைவில்லாமல் கடந்துச் செல்லாது.

உணவை உண்ணத்துவங்கும் முன்பும் பின்பும் இறைவனையே நினைவுக் கூறுவான். சுன்னாவை சரியான முறையில் பின்பற்றக் கூடியவர்கள் தாங்கள் உணவருந்தும்போது, பருகும்போது, கழிவறைக்குச் செல்லும்போது என அனைத்தி லுமே இறைவனது பெயரை நினைவு கூறுவார்கள். தும்மினால் கூட இறைவனை நினைவுகூற வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிடப் பட்டுள்ளது. அப்படி ஒருவர் தும்மி இறைவனை நினைவுகூர்ந்தால் அதனை செவிமடுத்தவரும் இறைவனை நினைவுக்கூர வேண்டும் என்பதும் அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையே. இதற்கும் மேலாக மாஷா அல்லா, இன்ஷா அல்லாஹ், லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா

பில்லாஹ் போன்ற திக்குருகள் அன்றாடம் ஓத வேண்டிய திக்ருகள் என்ற நிலையைத் தாண்டி அவர்களது மொழிகளின் ஒருப்பகுதியாகவே இவை கலந்து விட்டது. முஸ்லிம்கள் வாழக் கூடிய பகுதிகளில் அவர்கள் அன்றாடம் பேசக்கூடிய உரையாடல்களிலும் இவை நுழைந்து விட்டது. இதனால் இஸ்லாமிய நாகரிகத்தின் தாக்கம் அந்த மொழிகளின் மீதும் படர்ந்தது. இந்த உரையாடல்கள் அனைத்தும் இறைவனை நினைவுக் கூர்வதற்கான வழிவகைகளே. பேசும் மொழியில், கலாச்சாரத்தில், அன்றாட வாழ்வில் என அனைத்திலும் இறை நம்பிக்கையை வெளிப்படுத்தும் இஸ்லாமிய சமூகத்தை போன்ற ஒரு சமூகத்தையோ அல்லது நாகரிகத்தையோ ஒருப்போதும் நம்மால் காண இயலாது. இந்த இறை நம்பிக்கையே உலகளாவிய முஸ்லிம்களோடு ஒன்றுப்படும் இந்திய முஸ்லிம்களின் முதலாவது இப்ராஹீமிய்ய சிறப்பியல்பு. இதுவே இவர்களது அடையாளமாகவும் மாறியது.

## இரண்டாவது சிறப்பியல்பு ஓரிறைக் கோட்பாடு

இந்திய இஸ்லாமிய நாகரிகத்தின் இரண்டாவது முக்கியமான சிறப்பியல்பு ஓரிறைக் கோட்பாடு. இந்த கோட்பாடானது முஸ்லிம்களது நம்பிக்கைகளில் துவங்கி செயல்கள் வரை, அவர்களுடைய வணக்க வழிபாடுகளில் துவங்கி விழாக்கள் வரை அனைத்திலும் வெளிப்பட்டது. தினம்தோறும் பள்ளிவாயல்களில் "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை" என்ற இந்த அழைப்பு ஐந்து முறை விடுக்கப்படும். நிச்சயமாக இணை வைப்பின் எல்லா அடையாளங்களை விட்டும் அவர்களது இல்லங்கள் பாதுக்காக்கப்பட்டிருக்கும். இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் விதமாக உருவப்படங்கள், சிலைகள், உருவ பொம்மைகள் ஆகியவை அந்த இல்லத்தில் தடை செய்யப்பட்டிருக்கும். குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களில் கூட இது கவனத்தில் கொள்ளப்படும்.

மார்க்கம் சார்ந்த நிகழ்வுகளோ அல்லது நாட்டின் அரசு விழாக்களோ அல்லது அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், ஆன்மீகத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களிலோ, அல்லது கொடியேற்றும் நிகழ்ச்சியோ, எதுவாயினும் ஒரு முஸ்லிம் உருவச் சிலைகளுக்கு முன்னால் தலை வணங்குவது அல்லது பயபக்தியோடு அதன் முன் நிற்பது அல்லது அதற்கு மாலை அணிவிப்பது, இவை அனைத்தும் இஸ்லாமிய நாகரிகத்திற்கு முற்றிலும் முரணானது. ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமிய நாகரிகத்தைப் பற்றிப் பிடித்திருப்பார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் தடுக்கப்பட்ட இவ்வனைத்திலிருந்தும் தவிர்ந்திருப்பார்கள். எந்த நாட்டிலிருந்தாலும் அவன் இஸ்லாமிய நாகரிகத்தோடே கலந்திருப்பான். ஓரிறைக் கோட்பாட்டின், இஸ்லாமிய ஷரீஅத்தின் எல்லைக் கோடுகளை தாண்டி, பிற மதத்தவர்களை பின்பற்றும் விதமாக விழாக்கள் நடத்துவது பிரமுகர்களை சங்கைப்படுத்துவது அவர்கள் முன்பு பணிவை வெளிப்படுத்துவது போன்ற காரியங்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறுவதற்கு நிகரானது.

## மூன்றாவது சிறப்பியல்பு, மனித சமூகத்தின் கண்ணியம் மற்றும் சமத்துவம்

இந்திய இஸ்லாமிய நாகரிகத்தின் மூன்றாவது சிறப்பியல்பு மனித சமூகத்தின் கண்ணியம் மற்றும் சமத்துவம். இந்த இரண்டு கருத்தியலும் முஸ்லீம்களின் இன்றியமையாத இயல்பின் ஒரு பகுதியாகவும், இஸ்லாமிய நாகரிகத்தின் குணாதிசயத்தின் நிரந்தர பண்பாகவும் மாறியுள்ளது. இந்த இயல்பான கொள்கையை உள்ளத்தில் சுமந்துள்ள முஸ்லிமிற்கு ஜாதிப் பிரிவினை, தீண்டாமை என்பதெல்லாம் தெரியாது. பிற முஸ்லிமோடு அமர்ந்து உண்பதற்கோ அல்லது முஸ்லிம் அல்லாதவரை கட்டாயப்படுத்தி தன்னோடு சாப்பிடச் சொல்வதற்கோ ஒரு முஸ்லிம் தயக்கப்பட மாட்டான். ஒரேத் தட்டில் பலர் உணவு உண்பார்கள். ஒருவர் சாப்பிட்டோ அல்லது குடித்தோ மீதம் வைத்ததை மற்றொருவர் உண்பார், பருகுவார். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடில்லாமல் அனைவரும் தோளோடு தோள்ச் சேர்ந்து நின்று பள்ளிவாசல்களில் தொழுகையை நிறைவேற்றுவார்கள்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த கற்ற ஆலிம் மக்களுக்கு தலைமை தாங்கி தொழுகையை நடத்த இயலும். சமூகத்தில் அந்தஸ்து மிகுந்தவர்கள், முக்கிய பிரமுகர்கள் ஏன் ஆட்சியாளர்கள் கூட இந்த இமாமை பின்பற்றியே தொழுவார்கள்.

தொடரும்........

சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ் (ரஹ்) அவர்கள் இஸ்தான்புலை கைப்பற்றிய பிறகு மிக பிரம்மாண்டமான ஒரு மஸ்ஜிதை கட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். இந்த பொறுப்பானது ரோம் நாட்டு கட்டிடக் கலையின் விற்பன்னர் இப்லஸாந்தி அவர்களிடம் வழங்கப்பட்டது. இந்த மஸ்ஜிதுக்கான தூண்கள் முழுக்க முழுக்க பளிங்கு கற்களால் கட்டப்பட வேண்டும் என்றும், இன்னும் மஸ்ஜிதின் பிரம் மாண்டத்தை வெளிப்படுத்தும் பொருட்டு தூண்கள் மிக உயரமாக நிறுவப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டு, மேலும் அந்த தூண்கள் எந்தளவு உயர்த்தப்பட வேண்டும் என்ற அளவையும் சுல்தான் இந்த கட்டிட கலை வல்லுநரிடம் குறிப்பிட்டார்கள்.

ஏதோ காரணத்தால் சுல்தானிடம் கட்டிடக் கலைஞர் தெரிவிக்காமல் சுல்தான் அவர்கள் குறிப்பிட்ட உயர அளவை விட குறைவான அளவில் தூண்கள் உருவாக்குமாறு கட்டளை யிட்டு தூண்களும் உருவாக்கப்பட்டது. இந்த செய்தியை சுல்தான் அவர்கள் அறிந்ததும் கடுமையாக கோபமுற்றார்கள். ஏனென்றால் கட்டிடக் கலைஞர் குறிப்பிட்ட அளவில், தூண்கள் உருவாக்கப்பட்டு வெகுத் தூரத்தி லிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது. இதற்கு பிறகு என்ன முயற்சி எடுத்தாலும் அதில் எந்த பயனும் இல்லை என்பதை அறிந்த சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ்(ரஹ்) அவர்கள் மேலும் கோபமுற்றார்கள். தான் கொண்டிருந்த கோபத் தின் விளைவாக அந்த கட்டிடக் கலைஞரது கையை வெட்டுமாறு சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ்(ரஹ்) அவர்கள் ஆணையிட்டார்கள்.

தனக்கு நேர்ந்த இந்த அநியாயத்தை சகித்துக் கொண்டிருக்கவில்லை அந்த கட்டிடக் கலைஞர் நீதிக்கும், நியாயமான தீர்ப்பிற்கும் பெயர்போன இஸ்தான்பூலின் அரசு காஜியான ஷைகு ஸாரி ஹள்ர் ஜலபி (ரஹ்) அவர்களிடம் சென்றார். சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ் (ரஹ்) அவர்களினால் தனக்கு நேர்ந்த அநியாயத்தை தெரிவித்தார். வழக்கை தாமதப்படுத்தாமல் சுல்தானை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டிருப் பதால் உடனே சுல்தானை நீதிமன்றத்திற்கு அழைத்து வருமாறு ஒரு நபரை அரசவைக்கு அனுப்பினார்.

சுல்தானும் தாமதப்படுத்தாமல் காஜியின் அழைப்பை அறிந்து நீதிமன்றத்திற்கு விரைந் தார். நீதிமன்றத்திற்குள் நுழைந்ததும் தான் அமர் வதற்காக இருக்கையை நோக்கிச் சென்றார். உடனே காஜி அவர்கள் "இங்கே அமருவதற்கு உங்களுக்கு அனுமதி இல்லை உங்களுக்கு எதிராக புகார் அளித்தவருக்கு அருகில் நில்லுங்கள்" என்றார்.

உடனே சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ் (ரஹ்) அவர்கள் தனக்கு எதிராக வழக்குத் தொடுத்த



# இந்தியாவிற்கு தேவை இஸ்லாமிய நீதிமன்றங்களே !

அந்த ரோம் நாட்டு கட்டிடக் கலைஞருக்கு அருகாமையில் நின்றார். தங்களது புகாரை தெரிவியுங்கள் என்று கட்டிடக் கலைஞரிடம் கூறப்பட்டது. நிகழ்ந்ததை தெளிவாக கூறினார். சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ் (ரஹ்) அவர்களும் கட்டிடக்கலைஞர் கூறியதை உண்மை என்று ஒப்புக் கொண்டார்.

இரண்டு நபர்களிடமும் வழக்கு விசாரணை நிறைவடைந்ததும் என்ன தீர்பை காஜி வழங்கப் போகிறார் என்பதனை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில் காஜி அவர்கள் சுல்தானை எதிர்நோக்கி கூறினார்:

"ஷரீஅத்தின் அடிப்படையில் இதற்கான தீர்ப்பானது தங்களது கையும் பழிதீர்த்தல் என்ற அடிப்படையில் வெட்டப்பட வேண்டும்".

புகாரளித்த கட்டிட கலைஞர் காஜி அவர்கள் வழங்கிய தீர்பைக் கேட்டு அதிர்ந்து போனார். இதனை கட்டிடக் கலைஞர் கொஞ்சம் கூட எதிர்ப்பார்த்திராத தீர்ப்பு ஏதேனும் நஷ்டஈடு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் மட்டுமே இவர் காஜியை அனுகினார். ஆனால் காஜி அவர்கள் வழங்கிய தீர்ப்போ இந்த கிஸ்தின்தீனிய்யா என்ற மாபெரும் நகரம் எந்த கரங்களால் வெற்றிக் கொள்ளப்பட்டதோ அந்த கரங்களை வெட்டப்பட வேண்டும் என்ற இந்த தீர்பை இவர் கொஞ்சம் கூட சிந்தித்துக் கூட பார்க்கவில்லை. இந்த சுல்தானை பார்த்தல்லவா ஐரோப்பிய நாடே நடுங்கிக் கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் சிந்தித்த அந்த கட்டிக் கலைஞர், "மதிப்பிற்குரிய காஜி அவர்களே ஏதேனும் நஷ்டஈடு கிடைக்கும் என்பதை எதிர் பார்த்து மட்டுமே நான் தங்களிடம் புகாரளித்தேன் இது தான் தீர்ப்பு என்றால் நான் அளித்த புகாரை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். இப்படியான சுல்தானது கரம் வெட்டப்படுவது எந்த விதத்திலும் பயனில்லை".

இதனை கேட்ட காஜி அவர்கள் முன்பு வழங்கியத் தீர்ப்பிற்கு மாற்றமாக, கைவெட்டப்பட்டு மிகப் பெரிய சிரமத்தை அனுபவிக்கும் இந்த கட்டிடக் கலைஞரின் வாழ்க்கை முழுக்க தினமும் பத்து பொற்காசுகள் நஷ்டஈடாக வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

ஆனால் சுல்தான் முஹம்மத் ஃபாதிஹ் (ரஹ்) அவர்களோ இப்படியான ஒருத் தீர்ப்பிலிருந்து தன்னை காப்பாற்றிய நபருக்கு வாழ்க்கை முழுக்க 20 பொற்காசுகள் தினமும் வழங்க கட்டளையிட்டார்.

மூலம்: ரவாயிஃ மின் தாரிகில் உஸ்மானி
தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# எது பாதுகாப்பு கவசம்?



நான் பஸ்ஸை விட்டு இறங்கினேன். அதே பஸ்ஸில் வந்த கருப்பு புர்கா அணிந்த பெண் "சார் சௌக்கியமா?" என்றது. குரல் எங்கோயோ கேட்ட குரலாக இருந்தது. அதனால் நான் நீங்கள் யார்? என்றேன். அதற்கு அந்த பெண் நான்தான் சுமதி என்றது. நான் நீங்கள் ஏன் இந்த பஸ்ஸில் வந்திருக்கிறீர்கள் என்றபோது? அவள் நான் வீட்டை விட்டு தனியாக வெளியில் செல்லும்போதும், சென்றுவிட்டு, வீட்டுக்கு வேண்டிய தட்டுமுட்டு சாமான்கள் வாங்குவதற்குச் செல்லும் போதும், இந்த புர்காவில்தான் சென்று வருவேன். இதனால் எனக்கு பாதுகாப்பும் ஏற்படுகிறது. பஸ்ஸில் கூட என்னை யாரும் இடிப்பதும், தவறாக நடத்துவதும் இல்லை. இந்த புர்காவில் எனக்கு கண்ணியம் ஏற்படுவதை உணர்கின்றேன். இது எனக்கு ஒரு தற்காப்பு கவசமாக உள்ளது. எனது கணவர் அலுவலகம் சென்ற பின் நான் வீட்டை விட்டு வெளியில் செல்வது என்றால் இந்த புர்காவில்தான் செல்வேன். இந்த பழக்கத்தை நான் பல வருடங்களாகப் பின்பற்றி வருகிறேன் என்றாள். அந்த பெண் இஸ்லாம் காட்டியது எதுவும் வீண்போகவில்லை. முஸ்லிம்களாலும், முஸ்லிமல்லாதவர்களாலும் தேடிப் பிடித்து பின்பற்றப்படுகிறது.

விலை உயர்ந்த தங்க நகைகளும், பணமும் பொருளும் ஹிஜாப் புர்கா அணிந்தவர்களிடமிருந்து பறிக்கப்பட்டதாக, களவாடப்பட்டதாக தகவல் இல்லை என்பது புள்ளி விவர (Smastics) தகவல் (அல்ஹம்துலில்லாஹ்)

- M.A. **முஹம்மது ஹாஜி நிரவி**



# விலைவாசி உயர்வை இஸ்லாமிய அரசு எதிர் கொண்ட விதம்

ஹிஜ்ரி 661 இல் எகிப்தில் விலைவாசி உயர்வு உச்சக்கட்டத்தை அடைந்தது. உணவுப் பொருட்களுக்கு மிகப்பெரும் தட்டுப்பாடு நிலவியது. இதனால் ஏழை எளிய மக்கள் அன்றாட உணவைப் பெறுவதற்கே போராட வேண்டியிருந்தது.

இந்த பிரச்சினைக்கான தீர்வை உடனே காண சுல்தான் லாஹிர் பைபரஸ் (ரஹ்) நேரடியாக களத்தில் இறங்கினார். நாட்டில் நிலவிவரும் சூழல் மற்றும் விலைவாசி உயர்வுக் குறித்து ஆழமாக விவாதிக்க அவசரமான ஆலோசனைக் கூட்டத்தை கூட்டினார். கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

**முதலாவது:** "வருமானமேஈட்ட இயலாதவர்கள் அனைவருக்கும் சுல்தான் அவர்களினால் குறிப்பிடப் படும் அளவு, உணவுப் பொருட்கள் தினமும் அரசு அதிகாரிகளினால் வழங்கப்படும்."

**இரண்டாவது:** "பதுக்கலுக்கு வழி வகுத்து விடக் கூடாது என்பதற்காக எல்லாப் பொருட்களையும் வாடிக்கையாளர்களுக்கு தேவையான அளவில் மட்டுமே விற்கவேண்டும்."

**மூன்றாவது:** "ஏழை எளிய மக்கள், ஆதரவற்ற வர்கள் ஆகிய அனைவரது பெயர் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும்."

இதற்கு பிறகு அனைத்து ஏழை எளிய மக்கள், ஆதரவற்றவர்கள் ஆகிய அனைவரும் அரண் மனைக்கு வருமாறு, தெருக்கள் தோறும் அறிவிப்பு செய்யப்பட்டது. அரண்மனைக்கு வந்தவர்களது பெயர்கள் பதிவுச் செய்யப்பட்டது. மேலும் அரண்மனைக்கு வராது நபர்களை கண்டறிவதற் காக தனிப்படையொன்று தெருக்கள் தோறும் அனுப்பப்பட்டது. இவ்வாறாக அனைவரது எண்ணிக்கை பல்லாயிரங்களை தாண்டியது.

இவர்கள் அனைவரது பெயர்கள் மற்றும் மொத்த எண்ணிக்கை சுல்தான் அவர்களிடம் காண்பிக்கப்பட்டது.அதற்கு சுல்தான் லாஹிர் (ரஹ்) கூறினார்:

"அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்த அகிலத் தார் அனைவருக்கும் தேவையான உணவுப் பொருட்கள் என்னிடம் இருந்திருந்தால் கூட அதை அனைவருக்குமே பங்கிட்டு கொடுத்திருப்பேன்."

இதற்கு பிறகு அரசு அதிகாரிகளுக்கு இராணுவ அதிகாரிகளுக்கு சுல்தான் லாஹிர் (ரஹ்) அவர்கள் ஏழைகளை பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு தானே 1000 ஏழைகளுக்கு பொறுப்பேற்றார். அதிகாரகளுக்கு வழங்கியும் மீதமிருந்த ஏழைகளை மிகப் பெரிய தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் பொறுப்பேற்று கொள்ளுமாறு வலியுறுத்தினார். "அனைவருமே மூன்று மாதம் இந்த ஏழைகளுக்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றி கொடுக்குமாறு" கட்டளையிட்டார்.

சுல்தானது கஜானாக்கள் திறக்கப்பட்டு உணவு சமைப்பதற்கு தேவையான அனைத்தும் அங்கிருந்து எடுக்கப்பட்டது. மிகப் பெரிய மஸ்ஜிதான மஸ்ஜித் தூலான் உணவு சமைப்பதற்கான இடமாக தேர்வுச் செய்யப்பட்டது. அங்கிருந்து ஏழை எளிய மக்கள், ஆதரவற்றோர் ஆகிய அனைவருக்குமே உணவு வழங்கப்பட்டது.

இவை அனைத்திற்கும் பிறகு, தான் ஆணை யிட்ட கட்டளைகள் அனைத்தும் சரியாக நிறைவேற் றப்படுகிறதா என்பதனை சோதித்துக் கொண்டே இருந்தார்.

இந்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டதால் விலைவாசி உயர்வு மெதுவாக குறைந்து வந்தது. ஏழை எளிய மக்களின் எண்ணிக்கையும் படிப் படியாக குறைந்தது. ஐந்து மாதத்திற்கு பிறகு விலை வாசி உயர்வு உணவுப் பொருட்கள் தட்டுப் பாடு அனைத்தும் முடிவுக்கு வந்தது. மக்கள் நிம்மதியாக வாழத் துவங்கினர்.

மூலம் : ஹூதத் லில் மக்ரிஸி

தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# இஸ்லாமும் ஜீவகாருண்யமும்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
களச்சல்

"இஸ்லாம், பசு போன்ற மிருகங்களையும் பறவையினங்களையும் மற்றுள்ள ஜீவராசி களையும் அன்போடு நடத்துமாறு பகர்கின்றது. அதேபோன்று, மனிதன் மனிதனாக வாழ்ந்து, இறைவனுக்கு செய்ய வேண்டியவைகளை செவ்வனேச் செய்து, அவனது படைப் பினங்கள் மீது அன்பு பூண்டு வாழ்ந்து, மறுமைப் பேற்றிற் கான வழிகளைத் தேட, முயற்சி செய்யச் சொல் கின்றது!"

இறைப்பணிக்குக் கீழ்ப் படிந்து நடப்பது தான் இஸ்லாம் இறைவனது படைப்பினங்கள் அத்தனையும் இறைப் பணிக்கு பணிந்தே செயலாற்றி வரு கின்றன. சூரியனும் சந்திரனும் கோளங் களும் விண்மீன்களும் மற்றும் எந்தக் குறிக்கோளுக்காக இறைவன் அவற் றைப் படைத் தானோ, அந்த வகையில் அணுவளவும் தவறாமல் அவை செயலாற்றிவருகின்றன. ஆக, அவை யெல்லாம் இஸ்லாமாகவே இயங்கி வருகின்றன.

இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்!' என்று திருமறையிலே இறைவன் குறிப்பிடுகின்றான்.

இஸ்லாம், உலகிலுள்ள அனைத்து மக்களா லும் ஏற்றுக்கொள்ளப்படாவிடி னும், உலகிலுள்ள பல்வேறு இன. மொழி, கலை, கலாச்சாரங்களைக் கொண்ட பெருந்தொகையான மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு; உலகில் எத்தனையோ மாறு தல்கள் ஏற்பட்டபோதினும், அதன் தனியான, எந்நாட்டவரும் எக்காலத்தவரும் பின்பற்றும் படியான நடைமுறைச்சட்டங்களை, கொள்கைக் கோட்பாடுகளை உள்ளடக்கியதாகவே அமைந் துள்ளது.

ஆதம் நபியிலிருந்து அண்ணல் நபி ஈறாக, ஒவ்வொரு கால கட்டங்களிலும் வாழ்ந்த மக்கள் இஸ்லாமிய நெறியிலிருந்து வழி தவறியபோது, அந்தந்த கால கட்டங்களில் நபிமார்களை இவ் வுலகிற்கு அனுப்பி, நல்வழிக் காண் பிக்கச் செய்தான் இறைவன். நபிமார்கள் காண்பித்த அவ்வழிதான் இஸ்லா மிய வழி!

நம்முடை நிரந்தரத் தலைவர் அண்ணல் முகம்மது ரசூல் (ஸல்) அவர்கள் பிறந்த காலச் சூழ்நிலையில், உலகமே அஞ்ஞான, அந்தகாரத் தில் மூழ்கியிருந்தது ! அந்தக் கால கட்டத்தில் பிறந்த நம்முடைய பெருமானாருடன் நபித்துவம் முற்றுப் பெற்றுவிடுவதால், அகிலங்கட்கோர் அருட்கொடையாகவும் அகில உலக மக்களுக்கு நபியாகவும் உலகம் உள்ளளவும் இப்பாருல குள்ளளவும் எந்நாட்டவரும் எக்காலத்தவரும் பின்பற்றி நடக்குமளவு நடைமுறைச் சட்டங் களை உள்ளடக்கிய, சம்பூர்ண மார்க்கத்தை (கமாலியத்தை) இறைவன் நம்முடைய பெருமானார் மூலம் உலகில் பரவச் செய்தான். அக்கொள்கை கோட்பாடுகளை ஏற்று நடப்ப வர்களே இஸ்லாமியர்கள் !

உத்தம நபியை இவ்வுலகிற்கு அனுப்பிய இறைவன் தன் திருமறையில், 'அல்லாஹூ நூறுஸ்ஸ மாவாதி வல் அர்ள்' என்றும் 'றப்பில் மஸ்ரிகைன், ஹப்புல் மஃரி பைன்' என்றும் தான், 'ரப்புல் ஆலமீனாக' இருப்பதாகவும் பல்வேறு திருமறை வசனங்கள் மூலம் தான் அனைத்து உலகங்கட்கும் தான் அனைத்து படைப்பினங் களுக்கும் பொதுவான இறைவனென அறிவிக்கின்றான்.

உலக மறையாம் திருமறையின் விளக் கமாக வாழ்ந்து காண்பித்த நம் முடைய பெருமானார் முகம்மது ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை பரிபூரணத்துவம் நிறைந்த இஸ்லாமிய நெறி

# உயிரினங்களின் மீது அன்பு காட்டிய உத்தமர்!

*பெருமானார் (ஸல்) அவர்கள் தாமும் மிருகங்களின் மீது அன்பாக இருந்ததோடு. மக்களும் அவ்வாறு செய்ய வேண்டுமென்று போதித்தார்கள்.*

*ஒருநாள், ஒரு மனிதன் ஜமுக்காளத்தைச் சுருட்டிக்கொண்டு பெருமானாரிடம் வந்தான். "ஆண்டவனின் தூதரே! நான் மரங்கள் அடர்ந்த காட்டின் வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். பறவைக் குஞ்சுகளின் குரலைக் கேட்டேன் அவற்றைப் பிடித்து என் ஜமுக்காளத்தில் வைத்துக் கொண்டேன். அவற்றின தாய் என் தலையைச் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டு என்னுடன் வருகிறது'' என்றான் அவன்.*

*''அவற்றைத் தரையில் வை!'' என்று பெருமானார் கட்டளையிட்டார்கள். அவனும் அவ்வாறே செய்தான். அப்பொழுது பெருமனர் (ஸல்) அவர்கள், "இந்தத் தாய் பறவைக்குத் தன் குஞ்சுகளிடமுள்ள அன்பைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? என்னை அனுப்பிய ஆண்டவன் மீது ஆணையாகக் கூறுகிறேன். இந்தத் தாய்ப்பறவைத் தன் குஞ்சுகளை நேசிப்பதைவிட ஆண்டவன் தன் அடியார்களை அதிகமாக நேசிக்கின்றான். நீ எங்கிருந்து இவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தாயோ.. அந்த இடத்திலேயே இவற்றைக் கொண்டுபோய் விட்டுவிடு'' என்றார்கள்.*

**- பி. எம். அப்துல் கரீம்.**

யாகும்! பொதுவாக, இஸ்லாமிய நெறியை, 'இறைவனுக்கு மனிதன் செய்ய வேண்டிய பணி,' என்றும் 'அவனது படைப்பினங்களுக்கு மனிதன் செய்யவேண்டிய பணி,' என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்!

இறைவனுக்கு மனிதன் செய்ய வேண்டிய பணியான விசுவாசம், தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் போன்றவற்றில் ஏதாவது தவறுகள் நிகழ்ந்து விட்டால், இறைவனிடம் பாவ மன்னிப் புக் கேட்டால் இறைவன் மன்னிக்கலாம். ஆனால் ஒரு மனிதனுக்கு நாம் செய்த தீமைக்குப் பரிகாரம், அவன் நம்மை மன்னிக்கும் வரை கிடையாது! நாம் பரிபூரணமான இஸ்லாமியனாக வாழ்வது என்பது, அல்லாஹ்வுடைய கட்டளைக்குப் பணிந்து, அவனது படைப்பினங்களிடம் அன்பு பூண்டு வாழ்வதிலேயிருக்கிறது.

மனிதன் இறைவனுக்குரிய பணியைச் செய்து விட்டு, இறைவனின் படைப்பினங்கள் மீது அன்போடு, பணிவோடு நடக்கவில்லையென் றாலும்; படைப்பினங்கள் மீது பணிவோடு நடந்து விட்டு, இறைவனுடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லையென்றாலும் அதனாலே முழுமையான இஸ்லாமியனாகவும் இறைவனின் அன்பைப் பெற்ற வனாகவும் இருக்க முடியாது!

இஸ்லாமிய நெறியில் ஜீவன்கள் மீது எப்படி அன்பு பூண்டு வாழ வேண்டும், எவ்வாறு வாழ்வது இஸ்லாமிய நெறி என்பவற்றை, இறைவனுடைய படைப் பினங்கள் மீது மனிதன் ஆற்றும் பணியின் ஓர் அங்கமாகவுள்ள இக்கட்டுரையினை இவண் சுருக்கமாக விளக்கவுள்ளேன். இஸ்லாத்தைப் பற்றிப் பொதுவாக, அது உயிர்ப்பலியை அதிகம் விரும்பக்கூடிய மார்க்கமென்றும் கண்டிப்பாக மாமிசம் உண்ணவேண்டு மென்று கட்டளையிடு வதைப் போன்ற தொரு மாயையை உலகளவிலே ஏற் படுத்தியுள்ளோர் ஏனையோர். உண்மையது வன்று!

இஸ்லாம் மாமிசம் உண்பதைத் தடைச் செய்யவில்லை. அதற்காக கண்டிப்பாக மாமிசம் உண்டேயாக வேண்டு மென்று கட்டளையிடவு மில்லை! அதற்காக இஸ்லாமியர்கள், அனுமதித் துள்ள மாமிசங்களில் பறவையினங்களில் எல் லா வற்றையும் உண்பதுமில்லை ! மிருகங்களையும் பறவையினங்களையும் சட்ட திட்டங்களுக்குட் பட்டு, அறுத்து உண்ணவே கட்டளையிட்டுள் ளது இஸ்லாம்!. அது மாத்திரமல்ல; ஆடு, மாடு போன்ற அனுமதித்துள்ள மிருகங்களின் சில உறுப்புக்களையும் உதிரத்தையும் உண்ணக் கூடாது என்று தடுத்துள்ளது இஸ்லாம்! மாமிசங் களைக்கூட பக்குவப்படுத்தி உண்ணவே அனுமதித்துள்ளது இஸ்லாம்!

ஆனால், சிலபேர் ஏதோ தன்னை புலால் உண்ணாதவர்கள் என்றும் உயிர்களைக் கொல்வ

தாகாது - பாவ மானது - என்று சொல்லி, 'ஜீவ காருண்ய சங்கத்தார்' என்று தங்களை விளம்பரப் படுத்திக் கொள்வதோடு கடலிலுள்ள மச்சியினங் களைக்கூட உண்பது ஆகாதென்றும் வாதிக்கின் றனர். அவர்கள் மாமிசமோ, மச்சியினத் தையோ உண்ணாவிடின், அதனாலே நமக்கொன்றும் நஷ்டமில்லை! ஆனால், மாமிசங்களை - மச்சியி னங்களை உண் பவர்கள் தாழ்ந்தவர்கள், இழிந்த வர்கள், தீண்டத்தகாதவர்கள் என்றும் தாங்கள் இவைகளை உண்ணாததால் அதி உன்னதமான வர்கள் - மேலானவர்கள் - உயர்ந்தவர்கள் - தங்கள் சமயமே உலகில் தலைச் சிறந்தது என்றும் வாதிக்கும் போது, நாம் பதில் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றோம்.

உலகிலுள்ள பிராணிகளை, சாகப் பட்சிணி, மாமிசப்பட்சிணி, சர்வ பட்சிணியென மூன்றாகப் பிரித்துள்ளனர் கற்றறிந்தோர். மனிதனின் பல் அமைப் பில் 'சிங்கப்பல்' என்ற அமைப்புள்ளது. இது குறிப்பாக மாமிசம் தின்னக்கூடிய பிராணி களிடமும் உள்ளது. இந்த அமைப்பைவைத்துப் பார்க்கும்போது, இயற்கையாகவே மனிதனை, இறைவன் மாமிசப்பட்சிணியாகத்தான் படைத் துள்ளான் என்பது வெள்ளிடைமலை!

மேலும், இஸ்லாம் குறிப்பிட்டுள்ள மிருகங் களின் மாமிசங்களில் சிலவற்றை உண்பதைத் தடுத்தும், குறிப்பிட்ட பறவையினங்களின் மாமி சத்தையும், மச்சியினங்களில் சிலவற்றை உண்ப தைத் தடுத்தும் நடைமுறைச் சட்டம் வகுத்துள் ளது. இந்த சட்டதிட்டங் களை சிரமேற்கொண்டு, இஸ்லாமியர்கள் தங்கள் உணவுவகைகளை உண்கின்றனர். உலகிலுள்ள அனைத்தையும் மனிதனின் அவசியத்திற்குத்தான் படைத்துள் ளான் மனிதன். ஆனால், தேவையில்லாமல் புற்பூண்டுகளை, மரம், செடி, கொடிகளை வெட்டுவதையும் இஸ்லாம் தடுத்துள்ளது. அதேப்போன்று, மிரு கங்களை அதிக வேலை வாங்குவதும் வதை செய்வதும் தேவையில்லாமல் அவற்றை அறுப்பதும் இஸ்லாமிய மார்க்கத்தில் இடமில்லை! மனிதனின் தேவைகளுக்கு ஏற்றபடி அவைகளை உபயோகப்படுத்துவதில் தவறில்லை!

உயிர்களைக் கொல்வது பாவம்; அது ஆகாதது என்று வாதிக்கும் பெரியவர்கள் புற்பூண்டு, செடி, கொடி, மரம் போன்றவை களுக்கு உயிர் இருப்பதை ஏனோ உணர்வ தில்லை! நம் நாட்டைச் சார்ந்த ஜெகதீச சந்திர போஸ், செடி, கொடி, மரங்களுக்கும் உயிர் இருப் பதை கண்டுபிடித்துக் காட்டினார். மேலும், அப்படிப்பட்ட செடி, கொடிகள், தங்கள் இனத்தைப் பெருக்க வந்த கத்தரிக்காய், மிளகு, பூசணி, வெள்ளரிக்காய், மாங்காய் போன்ற வற்றை உண்பதும் அவர்கள் வாதப்படி பாவமே யாகும்!

நம்முடைய தமிழகத்திலே வாழ்ந்த சித்தர்கள், அக்காலத்திலிருந்த சமுதாய மூடப்பழக்க வழக்கங்களை, தீண்டாமை போன்றவற்றை பல்வேறு மனிதன் சிந் திக்கத்தகும் உதாரணங்கள் மூலம் தங்கள் பாடல்களில் பாடிக்காண்பித் துள்ளார்கள். தான் புலால் உண்ணாதவன்; ஆகவே புலாலை உண்ணக் கூடியவர்களெல்லாம் தரம் குறைந்தவர்கள், இழிந்தவர்கள் என்று வாதிக்கும் அவர்களைப்பார்த்து, 'சிவவாக்கியர்' யென்னும் சித்தர் கீழ் கண்டவாறு பாடுகின்றார்!

**''மீனிறைச்சி தின்ற தில்லையென்றும்**
**மின்றும் வேதியர்,**
**மீனிருக்கும் நீரிலோ மூழ்வதுங் குடிப்பதும்...!**
**மானிறைச்சி தின்றதில்லையென்று**
**மின்றும் வேதியர்,**
**மானுரித்த தோலலோ மார்பு**
**நூல்யணிவதும்...!**
**ஆட்டிறைச்சி தின்ற தில்லையன்று**
**மின்றும் வேதியர்,**
**ஆட்டிறைச்சி யல்லவோ யாகம்**
**நீங்களாற்றலே...!**
**மாட்டிறைச்சி தின்ற தில்லையன்று**
**மின்றும் வேதியர்,**
**மாட்டிறைச்சி யல்லவோ மரக்கறிக் கிடுவது...!"**

இவ்விரு செய்யுட்கள் மூலம் மனிதனின் சிந்தனையை நாடோறும் அவனையறியாம லேயே எப்படியெல்லாம் செயல் படுகிறான் என்பதை மீனை உணவாக உண்ணாவிட்டாலும் வேதத்தைக் கற்றறிந்தோர், மீன் வாழக்கூடிய ஆறு, குளம், கிணறு போன்றவற்றின் நீரை, பூஜை போன்றவற்றிற்குஉபயோகிப்பதும், தன்உடலைச் சுத்திகரிக்க அந்நீரையே பயன்படுத்துவதும்; மான் இறைச்சி உண்பது ஆகாதது என்று வாதிக்கும் வேதத்தைக் கற்றறிந்தோர், மானின் தோலைத் தன்னுடைய பூணூ லில் போடுவதும் எந்த வகையில்யென்றும்; ஆட்டிறைச்சியை

உண்பது உகந்த தல்லயென்னும், வேதத்தைக் கற்றறிந் தோர் ஆட்டினை யாகம் செய்து, அந்த மாமிசத்தைப் புசிப்பதும் நியாயமோ? மாட்டி றைச்சி உண்பதை மறுக்கும் வேதியர்கள், அம்மாடு இறந்தபின், அதன் உறுப்புகளை உரமாகப் போட்டு, அதன் மூலம் கிடைக்கும் மரக்கறிகளை மட்டும் மறுக்காமல் உண்பதேன்? போன்ற பல்வேறு சிந்தனையைக் கிளறுகின்ற வாதங் களையெடுத்து வைத்து, வேதியர்களைச் சிந்திக் கச் சொல்கிறார் சிவவாக்கியர்!

பிற மதத்தினரின் 'மனு' போன்ற சட்டங் களின்படி, 'ஒரு பிராமணன், மந் திரத்தினால் கொல்லப்பட்ட மிருகாதிகளின் மாமிசங்களை புசிக்கலாம்!' (மனு அத். 5, சு. 27) என்று சொல்லப் பட்டிருக்கின்றது. பிராமணர்கள் நம் நாட்டிற்கு மத்திய ஆசியாவிலிருந்து - வந்தபோது, ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டும் பால், புலால் போன்றவற்றை உணவாகப் பயன்படுத்தினார்கள் என்றும் வரலாறு மூலம் அறிகின்றோம்!

வேள்விகளை நடத்தி, கடவுளுக்கு கோழி, பன்றி, ஆடு போன்றவற்றை பலியிட்டும் 'உள்ளனர். பலியிடுதல் நாட்டில் சட்டத்தின் மூலம் தடுக்கப் பட்டபின் தான் கோவில்களில் பலியிடுதல் அறவே நிறுத்தப்பட்டது! பலியிடுதல் நின்றாலும், இன்றும் கோவில்களிலுள்ள பலி பீடங்கள் அப்படியே உள்ளன!

மேலும், மிருகங்களின் இரத்தத்திலிருந்து உற்பத்தியாகும் பாலை அதிகம் அருந்தும் இவர்கள், பால் குடிப்பதை பாவம் என்று ஏனோ கருதுவதில்லை! ஒரு வேளை, பால் உதிரத் திலிருந்து உற் பத்தியானாலும் வெண்மையாகவும் சுவை யாகவும் இருப்பதாலோ என்னவோ தெரியவில்லை !

இஸ்லாம் சொல்லும் நடைமுறைச்சட்டங்கள் உலகளாவிய சட்டங்களாகத் தான் இருக்க முடியும். காரணம், இஸ் லாம் பாலைவனப் பிரதேசத்திற்கும் பனிப் பிரதேசத்திற்கும் தகுந்த சட்டங்களைத்தான் சொல்கின்றது. வட, தென் துருவங்களிலுள்ள மனிதர்களிடம் மாமிசம், மீன், உண்ணக்கூடாதென்று தடுக்கவும் முடியாது; அது சாத்தியமு மில்லை! ஆக இஸ்லாமியக் கொள்கை கள், நடைமுறைச் சட்டங்கள் உலகி லுள்ள அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக எந்நாட்டவரும் எக்காலத்தவரும் பின்பற்றும்படியாகவும் உள்ளது.

இஸ்லாம் நம் இந்திய நாட்டிற்கு வரு முன்பே, இந்த நாட்டில் கடவுளின் பேரால், குல தேவதைகளின் பேரால் நரபலியிட்டும், ஆடு, கோழி, பன்றி போன்றவற்றைப் பலியிட்டும் வந்தனர். இதற்காக ஒவ்வொரு பல தெய்வ வணக்கத்தாரின் வழிபாடு இடங்களிலும் பலிபீடம் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இன்றும் உள!

மக்கள் கடவுளை வணங்குவதை விடுத்து, உயிர் பலியை அளவுக்கு அதிகமாகச் செய்து வந்த போதுதான் உயிர் பலி அறவே ஆகாதது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டு வாழ வேண்டும், சிறு எறும்பு போன்ற ஜீவ ராசிகளைக்கூடக் கொல்வது கூடா தென்ற கொள்கைக் கோட்பாடு களை யுடைய ஜைன, புத்தமதக் கருத்துக்கள் வர்த்தமான மகாவீரரால், கௌதம புத்தரால் உபதேசிக்கப்பட்டது. இவர்களுடைய கொள்கை, உயிர்பலி அறவே கூடாது என்பதாகும்! இஸ்லாம் நர பலியையும் தேவையற்ற உயிர்பலியையும் கண்டிக்கின்றது!

பசுவதையைச் சட்டத்தின் மூலம் நாட்டில் அமலாக்க வேண்டுமென்று உண்ணா நோன்பும் நாடோறும் அது பற்றி பேசக்கூடியவர்கள், நாட்டில் நடை பெறும் வகுப்பு கலவரங்களில் மரணிக்கின்ற மனிதர்களின் உயிர்களைப்பற்றிக் கண்ணீர் விடுவதேயில்லை! ஒருவேளை கோவிலு னுள் கீழ்சாதி மக்கள் வந்து விட்டால், அதனால் ஏற்படும் தீட்டை, பசு மூத்திரத்தை விட்டு சுத்தீகரித்தால் நீங்கிவிடும் என்ற மனுவின் சட்டத்தைப் பார்த்து, மனிதனைவிடப் பசு மேலானது என்ற நினைப்பில் மனிதன் ஆயி ரக் கணக்கான பேர்கள் இறப்பதைப் பற்றிச் சிந்திக் காமலும் அதைத்தடுத்து நிறுத்த வழிவகை காணாமலும் இருக்கின்றார்கள் போலும்!

இஸ்லாம், ஒரு ஜீவ காருண்ய மார்க்கம்! இஸ்லாம் எந்நாட்டவரும், எக்காலத்தவரும் பின்பற்றத்தகும் நடைமுறைச் சட்டங்களை உள்ளடக்கிய மார்க்கம்! ஆகவே, இஸ்லாத்தின் வழிநின்று, ஜீவ காருண்யத்தைப் பேணிக் காப்போம்! ஆமீன்! ஆமீன்! யாரப்பில் ஆலமீன்!!

வாழ்க இஸ்லாம்!

வளர்க நம் கொள்கை !!

- இ.இ.மு. சங்க **12**-வது ஆண்டு விழா மலரிலிருந்து

தொடர்



# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## மும்பை புறநகர் இரயில் தொடர் குண்டு வெடிப்பு வழக்கு 11 ஜூலை 2006 (7/11)

முஸ்லிம்களிடம் கட்டாயப்படுத்தி வாங்கப் பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் ஏற்கப் பட்டன. அந்த ஒப்புதல் வாக்குமூலங்களை திரும்பப்பெறும் கோரிக்கைகள் மறுக்கப்பட்டன.

அறிவியல்பூர்வ ஆதாரமான செல்போன் நிறுவனங்களில் கணிணியில் சேமித்து வைக் கப்பட்டிருந்த கைபேசி அழைப்பு விவரங்களின் பதிவுகள் நிராகரிக்கப்பட்டன. சந்தேகத்திற்குரிய சாட்சியத்தின் வாய்மொழி சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

*11 ஜூலை 2006 அன்று 18:23 மணியிலிருந்து 18:28 மணிக்குள்ளாக (அதாவது மாலை 6.23 மணியிலிருந்து மாலை 6.28க்குள்ளாக) வரிசை யாக வெடித்த குண்டுகள் மும்பை புறநகர் பகுதியின் மேற்கு பிரிவினை உலுக்கிவிட்டது. மாதுங்கா, மாஹிம், பாந்த்ரா, கார், ஜோகேஷ்வரி, போரிவாலி, மிர்சாசாலை இரயில் நிலையங்களில் இந்த குண்டுகள் வெடித்தன. இந்த குண்டு வெடிப்பில் 187 நபர்கள் உயிரிழந்தனர். 829 பேர் படுகாயமடைந்தனர். இரயில் நிலையத்தின் சொத்துக்கள் பெரிய அளவில் நாசமடைந்தன.*

*இந்த வழக்கை விசாரணை செய்த மஹாராஷ்டிராவின் தீவிரவாதத் தடுப்புப்படை 13 முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தது. இன்னும் 15 பேர் தலைமறைவாகிவிட்டதாகவும் அதில் 10 பேர் பாகிஸ்தானியர்கள் என்றும் குற்றப்பத்திரிகையில் காட்டப்பட்டிருந்தது. தீவிரவாதத் தடுப்புப் படையினர் இந்த குண்டுவெடிப்புகள் சிமி என்கிற இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின்* (Students Islamic Movement of India) *கைவேலை என்றும் லஷ்கரே தொய்பா இயக்கத்தின் ஆதரவுடன் அவர்கள் இதனை செய்தனர் என்றும் கூறினர்.*

*ஆனால் மிகுந்த ஆர்வத்துடன் வேலை பார்த்து மும்பை குற்றப்பிரிவு காவல்துறையினர் (க்ரைம் பிராஞ்ச்) சில நாட்களுக்குள்ளாக இந்தியன் முஜாஹிதீன் என்ற ஒரு புதிய அமைப்பினை வெளிக் கொணர்ந்து, இந்த குண்டு வெடிப்பு களுக்கு அந்த இயக்கத்தினர் தான் பொறுப்பு என்று கூறினர். இந்த குண்டு வெடிப்புகளை திட்டமிட்டது, செயல்படுத்தியது குறித்த இரண்டு விசாரணைக் குழுவின் கூற்றுகளும் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தன. எனினும் இந்த இரண்டு விசாரணை நிறுவனங்களின் மோதல்களும் இறுதி கட்டத்திற்கு வந்தபோது இரண்டு நிறுவனங் களுக்குமிடையே சமரசம் செய்து வைக்கப் பட்டது. மிகத்தெளிவாக ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையின் அதட்டல்களுக்கு பயந்து மும்பை குற்றப்பிரிவு காவல்துறை ஒதுங்கிக் கொள்ள தீவிரவாதத் தடுப்புப்படையினர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையே இன்று வரை எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

*தீவிரவாதத் தடுப்புப்படையின் குற்றப் பத்திரிகையில் பின்வரும் பெயர்கள் உள்ளன:–*

- *கமால் அஹமத் அன்சாரி (ஏ1)*
- *தன்வீர் அன்சாரி (ஏ2)*

- முஹம்மது ஃபைசல் ஷேக் (ஏ3)
- இஹ்திஷாம் சித்திகி (ஏ4)
- முஹம்மது மஜீத் (ஏ5)
- ஷேக் முஹம்மது அலீ ஆலம் (ஏ6)
- முஹம்மது ஸாஜித் அன்சாரி (ஏ7)
- அப்துல் வாஹித் ஷேக் (ஏ8)
- முஸம்மில் ஷேக் (ஏ9)
- சுஹைல் ஷேக் (ஏ10)
- ஸமீர் அஹ்மத் ஷேக் (ஏ11)
- நவீத் ஹுசைன் கான் (ஏ12)
- ஆசிஃப் கான் பஷீர் கான் (ஏ13)

(இதற்கு பின்னர் இந்த குற்றம் சாட்டப் பட்டவர்கள் ஏ1, ஏ2 என்று இந்த புத்தகத்தில் குறிப்பிடப்படுவார்கள்.)

இந்த குற்றப்பத்திரிகையின் தரத்தை வைத்து அளவிடுகையில், இது தாக்கல் செய்யப்பட்ட ஆரம்ப கட்ட நிலையிலேயே இது நிராகரிக்கப் பட்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. அதற்கு பதிலாக விசாரணை நீதிமன்றத்தில் இந்த வழக்கு முழு அளவில் நடந்து ஒரே ஒருவரைத் தவிர மற்ற அனைவருக்கும் தூக்கு தண்டனை யோ, ஆயுள் தண்டனையோ வழங்கப்பட்டது.

பெரிய அளவிலான இந்த தீர்ப்பு 1839 பக்கங் களைக் கொண்டிருந்தது. அது சுருக்கப்பட்டு அதன் சாராம்சமும் முக்கிய அம்சங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

### மிகவும் அங்கீகரிக்கப்பட்ட சாட்சியான செல்போன் நிறுவனங்களின் கணினியில் பதியப்பட்டிருக்கும் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் (Call Detail Records) நிராகரிக்கப்பட்டன

இன்றைய நவீன செல்போன் மற்றும் முன்னேறிய தொழில் நுட்ப காலத்தில் ஒரு நபர் ஒரு குற்றத்தில் ஈடுப்பட்டாரா இல்லையா என்பதை கண்டறிய மிக முக்கியமான ஆதாரப் பூர்வமான சாட்சியம் செல்போன் நிறுவனங் களின் கணினியில் பதியப்பட்டிருக்கும் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள். குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலர் தாங்கள் குற்ற மற்றவர்கள் என்பதை நிரூபிக்க தங்களது கைபேசிகள் அழைப்பு விவர பதிவுகளை தீவிரவாதத் தடுப்புப்படையினர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட வேண்டும் எனவும் அது குண்டு வெடிப்பு நடந்த நேரத்தில் அவர்கள் எங்கிருந்தார்கள் என்பதை நிருபிக்க உதவும் என வும் கோரி மனுக்களை தாக்கல் செய்தனர். ஆன ால் நீதிமன்றம் அந்த மனுக்களை தள்ளுபடி செய்தது.

2013 இல் உயர்நீதிமன்றத்தின் தலையீட் டிற்கு பின்னரே நீதிமன்றத்தில் செல்போன் நிறுவனங்களின் கணினியில் பதியப்பட்டிருக்கும் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் தரப்பட்டன. சம்பந்தப்பட்ட செல்போன் நிறுவனங்களின் அதிகாரிகளும் விசாரிக்கப் பட்டனர். ஆனாலும் இந்த அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலரின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளில் குண்டுவெடிப்பு நடைபெற்ற நேரத்தில் அவர்கள் இருந்ததாக சுட்டிக்காட்டிய இடம், காவல்துறையினர் குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறித்து குறிப்பிட்டிருந்த இடத்திற்கு ஒத்து போகவில்லை.

- 11 ஜூலை 2006 அன்று இரயில் ஒன்றில் அவர் குண்டு வைத்ததாகவும் அந்த குண்டுகள் வெடித்ததாகவும் கூறப்படும் நாளில் அவர் தன்னுடைய அலுவலகத்தில் முழு தினமும் அதாவது காலை 09.05 முதல் 18.15 வரை இருந்ததாக ஏ13இன் கைபேசி எண் 9867109894 இன் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் காட்டின. மேலும் அந்த தகவல்கள் குற்றம் சாட்டப்பட்டவர் 6, ஜூலை 2006 மற்றும் 9, ஜூலை 2006 இல் சிவாஜி நகருக்கோ (கோவாண்டி) அல்லது பாந்த்ராவுக்கோ செல்ல வில்லை என்பதையும் உறுதி செய்தது. இந்த இடங் களுக்கு குற்றம் சாட்டப்பட்டவர் தன் சதித் திட்டத்தின் ஒரு பகுதியாக அந்த நாட்களில் சென்றிருந்தார் என காவல்துறையினர் கூறியிருந் தனர். இந்த கைபேசி அழைப்புகளின் தகவல்கள் உண்மையென ஏர்டெல் நிறுவன நோடல் அதிகாரியைக் கொண்டு நிரூபிக்கப்பட்டது.

இதைத் தவிர்த்தும் பல போதுமான சாட்சி யங்கள் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவு களை உறுதி செய்தன. குற்றம் சாட்டப்பட்ட வரின் வருகைப்பதிவு, அவருடன் அவருடைய



அலுவலகத்தில் வேலை பார்த்தவர்கள், குற்றம் நடைபெற்ற நேரத்தில் அவரை அவருடைய அலுவலகத்தில் சந்தித்தவர்கள், அந்த நேரத்தில் அவர் கைபேசியில் தொடர்புகொண்ட நபர் களின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் போன்றவை இதனை உறுதி செய்தன. ஆனால் அரசு தரப்பினர் சம்பந்தப்பட்ட இந்த தகவல்களை நீதிமன்றத்தில் அளிக்கவுமில்லை, சாட்சிகளை விசாரிக்கவுமில்லை.

- ஏ1 இன் கூற்றுப்படி ஜூலை 9 முதல் ஜூலை 12 வரை அவர் பிஹாரில் உள்ள மதுபானி மாவட்டத்தில் இருந்தார். ஆனால் அவர் மும்பையில் இந்த சதித்திட்டத்தை தீட்டிக் கொண்டிருந்ததாக கூறப்பட்டது. குறிப்பாக 11 ஜூலை 2006 இல் அதாவது மும்பையில் குண்டு வெடித்த நாளில் அவர் மதுபானி மாவட்டத்தில் உள்ள பசோபட்டி என்ற கிராமத்தில் இருந்தத தாக கூறுகிறார்.

மேலும் அவர் 11 ஜூலை 2006 அன்று நான்கு மணி நேரம் நேபாளத்திற்கு சென்ற தாகவும் குறிப்பிடுகிறார். இவருடைய இந்த கூற்றுகளை அவருடைய கைபேசி அழைப்பு களின் தரவுகள் உறுதிப்படுத்தின. அதனை பார்தி ஏர்டெல் நிறுவன நோடல் அதிகாரியும் உறுதிப் படுத்தினார். ஏ1இன் கூற்றினை இந்திய–நேபாள எல்லையில் உள்ள கண்காணிப்பு பதிவேட்டில் உள்ள தகவல்களும் உறுதிப்படுத்தின. அதில் அவருடைய பெயர், அவர் நுழைந்த நேரம், அவர் வெளியேறிய நேரம், அவருடைய ஓட்டு னர் உரிம எண், அவருடைய இரண்டு சக்கர வாகனத்தின் எண் போன்றவை மிகச்சரியாக பதியப்பட்டுள்ளன. ஆனால் அரசு தரப்பு இந்த மறுக்கவியலாத சான்றுகளை நீதிமன்றத்தில் காட்டவேயில்லை.

- ஏ4–இன் கைபேசி எண் 9867139179. இவருடைய கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் 2006, அரசு தரப்பு கூறியது போல் அல்லாமல் ஜூலை 7 முதல் 11 வரை இவர் வேறு இடத்தில் இருந்ததை சுட்டிக்காட்டியது. கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளில் இருந்தவை அவர் அந்த நேரத்தில் அவர் தன் வியாபார தொடர்புடையவர்களுடன் பேசிய தையும், உத்தர பிரதேசத்தில் இருந்த அவரின் மனைவியிடமும் தாயாரிடமும் பேசியதையும் உறுதிப்படுத்தின. குண்டு வெடிப்பு நடந்த, மற்றும் சர்ச் கேட்டில் குற்றம் சாட்டப்பட்டவர் குண்டு வைத்தார் என்று சொல்லப்பட்ட நேரமான 16.30 மற்றும் 19.14 மணிக்கு அவர் மிரா சாலையில் உள்ள தன் வீட்டில் தான் இருந்தார் என்பதும் உறுதியானது.

நீதிமன்றத்தில் செல்போன் நிறுவன அதிகாரியும் தனது சாட்சியத்தில் இதனை உறுதி செய்திருந்தார். சில சாட்சியங்களை விசாரணை செய்தும், அவர் கைபேசியில் தொடர்பு கொண்ட நபர்களின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை ஆய்வு செய்தும் குற்றம் சாட்டப் பட்டவரின் கூற்று உண்மை தானா என்பதை சரிபார்த்து இருக்கலாம். ஆனால் அரசு தரப்பு அவ்வாறு செய்யவில்லை.

மேலே கூறியுள்ள மூன்று நபர்களும் ஒருவருக்கொருவர் தொடர்புடன் இல்லை என்பதையும் அவர்களின் கைபேசி அழைப்பு களின் தகவல் பதிவுகள் காட்டின. இந்த ஆதாரம் ஒன்றே போதும், அரசு தரப்பு கதையை ஒன்று மில்லாமல் செய்ய. ஆனால் நீதிமன்றம் துர திருஷ்டவசமாக இந்த முக்கியமான சாட்சி யத்தை பின்வரும் காரணங்களின் அடிப் படையில் நிராகரித்தது.

- செல்போன் நிறுவனங்களின் நோடல் அதிகாரிகள் (Nodal Officers) தொழில்நுட்ப வியலாளர்கள் இல்லை. எனவே, இந்த கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை நிரூபிக்க இவர்கள் தகுதிவாய்ந்தவர்கள் கிடையாது.

- கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள்

அந்த கைபேசிகளின் இருப்பிடத்தை தான் காட்ட முடியுமே தவிர குற்றம் சாட்டப்பட்டவர்களை அல்ல, காரணம் செல்போன் என்பது அந்த நபரின் உடல் உறுப்பல்ல.

இந்த இரண்டு விஷயங்களிலும் நீதிமன்றம் தெளிவாக தவறிழைத்துள்ளது. காரணம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இந்த செல்போன் நிறுவனங்களின் நோடல் அதிகாரிகளின் சாட்சியங்கள் ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. உலகம் முழுதும் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் ஒரு நபர் ஓரிடத்தில் இருந்தாரா இல்லையா என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரமாக அதற்கு முரண்பட்ட ஆதாரம் ஏதாவது இல்லாதவரை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

ஆனால் அதற்கு பதிலாக மேலே கூறியுள்ள படி இந்த வழக்கில் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை உண்மைப்படுத்தும் பல ஆதாரங்கள் இருந்தன. ஆனால், அரசுத்தரப்பு எல்லோரும் அறிந்த வெளிப்படையான சில காரணங்களுக்காக மறுக்கவியலாத, தேவையான அந்த ஆதாரங்களை சாட்சியங் களாக கொண்டு வரவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை பொறுத்த வரையில் அவற்றை எளிதாக பெற முடிவதில்லை. விசாரணை நீதிமன்றம் தங்களின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை பெற்றுத்தர வேண்டும் என்ற குற்றம் சாட்டப் பட்டவர்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டது. அதன் பின்னர், அவர்கள் உயர்நீதிமன் றத்தை அணுகினர். உயர் நீதிமன்றத்தின் உத்தர விற்கு பின்னரே அவர்களில் சிலருக்கு கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் கிடைத்தன. ஆனால் பெரும்பாலும் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் அரை குறையாக இருந்தன. ஏ11இன் விஷயத்தில் அது மோசடியானது என சந்தேகிக்கப்படுகிறது.

ஏ9 தன்னுடைய கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை பெற்றுக்கொள்ளவே இல்லை. ஏ1இன் விஷயத்தில் எம்.டி.என்.எல். (Mahanagar Telephone Nigam Limited) நிறுவனம் பழைய தகவல்களை எடுக்க இயலவில்லை என்று கூறி விட்டது. எம்.டி.என்.எல் நிறுவனத்திற்கு அழுத்தம் தந்து தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களின் உதவியோடு அந்த தகவல்களை மீட்டெடுத்து நீதிமன்றத்தில் அளிக்க வைப்பதில் நீதிமன்றம் வெற்றி கண்டிருக்க வேண்டும். காந்த நாடாக் களில் (Magnetic Tapes) பதிவான பழைய தகவல் களை பாரதி ஏர்டெல் நிறுவனம் எடுத்து தந்ததைப் போல் தகவல்களை எடுத்திருக்கலாம். ஆனால் நீதிமன்றம் அவ்வாறு முயற்சி செய்ய வில்லை.

ஏ6, ஏ7, ஏ8, ஏ12 நபர்களின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் அவர்களின் கூற்று உண்மையென அந்தந்த செல்போன் நிறுவனங்களின் நோடல் அதிகாரிகளை விசாரித்ததில் உறுதியானது. ஆனால் நீதிமன்றம் அந்த கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் சாட்சியங்களை மேலே சொல்லியுள்ள அதே இரண்டு காரணங்களின் அடிப்படையில் தள்ளுபடி செய்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் முழுமையாக இல்லை அல்லது மோசடியாக உருவாக்கப்பட்டிருந்தது என கருதப்பட்டவர்கள் விஷயத்தில் நீதிமன்றம் அந்த குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் அழைத்திருந்த அல்லது அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த நபர்களின் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை ஆய்வு செய்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் தரப்பினை நிரூபிக்க அனுமதித்திருக்க வேண்டும். உண்மையில் நீதிமன்றமே இதனை செய்திருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக நீதிமன்றம் அவ்வாறு செய்யவில்லை.

எனவே, நீதிமன்றம் இந்த ஆதாரப்பூர்வமான சாட்சியங்களான கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகளை தவிர்த்தும் புறக்கணித்தும் கடும் தவறிழைத்துள்ளது.

## ஏ5–இன் வழக்கு

ஏ5–இன் கைபேசி அழைப்புகளின் தகவல் பதிவுகள் குறித்து தீர்ப்பில் விவாதிக்கப்பட வில்லை என்றாலும் குற்றம் நடந்த ஜூலை 2006 இல் குற்றம் சாட்டப்பட்டவர் மும்பையில் இருக்கவில்லை, கல்கத்தாவில் தான் இருந்தார் என்பதற்கும், மே 2006இல் அவர் கல்கத்தாவை விட்டு பங்களாதேஷின் எல்லைக்கு அருகில் உள்ள போன்காவூன் என்ற இடத்தில் சென்று 6



பாகிஸ்தானியர்களை கொண்டு வரவில்லை என்பதற்கும் போதுமான ஆவண சான்றுகள் இருந்தன.

குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சியமான உறுதிமொழி ஆவணத்திலும், அவருடைய வியாபாரக் குறிப்புகளைக் கொண்ட நாட் குறிப்பிலும் (வியாபார டைரியில்) உள்ளதை ஆய்வு செய்ததில் அவர் ஜூலை 8, 9 மற்றும் 11ம் தேதிகளில் கல்கத்தாவில் அவருடைய கடையில் தான் காலை முதல் மாலை வரை இருந்தார் என்பது தெளிவானது. அவர் 9ம் தேதி இரவு முதல் 10ம் தேதி காலை வரை மைத்துனன் வீட்டில் இருந்தார். 10ம் தேதி முழுவதும் தன் சகோதரனின் மகளின் நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் அவர் மூழ்கிக்கிடந்தார். 11ம் தேதியை பொறுத்தவரை அவர் கல்கத்தாவில்தான் இருந்தார் என்பதற்கு அவரின் வியாபார நாட் குறிப்பு மட்டுமன்றி வேறு சில மறுக்கமுடியாத ஆதாரத்தையும் அவர் வைத்திருந்தார். அன்றைய தினம் அவர் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியில் ஒரு பாலிசி எடுத்திருந்தார். அதற்கான தொகையை அவர் ரொக்கப்பணமாக பாலிசி முகவரிடம் (ஏஜெண்ட்) நேரடியாக செலுத்தியிருந்தார்.

குற்றம் சாட்டப்பட்டவர் போன்காவூன் என்ற இடத்திற்கு சென்று ஆறு பாகிஸ்தானியர்களை குற்றமிழைக்க அழைத்து வந்ததாக சொல்லப்பட்ட மே 2006இன் 3வது வாரம் முழுவதும் அவர் கல்கத்தாவில் தான் இருந்தார் என்பதை நிரூபிக்க அவர் தன்னுடைய வியாபார நாட்குறிப்பினை சமர்ப்பித்திருந்தார். அது தினசரி பராமரிக்கப்பட்டு வந்த நாட்குறிப்பு. அதில் மிக முக்கியமான சாட்சியமாக அவர் தினசரி நேரடியாக ஸஹாரா வங்கிக்கு சென்று பணத்தை டெபாசிட் செய்ததும் குறிப்பாக மே 2006இன் 3வது வாரத்தில் அவர் வங்கியில் நேரடியாக சென்று பணத்தை டெபாசிட் செய்திருந்ததும் உறுதியானது.

இப்படி தேவையான பதிவேடுகளை போதுமான அளவு சமர்ப் பித்திருந்தும், நீதிமன்றம் அவருடைய கூற்றை அவர் அவருடைய மைத்துனரையும், சகோதரரையும் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்று கூறி நிராகரித்துவிட்டது.

## ஒப்புதல் வாக்குமூலங்கள்

ஒட்டுமொத்த அரசுத்தரப்பு வாதமும் குற்றம் சாட்டப்பட்ட 13 நபர்களில் 11 நபர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தையே சுற்றி சுற்றி வந்தது. அனைவரும் அறிந்த சட்டக்கூறு என்னவென்றால் ஒப்புதல் வாக்குமூலம் என்பது குற்றம் சாட்டப்பட்டவர் அவராக விரும்பி அளிப்பது. காவல்துறையினர் மிரட்டியோ, கட்டாயப் படுத்தியோ, அசிங்கப்படுத்தியோ, சித்ரவதைப் படுத்தியோ ஒப்புதல் வாக்கு மூலத்தை பெறக் கூடாது. ஆனால் இந்த வழக்கில் ஒப்புதல் வாக்கு மூலங்கள் தானாக விரும்பி அளிக்கப்பட்டதா என்பது குறித்து தீவிர சந்தேகங்கள் பல்வேறு காரணங்களால் எழுகின்றன. அவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- ஏ1இலிருந்து ஏ4 வரையும் ஏ9இலிருந்து ஏ11 வரையும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலங்கள் இரண்டு மாத கால தாமதத்திற்கு பின்னரே பெறப்பட்டன. ஏ5 இலிருந்து ஏ7 வரையும் மற்றும் ஏ12க்கும் ஒப்புதல் வாக்குமூலம் பெற 25 நாட்கள் தாமதமாகியது.

- ஏ1 இலிருந்து ஏ4 வரையும் ஏ9 இலிருந்து ஏ11 வரையும் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் காவல்துறையின் காவலில் இரண்டு மாதங்கள் இருந்தனர். அவர்கள் அப்போது ஒப்புதல் வாக்குமூலம் தர விரும்பவில்லை என்பது தெளிவு. ஒருவேளை இந்த கால கட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களை வற்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலம் பெற விரும்பியிருந்தால் அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களை கிரிமினல் சட்டம் சி.ஆர்.பி.சி.யின் பிரிவு 164இன் கீழ் நீதிபதியின் முன்நிறுத்தி வாக்குமூலம் பெற வேண்டியது அவசியமாகிறது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்....



# பெட்ரோல் குண்டு வீச்சுகள்

## காவல்துறை இந்தக் கோணத்திலும் அணுகிப் பார்க்கலாமே!

**வலைதளங்களில் பரவி வரும் செய்தி ஒன்று தந்திடும் விபரங்கள் புறந்தள்ள முடியாததாக இருக்கிறது. அந்தச் செய்தி தரும் தகவலில் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க கும்பல் தங்கள் அரசியல் ஆதாயத்துக்காக நடத்திய நாடகங்கள் தேதிவாரியாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.**

➤ **செய்தி-1 :** *கோவில் சொத்து தகராறில் பிரச்சினையை திசை திருப்ப தன் விட்டில் தானே பெட்ரோல் குண்டு விசிய திருவேற்காடு பகுதி பா.ஜ.க. பிரமுகர் பரமானந்தம் கடந்த 2017ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 2-ந்தேதி கைது செய்யப்பட்டுள்ளார்.*




➤ **செய்தி-2 :** *காருக்கு தாங்களே தீ வைத்து விட்டு நாடகமாடிய இந்து மக்கள் கட்சியினர்*




*கைது. இந்தச் சம்பவம் திருவள்ளூரில் 2013ஆம் ஆண்டு. ஜூலை 7 அன்று நடைபெற்றுள்ளது.*

➤ **செய்தி-3 :** சென்னை மதுரவாயலிக் தனது காருக்கு தானேதிவைத்துவிட்டு மர்ம நபர்கள்




எரித்துவிட்டதாக நாடக மாடிய பா.ஜ.க. மாவட்டச் செயலாளர் சதிஷ்குமாரை போலிஸார் கைது செய்தனர். இது நடந்தது 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 16!

➤ **செய்தி-4 :** சொந்த வாகனத்தை தானே எரித்து தீவிரவாதிகள் சதி என நாடகம். கோபியில் இந்து அதிரடிப் படை நிர்வாகி கைது. இது நடந்தது 2020 ஆம் ஆண்டு, அக்டோபர் 6-ந் தேதி




➤ **செய்தி-5 :** விளம்பரத்திற்காகவும் கட்சியில் பதவி உயர்வு கிடைக்கவும் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு, பள்ளி வாசல் கட்ட எதிர்ப்பு தெரிவிப்பதால் தன்மீது பெட்ரோல்




குண்டு வீசப்பட்டதாக நாடகமாடிய பா.ஜ.க விருதுநகர் நிர்வாகி சக்திவேல் மீது நடவடிக்கை எடுக்க மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சி எஸ்.பி. அறுவகைத்தில் மனு. இந்தச் சம்பவம் குறித்து செய்தி வெளி வந்த தேதி 2021ஆம் ஆண்டு, ஜூலை 1ந் தேதி!

➤ **செய்தி-6 :** பா.ஜ.க. தலைவர் பிரத்யூஸ் மணி திரிபாதி தனக்குத்தானே தாக்கிக் கொண்டு




அதன்மூலம் தனது எதிரிகளுக்கு காந்தண்டனை வாங்கித்தார நினைத்து தன்னைத்தானே குத்திக் கொண்டார். ஆனால் பரிதாபமாக அவர் இறந்து போனார். இந்தப் பரபரப்பு தகவல் வந்தது 2013ஆம் ஆண்டு, டிசம்பர் 11-ந்தேதி

➤ **செய்தி-7 :** பிரபலம் ஆவதற்காக தனது கார்மீது பெட்ரோல் குண்டு வீசவைத்த இந்து அமைப்புத் தலைவர்: போலிஸ் விசாரணையில்



பிரபலம் ஆவதற்காக தனது கார் மீது

பெட்ரோல் குண்டு வீசவைத்த இந்து அமைப்பு தலைவர்

போலீஸ் விசாரணையில் அம்பலம்

வெடிகுண்டு புரளி

பிரபலம் அடைய...

சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற தேவையில்லை

அம்பலம்! இந்தச் சம்பவம் தொடர்பான செய்தி ஏடுகளில் வெளிவந்தது *ஏப்ரல் 10-ந் தேதி*

➤ **செய்தி-8 :** இது பொன்னேரியில் நடந்த சம்பவம் குறித்து ஜூலை 7-ந் தேதி வெளிவந்த செய்தி. போலீஸ்பாதுகாப்புக்காகதன்காரிலேயே



விபத்து

போலீஸ் பாதுகாப்புக்காக நாடகம்

தன் காரிலேயே பெட்ரோல் குண்டு வீசிய இந்து அமைப்பு பிரமுகர்!

போலீஸ் கைது செய்தது!!

பெட்ரோல் குண்டு வீசிய இந்து அமைப்பு பிரமுகர் கைது!

➤ **செய்தி-9 :** அரசியல் பிரபலமாவதற்காக தனது வீட்டிலேயே பெட்ரோல் குண்டு வீசி நாடகமாடிய திண்டுக்கல்லைச் சேர்ந்த பாரதிய ஜனதா நிர்வாகி கைது. கைதானவர் பாரதிய ஜனதா கட்சியின் 10வது வார்டு கிளைத்தலைவர் பிரவின் குமார் என்பராவார். இந்த கைது விபரம் நாளேடுகளில் ஆகஸ்ட் மாதம், 31-தேதி வெளி வந்துள்ளது.



அரசியலில் பிரபலம் ஆவதற்காக

தனது வீட்டிலேயே பெட்ரோல் குண்டு வீசி நாடகமாடிய பா.ஜனதா நிர்வாகி கைது

பெட்ரோல் குண்டு வீச்சு

அரசியலில் பிரபலமாக

➤ **செய்தி-10 :** கட்சியில் முக்கிய பதவிபெற கூலிப்படையை ஏவி பெட்ரோல் குண்டு விசிய பாரதிய ஜனதா பிரமுகர் ராமநாதன் கைது. இது



கட்சியில் முக்கிய பதவி பெற

கூலிப்படையை ஏவி குண்டு வீசிய பாரதீய ஜனதா பிரமுகர் கைது

ராமநாதன்

நடந்தது அக்டோபர் 3-ந் தேதி கோவையில்! ஏற்கனவே அனுமன் சேனா பிரமுகர் சக்திவேல் தன்னை கடத்திக் கொல்ல முயன்றதாக நாடகமாடி கைதானவர்.

➤ **செய்தி 11 :** அரசியல் சுயவிளம்பரத்துக்காக தன்னைத்தானே வெட்டிக் கொண்டு நாடகம், இந்து மக்கள் கட்சி நிர்வாகி கைது. மார்ச் 19, 2020

இப்படி பல தகவல்கள் அடங்கிய சேதிகள் அதற்கான ஆதாரங்கருடன் வலைதளத்தில் வலம் வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். கும்பல் எத்தகையது என்பதைத் தோலுரிக்கும் செய்திகள் இவை.

தமிழகத்து பி.ஜே.பி. தலைவரோ, இராணுவ வீரரின் இறுதி ஊர்வலத்திலேயே அரசியல்




நடத்த எண்ணுபவர் என்பதை, சமீபத்தில் மதுரையில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக அவர் பேசியதாக வெளிவந்த "தொலைபேசி உரையாடல் தெளிவாகக் காட்டியுள்ளது.

சமீபத்தில் கோவை மற்றும் சில மாவட்டங் களில் நடைபெறும் குண்டு விச்சு சம்பவங்களில் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்திட தீவிரமாக பாணியை முடுக்கிவிட்டிருக்கும் காவல் துறை, மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளையும் கருத்தில்கொண்டு ஆராய்ந்திட வேண்டும் என்பதே நம் கோரிக்கை!

இந்த விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர் பாக தமிழகம் காவல்துறை விழிப்புணர்வோடி, போதிய பாதுகாப்பு வழங்கி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது!

கோவையில் இருவரும், சேலத்தில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வந்துள்ளனர் மாவட்டம் முழுவதும் பலத்த போலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், "தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது: உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

கண்டன ஊர்வலத்தை பா.ஜ.க. நடத்தும்" என்றெல்லாம் தமிழக பா.ஜ.க.. தலைவர் அறிவித்து, அமைதி சீர்குலைவுக்குதூபம் போடும் முயற்சிகளில் ஈடுபடுவது, போன்ற பா.ஜ.க. தலை வரின் செயல்பாடுகளைக் காணும் பொழுது பொதுமக்களிடையே இந்த ஐயம் உருவாவது இயற்கை தானே!

வலைதளங்களில் வலம்வரும் செய்திகள் பா.ஜ.க.. மற்றும் ஆர்.எஸ்.எஸ். கூட்டத்தினர் எந்தவிதச் செயல்களிலும் இறங்கிடத் தயங்காத வர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இதை எல்லாம்கூடக் காவல்துறை தனது கவனத்தில் கொண்டு, உண்மைக் குற்றவாளிகளை - அமைதிக்கு ஊறு விளைவிக்க எண்ணும் பேர் வழிகளை சட்டத்தின்முன் நிறுத்தி, உரிய தண்டனையைப் பெற்றுத் தந்திட வேண்டும்.

- நன்றி முரசொலி, **26-9-2022**

# வளர்ச்சி! வளர்ச்சி!! அபார வளர்ச்சி!!

*சென்ற கோவிட்-19 மும்முர காலகட்டத்தில் அதானியின் அன்றாட வருமானம் (நாளொன்றுக்கு) அதிகமில்லை.... ஒரு 1000 கோடி ரூபாய்தான்!*

*இப்போது அது மேலும் பெருகி, வளர்ந்து, அதானியின் அன்றாட வருமானம் (நாளொன்றுக்கு) ரூபாய் 1622 கோடி!*

*ரயில்களில் சில தனியாருக்கு விற்கப்பட்டு, தனி உடைமையாக ஓடுகின்றன!*

*கப்பல் கம்பெனி (தனியார்) முதலாளி வங்கியில் கடன் பெற்றுள்ள (இதில் வாராக்கடன் எவ்வளவோ?) தொகை 22 ஆயிரத்து 842 கோடி ரூபாய்தான்!*

*ஜே! ஜே! சப்கா சாத்; சப்கா விகாஸ்!*

*நாளும் வளருவது (நிரம்புவது) அதானிகளின் கஜானா -*

*நாளும் வளருகிறது விலைவாசியும் - பணவீக்கமும்!*

*ஜே! ஜே! சப்கா சாத்; சப்கா விகாஸ்!*

நன்றி - விடுதலை



# 2011 முதல் 2021 வரை இந்திய முஸ்லிம்கள்

2011 ஆம் ஆண்டு கணக்கின்படி, இந்திய மக்கள் தொகையில் முஸ்லிம்களின் பங்கு 14.2 மட்டுமே. ஆனால் இந்திய சிறை சாலைகளில் கைதிகளாக இருப்பவர்களில் 30 சதவீதத்திற்கும் அதிகமானோர் முஸ்லிம்கள். இது 2021 ஆம் ஆண்டு நிலவரம்.

**நான்கு வகையான கைதிகள் இந்திய சிறை சாலைகளில் அடைக்கப்படுகின்றனர்.**

1. நீதிமன்றத்தால் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவர்
2. விசாரணை கைதிகள் (நீதிமன்ற விசாரணைக்காக காத்திருப்பவர்கள்)
3. தடுப்பு காவல் கைதிகள் (சட்டத்திற்கு உட்பட்டு தடுப்பு காவலில் எடுக்கப்பட்டவர்கள்)
4. மேற்கூறப்பட்ட மூன்று பிரிவுகளில் சேராத மற்ற கைதிகள்

*தவறொன்றும் செய்திட வேண்டாம். எனினும் முஸ்லிம்களின் ஒவ்வொரு நாளும் அவர்களின் மீது கிரிமினல் வழக்கு எங்கோ ஓரிடத்தில் பதியப்படாமல் விடிவதில்லை என்றொரு நிலை. அல்லது அவர்களை புறக்கணியுங்கள் என்ற அறைகூவலை கேட்காமல் அவர்களின் நாட்கள் கடந்து விடுவதில்லை.*

*பழி அனைத்தும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் மீது வீசப்படுவதால் பாதிக்கப்படுவதும் அவர்களே, பழியை சுமப்பதும் அவர்களே என்றொரு நிலை.*

*தின்றாலும் குற்றம், தொழ நின்றாலும் குற்றம். அணியும் ஆடையும் குற்றம். செய்யும் வியாபாரமும் குற்றம் என முஸ்லிம்களின் அன்றாட நிகழ்வுகளை கூட கிரிமினல் குற்றங்களாக காட்ட துடிக்கின்றனர் இந்துத்துவவாதிகள் .*

*21 டிசம்பர் 2021 அன்று நிலவரப்படி, ஹரியானாவில் சிறைச்சாலைகளில் இருந்த 41% தடுப்பு காவல் கைதிகளும் முஸ்லிம்கள்.*

*இதுவே மேற்கு வங்கத்தில் - 78.5% (முஸ்லிம் மக்கள் தொகை 30.9%)*


*உத்திரபிரதேசத்தில் - 56.7% (முஸ்லிம் மக்கள் தொகை 19%)*

*அசாமில் : - குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவர்களில் 61 % முஸ்லிம்கள்*

- **விசாரணை கைதிகளாக இருக்கும் முஸ்லிம்கள் 49%**
- **ஆனால் அதே சமயத்தில் அங்கே முஸ்லிம்களின் மக்கள் தொகை 34%**

*குஜராத், உபி, ஹரியானா ஆகிய மாநிலங்களிலும் ஜம்மு காஷ்மீரிலும் தடுப்பு காவலில் இருக்கும் முஸ்லிம் கைதிகளின் சதவிகிதம் அதிகம்.*

*முஸ்லிம்களை பாரபட்சத்துடன் மாநில அரசுகள் நடத்தி வரும் போக்கு அதிகரித்துள்ளது. அவர்களின் அன்றாட வாழ்வின் செயல்கள் கூட*




பயங்கரவாதத்தோடு தொடர்பு உடையதாகவும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும், பொது அமைதிக்கு ஊறு விளைவிப்பதாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மற்ற சமுதாயங்களை காட்டிலும் பின்வரும் பிரிவுகள் முஸ்லிம்களின் மீது அதிகம் பயன் படுத்தப்படுகிறது.

பிரிவு 295-A - மற்ற மதங்களின் உணர்வு களை வேண்டுமென்றே புண்படுத்தி வெறுப்பை தூண்டுதல்

பிரிவு 153-A - மத ரீதியான வேறுபாடுகளை பயன்படுத்தி இரு குழுக்களுக்கு இடையே பகைமையை உண்டு பண்ணுதல்.

பிரிவு 505 (2) - பொது அமைதிக்கு இடையூறு ஏற்படுத்தும் பேச்சுகள்

பிரிவு 143 - சட்டத்திற்கு புறம்பாக ஒன்று கூடுதல்

பிரிவு 124-A, IPC 1860 - தேச துரோகம்

பிரிவு 151, குற்றவியல் நடைமுறை சட்டம் 1973- குற்றத்தை தடுப்பதற்காக கைது செய்தல்.

UAPA 1967, தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980 போன்ற தீவிரவாதத்திற்கு எதிரான சட்டங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது. வீட்டில் கைது செய்யப்பட்டால் பிணை கிடைப்பது மிக அரிது.

மேற்கூறியவற்றில் பிரிவு 295-A, 153-A ஆகியவை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

இந்திய அரசியல் சாசனத்தில் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் சட்டங்களான பிரிவு 14 (சட்டத்தின் முன் அனைவரும் சமம் அல்லது சட்டங்களின் சம பாதுகாப்பு) ,

பிரிவு 21(உயிர் வாழும் உரிமை), பிரிவு 21 (பேச்சுரிமை), பிரிவு 19 (1) (a) (வெளிப் படுத்தும் உரிமை), பிரிவு 19 (1) (g) - தொழில் களை பயிலவும் அல்லது வேலைகள் , வர்த்தகம், வியாபாரம் செய்யும் உரிமை), பிரிவு 25 (1) - எந்த ஒரு மதத்தை தழுவவும், அதன்படி வாழவும், பரப்பவும் உள்ள உரிமை). இந்த அனைத்து சட்டங்களுமே முஸ்லிம்கள் என்று வரும்போது புறந்தள்ளப்படுகின்றன.

### தொழுதால் குற்றமா?

முஸ்லிம்கள் பொது இடங்களில் தொழு வதை இந்துத்துவவாதிகள் எதிர்க்கத் தொடங்கி யதிலிருந்து அது ஒரு குற்றமாக கருதப்பட்டு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஜூன் 2022இல், அலிகர் பல்கலை கழகத்தை சேர்ந்த பேராசிரியர் ஒருவர் கல்லூரி வளாகத்தில் உள்ள மரத்தின் அருகே நின்று தொழுததை இந்துத்துவவாதிகள் எதிர்த்ததை தொடர்ந்து அவர் ஒரு மாதம் கட்டாய ஓய்வு எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார். இது சம்பந்தமாக அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு விசாரணையும் நடைபெற்றது.

ஜூலை 2022 இல் உபி பிரயக்ராஜ் (அலஹா பாத்) ரெயில்வே நிலையத்தில் முஸ்லிம்கள் தொழுவது இணையத்தில் பரவிய பின்பு இச்சம்பவம் சர்ச்சைக்குள்ளானது. இன்னொரு சம்பவத்தில் லக்னோ லூலூ மாலில் தொழுத தற்காக முஸ்லிம்கள் சிலரின் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது.

பொது இடங்களில் தொழுவது விவாதமாகிப் போனது. 24 ஆகஸ்ட் 2022 இல் இந்திய கிரிமினல் சட்டத்தில் இல்லாத ஒரு புதிய குற்றத்தை இந்துத்துவவாதிகள் உலகிற்கு கண்டுபிடித்து கொடுத்தனர். அது வீட்டில் சிலர் தொழுகையில் ஈடுபட்டனர் என்பதே.

இந்த சம்பவத்திற்கு பின், இந்திய தண்டனை சட்டம் பிரிவு 505 (2) இன் கீழ் 26 பேர் மீது பிணையில் வரமுடியாத குற்றத்தின் கீழ் மொரதா பாத் காவல்துறை வழக்கு பதிவு செய்தது. எந்த முன்னறிவிப்பும் இன்றி தொழுவதற்காக இரண்டு வீடுகளில் முஸ்லிம்கள் ஒன்றுகூடி விட்டார் களாம். இப்படி தொழக்கூடாது என்று ஏற்கெனவே அக்கம் பக்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்களாம். எனவே காவல்துறை முஸ்லிம் களை எச்சரித்தும் இருந்ததாம்.

மீடியாக்களில் இந்த வழக்கு கவனம் பெற்ற பின், உபி காவல்துறை எஃப் ஐ ஆரை திரும்ப பெற்றது. புகார் தவறு என்றும் புகாரளித்தவர்கள் குறிப்பிட்ட தேதியில் தொழுகை நடைபெற்றது என்று தந்த வீடியோ விசாரணையை திசை திருப்பும் நோக்கில் தரப்பட்டது என்றும் அந்த குறிப்பிட்ட தேதியில் தொழுகை நடைபெற வில்லை என்றும் விசாரணைக்கு பின் காவல் துறை தெரிவித்தது.

முதல் கேள்வி, தொழுகை எப்படி பிரிவு 505 (2) குற்றத்தின் கீழ் வரும் ? எப்படி அது இரு சமூகங்களுக்கு இடையே வெறுப்பை உண்டு பண்ணும் பிரிவில் வரும்? எந்த அடிப்படையில் காவல்துறை எஃப்ஐஆரை பதிவு செய்தது? முஸ்லிம்களிடத்தில் அச்சத்தை ஏற்படுத்த வேண்டும், அவர்களை குற்றவாளிகளாக காட்ட வேண்டும் என்ற நோக்கில்தான் இவையெல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன.

### வியாபாரம் செய்தால் வழக்கு

முஸ்லிம்களிடத்தில் பொருள்கள் வாங்கு வதை தவிருங்கள் என்று தொடர்ந்து பிஜேபியை சேர்ந்தவர்கள் வெறுப்பு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு அவர்கள் செய்யும் தொழி லில் ஏதாவது ஒரு குற்றத்தை கண்டுபிடித்தாக வேண்டும்.

ஜூலை 2022 இல், உபியை சேர்ந்த ஹோட்டல் நடத்திவரும் தாலிப் ஹுசைன் என்பவர் கைது செய்யப்பட்டார். ஹிந்து கடவுள்கள் படம் உள்ள பழைய செய்திதாள்களில் உணவை பொதிந்து கொடுத்தார் என்பதே அவர் மீது சொல்லப்பட்ட குற்றம். பிரிவு 295A, 153-A, 307, 353 ஆகியவற்றின் கீழ் அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அது சர்வ சாதாரணமாக எல்லா வியாபாரிகளும் செய்யும் செயல்தான். ஆனால் முஸ்லிம் என்று வரும்போது குற்றமாகி விடுகிறது.

மாட்டுக்கறி உண்டதற்காக முஸ்லிம்களை அடிப்பதும், கைது செய்யப்படுவதும், கொலை செய்யப்படுவதும் பல இடங்களில் நடந்துள்ளது.

14 மே 2022 அன்று அசாம் நடுத்தர பள்ளி கூடத்தில் தலைமை ஆசிரியையாக பணிபுரியும் முஸ்லிம் ஒருவர் மதிய உணவிற்கு மாட்டுக்கறி கொண்டு வந்ததற்காக உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப் பட்டார்.

12 ஏப்ரல் 2022 அன்று The United States Department of State வெளியிட்ட 2021 Countr Reports on Human Rights Practices: India அறிக் கையில் வகுப்பு வாத மோதல்களில் இந்தியாவில் முஸ்லிம்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் காவல்துறை மற்றும் சிறை அதிகாரி களால் அவர்கள் பாரபட்சத்துடனும், மட்டமா கவும் நடத்தப்படுகிறார்கள் என்றும் அரசாங்கத் தால் நியாமற்ற கைதுகளுக்கும் வலுக்கட்டாய மாக ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு முஸ்லிம்கள் இடமாற்றம் செய்யப் படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

Common Cause என்ற அரசு சாரா அமைப்பு 2019 இல் வெளியிட்ட அறிக்கையின்படி, காவல்துறையில் பணிபுரியும் பாதி பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் அவர்கள் முஸ்லிம் களுக்கு எதிரான மனநிலையுடன் நடந்துகொள் கிறார்கள் என்பதும் அதுவே அவர்களை முஸ்லிம் களுக்கு எதிரான குற்றங்களை தடுத்து நிறுத்து வதில் முனைப்பு காட்டாமல் செயல்பட காரண மாக உள்ளது என்றும் தெரிய வந்துள்ளதாக கூறியுள்ளது.

ஆதாரம்: article-14.com, The Rising Intimidation of India's Muslims & The Criminalisation of Eating, Praying, Loving & Doing Business, The hindu sep 2022.

**- அபூஹாசின்**

# சிறந்த ஆசிரியர்

உலகில் எண்ணற்ற தலைவர்கள் தோன்றி மறைந்துள்ளார்கள். அவர்களுடைய வாழ்நாளில் அனைத்து பகுதுயையும் பின்பற்ற முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்றுதான் பதில் வரும். ஆனால் இந்த உலகில் ஒரே ஒரு ஒருவடைய வாழ்நாள் அனைத்து பகுதியையும் பின்பற்ற முடியும் என்றால் அது முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மட்டும்தான். அல்லாஹ் முஹம்மது நபியை பற்றி கூறும்போது இப்படிச் சொல்கிறான்:

பின்பற்றி வாழ்வதற்கான மிகச் சிறந்த முன்மாதிரி. மக்களின் வாழ்விற்கு தேவையான எல்லா விஷயங்களுக்கும் வழிகாட்டக் கூடிய சிறந்த வழிகாட்டி முஹம்மது நபி (ஸல்) அவர்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தங்களைப்பற்றி கூறும்போது. இப்படிக் கூறினார்கள். "அல்லாஹ் என்னை கடினமான போக்கு உள்ளவனாகவோ, எவரையும் வழிதவறச் செய்பவனாகவோ அனுப்பவில்லை. மாறாக, (இறை நெறியை) எளிதாக்கிச் சொல்லும் ஆசானானவே என்னை அனுப்பியுள்ளான்" என்றார்கள். (நூல் - முஸ்லிம்)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்களிடையே இறைச் செய்தியை எடுத்துரைப்பதில் சிறந்த ஆசிரியராக திகழ்ந்துள்ளார்கள். மக்களின் கால சூழ்நிலைகளுக்கேற்ப. அவர்கள் வெறுண்டோடி விடாமல், எளிதில் விளங்கக் கூடிய அளவில் அவர்களின் குணங்களுக்கேற்ப எளிய நடையில் இறைச் செய்தியை மக்களிடையே கொண்டு சேர்த்தார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உரைகளின்போது பயன்படுத்தக்கூடிய வார்த்தைகளை நாம் விரல்விட்டு எண்ணிக் கொள்ளும் அளவுக்கு மிகக் குறைவாகவே இருக்கும்.

முஹம்மது நபி (ஸல்) குறைவாக பேசினாலும் நிறைந்த பொருள் பொதிந்திருக்கும் வண்ணம் அவர்களுடைய பேச்சு இருக்கும்.

இப்னு உமர் (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் "உலகத்தில் நீ அந்நியனைப் போன்று அல்லது வழிபோக்கன் போன்று இரு என்றார்கள்" (நூல்-புகாரி)

குறைவான வார்த்தைகளைக் கொண்டதானாலும் நிறைவான பொருள் உள்ளடக்கியது இந்த செய்தி.

முஹம்மது நபி (ஸல்) மக்களிடையே ஒரு விஷயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கும் அவர்களுடைய உள்ளத்தில் அதை பதிய வைப்பதற்கும் வினா எழுப்பி அதன்மூலம் செய்தியை மனதில் பதிய வைப்பார்கள்.

"உங்களில் ஒருவரின் வாசலில் ஆறு ஒன்று (ஓடிக்கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து முறை குளிக்கிறார். அவரின் மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ்சியிருக்குமா எனக் கூறுங்கள் என்று தோழர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். "அவரின் அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சியிராது" என நபித்தோழர்கள் கூறினர். இது ஐவேளைத் தொழுகைகளின் உவமையாகும். இதன்மூலம் அல்லாஹ் பாவங்களை அகற்றுகிறான் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மக்கள் விளங்கிக் கொள்வதற்காக முஹம்மது நபி (ஸல்) உதாரணங்கள் கூறி விளங்க வைப்பார்கள்.

"ஒரு முஃமினுக்கும் மற்றொரு முஃமினுக்கும் உண்டான உறவுப் பிணைப்பு ஒன்றையொன்று சார்ந்து பிணைந்திருக்கக் கூடிய (உறுதியான) கூட்டத்தை போன்றதாகும். அதிலிருந்து ஒரு செங்கல்லை உருவினால் ஒட்டுமொத்த கட்டடமும் ஆட்டம் கண்டுவிடும்" என்றார்கள்.

முஹம்மது நபி (ஸல்) கண் முன்னால் காணும் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி மக்களிடம் செய்தியை பதிய வைத்தார்கள். ஒருமுறை முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு பகுதி வழியாக ஒரு கடைத் தெருவை கடந்து சென்றார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் மக்களும் இருந்தார்கள். அப்போது அவர்கள் செத்துக் கிடந்த, காதுகள் சிதைந்த ஓர் ஆட்டைக் கடந்து சென்றார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அந்த ஆட்டை எடுத்து அதன் காதைப் பிடித்துக்கொண்டு "உங்களில் யார் இதை ஒரு வெள்ளிக்காசுக்குப் பகரமாக வாங்கிக் கொள்ள விரும்புவார்? என்று கேட்டார்கள்." அதற்கு மக்கள் எதற்குப் பகரமாகவும் அதை வாங்க நாங்கள் விரும்ப மாட்டோம். அதை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்வோம்? என்று கேட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இது உங்களுக்குரியதாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புவீர்களா? என்று கேட்டார்கள். மக்கள் அல்லாஹ்வின் மீதானையாக இது உயிரோடு இருந்தாலும் இது குறையுள்ளதாகும். ஏனெனில் இதன் காது வியந்துக் காணப்படுகிறது. அவ்வாறிருக்க இது செத்துப் போயிருக்கும்போது எப்படி (இதற்கு மதிப்பிருக்கும்) என்று கேட்டார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் "அவ்வாறாயின் அல்லாஹ்வின் மீதானையாக இந்தச் செத்த ஆட்டைவிட இவ்வுலகம் அல்லாஹ்வின் பார்வையில் உங்களுக்கு அற்பமானதாகும் என்று கூறினார்கள்.

முஹம்மது நபி (ஸல்) முக்கியமான விஷயங்களை மூன்று முறை கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) கூறினார்கள் :


நாங்கள் மேற்கொண்ட பயணம் ஒன்றில் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்குப் பின்னே வந்து கொண்டிருந்தார்கள். தொழுகையின் நேரம் எங்களை நெருங்கிவிட்ட நிலையில் நாங்கள் உளூ செய்து கொண்டிருந்தபோது நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து சேர்ந்தார்கள். அப்போது நாங்கள் எங்கள் கால்களைத் தண்ணீரால் தடவிக் கொண்டிருந்தோம். (அதைக் கண்டதும்) "குதிகால்களைச் சரியாக கழுவாதவர்களுக்கு நரகம்தான் என்று இரண்டு அல்லது மூன்று முறை தம் குரலை உயர்த்தி முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்களிடையே செய்தியை பதிய வைக்க சிறந்த ஆசிரியராக பல நடைமுறைகளை கையாள்வார்கள், வெற்றியும் கண்டார்கள். முஹம்மது நபியின் அழைப்பு பணியை பின் தொடர்ந்து செய்யக் கூடிய நாம் அவருடைய எளிமையான வழிமுறையை கையாள்வது மிகவும் அவசியம்.

"(நபியே) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஒரு அருளாகவேயன்றி அனுப்பவில்லை" (அல்ஹஜ் 107)

**"அல்லாஹ்வின் மீதும், இறுதிநாளின் மீதும் ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகம் தியானிப் போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது."**

**(அல்அஹ்ஜாப். 21)**





# சுகமான தூக்கத்துக்கு சுலபமான வழிகள்!

முதுமையில் தூக்கம் சற்றுக் குறைவது உண்மையே. முதுமைக் காலத்தில் சுமார் 5-8 மணி நேரத் தூக்கம் போதுமானது. தூக்கத்தின் மொத்த நேரத்தைவிட, ஆழ்ந்த தொடர் தூக்கம் தான் (deep uninterrupted) மிகவும் அவசியம்,

முதுமையில் ஏற்படும் தூக்கக் கோளாறுகள் தூக்கத்தின் தரம் குறைந்துவிடுதல் ஆரம்பநிலைத் தூக்கம் வர அதிக நேரமாதல் ஆழ்நிலைத் தூக்கம் குறைதல் இரவு நேரங்களில் தூக்கம் விடுபடுதல் அதிகாலையில் விழித்துக்கொள்ளுதல்

**காரணங்கள்**

● எத்தனை நேரம்தான் டி.வி.. பார்ப்பது அல்லது பேப்பர் படிப்பது? காலத்தைக் கடத்தப் பகலில் தூங்கிவிடுவது...

● 'வயதாகிவிட்டது. இனிமேல் உடற்பயிற்சி எல்லாம் தேவையில்லை' என்ற உதாசீனம். இப்படிப் பல காரணங்கள் உண்டு

● மனநோய்கள் தூக்கம் வருவதைத் தடுக்கும் உதாரணம் : மன அழுத்தம் டிமென்சியா என்னும் மறதி நோய்

● நோய்களுக்காக எடுத்துக் கொள்ளும் மருந்துகளாலும் தூக்கம் தடைபடலாம். உதாரணம்: நீர் மாத்திரை.

● மனக்கவலைகளாலும் தூக்கம் குறையும். உதாரணம்: உறவினர்களின் இழப்பு, கடன் தொல்லை, நிதி வசதி குறைவு, தனிமை.

● இரவில் காபி அல்லது மது அருந்துவது மற்றும் அதிக உணவும் தூக்கத்தைக் கெடுக்கும்.

● பலவித நோய்களாலும் தூக்கம் குறையும். உதாரணம்: மூட்டு வலி, ஆஸ்துமா, இதய பலவீனம், வயிற்றில் புண், உதறுவாதம், பிராஸ்டேட் சுரப்பி வீக்கம் (ஆண்களுக்கு).

● முதுமைக்காலத்தில் ஒருவர்பகலில் செய்யும் வேலையைப் பொறுத்தே அவருடைய தூக்கம் அமைகிறது. பகலில் சுறுசுறுப்பாக இருப்பவர்களுக்கு அதிக நேரம் ஆழ்ந்த தூக்கம் தேவைப்படுகிறது. மாறாக, பகல் முழுவதும் படுத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு இரவில் குறைவான தூக்கமே போதுமானது.

நல்ல தூக்கத்துக்கு.... பின் வரும் வழிமுறைகளைத் (sleep hygiene) தவறாமல் பின்பற்றினால் நல்ல தூக்கம் உங்களை ஆரத் தழுவிக்கொள்ளும்.

● பகலில் 30-40 நிமிடத் தூக்கம் போதும்.

● மாலையில் செய்யும் உடற்பயிற்சி இரவில் நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்.

தூக்கத்தைக் கொடுக்கும் மாத்திரையைத் தவிர்க்கவும்; அல்லது அதை மாலையிலேயே எடுத்துக் கொள்ளவும். உதாரணம் : நீர் மாத்திரை,

● காபி, மது, புகைப்பிடித்தல் போன்றவை இரவு 8 மணிக்கு மேல் கூடவே கூடாது.

● படுப்பதற்கு முன்பு வெந்நீரில் குளித்துவிட்டு வெதுவெதுப்பான பால் அருந்தினால் நல்ல தூக்கம் வரும். வெதுவெதுப்பான பாலில்

இரண்டு ஸ்பூன் தேனுடன், ஒரு ஸ்பூன் பொடி செய்யப்பட்ட கசகசாவைக் கலந்து சாப்பிட்டால் நல்ல தூக்கம் வரும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது.

● தினமும் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

● படுக்கை அறை அமைதியான சூழ்நிலையில் சற்று மங்கிய வெளிச்சத்திலிருப்பது நல்லது.

● படுக்கும் இடத்தைத் தூங்குவதற்கு மட்டும் பயன்படுத்தவும்.

நல்ல தூக்கத்துக்கு தூக்க மாத்திரை ஒரு நிரந்தரத் தீர்வு அல்ல. தூக்க மாத்திரையைத் தினமும் சாப்பிடுவது உடலுக்குக் கேடு விளைவிக்கும்.

மாத்திரையின் வீரியம் குறையக் குறைய, அதன் அளவை அதிகரிக்க வேண்டியிருக்கும். மாத்திரையைத் திடீரென்று நிறுத்தினால், தூக்கம் பாதிக்கப்படும். தூக்க மாத்திரையினால் ஞாபக சக்தி குறையும்; உடல் தடுமாறும்; கீழே விழ வாய்ப்புகள் அதிகமாகும். பகலில் மயக்க நிலையை ஏற்படுத்தும். ஆகையால், முடிந்த அளவுக்குத் தூக்க மாத்திரையைத் தவிர்ப்பது நல்லது. மருத்துவரின் ஆலோசனைப்படி, மன



அமைதியைக் கொடுக்கும் மாத்திரையைச் சாப்பிடுவதால், கெடுதல் அதிகம் வருவதில்லை.

● படுக்கை அறையில் டி.வி., பார்ப்பதையோ, புத்தகம் படிப்பதையோ அல்லது வானொலி கேட்பதையோ, செல்போன் பயன்படுத்துவதையோ தவிர்ப்பது நல்லது.

● படுத்த உடனே 30-45 நிமிடங்களுக்குள் தூக்கம் வரவில்லையென்றால் வெளியே சென்று சற்று நடந்துவிட்டு வரலாம். அல்லது படிப்பது, வானொலி கேட்பது போன்ற காரியங்களில் ஈடுபடலாம். தூக்கம் வர ஆரம்பித்தவுடனேயே படுக்கைக்குச் சென்றுவிட வேண்டும்.

70 வயதுக்கு மேற்பட்டவர்கள் மன அமைதிக்கான மாத்திரையோ (Transquilizer), தூக்க மாத்திரையோ (Sedative) டாக்டரின் ஆலோசனைப்படி எடுத்துக் கொள்வது தவறில்லை.

காரணம் அறிந்து சிகிச்சை தூக்கமின்மைக்கு நோய்கள் ஏதேனும் காரணமாக இருந்தால், அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். பகல் தூக்கத்தைக் குறைத்து, மாலையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும். இரவில் குறைந்த உணவு, படுப்பதற்கு முன்பு தியானம், சிறிது வெதுவெதுப்பான பால்... இப்படி அமைதியான சூழ்நிலையில் மனதை ஒருநிலைப்படுத்தித் தூங்க முயற்சிக்க வேண்டும். நாளடைவில் நல்ல உறக்கத்தைப் பெற்று, காலையில் எழுந்தவுடன் புத்துணர்ச்சி பெறுவீர்கள்; மகிழ்ச்சி அடைவீர்கள்.

நன்றி முதுமை எனும் பூங்காற்று

# கம்பு தோசை



**தேவை:** கம்பு - 1 கப் உளுந்து - 4 கப் வெந்தயம் - 1 டீஸ்பூன் உப்பு - தேவைக்கு.

**செய்முறை :** கம்பு, உளுந்து, வெந்தயம் மூன்றையும் தனித்தனியாக 4 மணி நேரம் ஊற வைக்கவும். தண்ணீரை வடித்துவிட்டு தனித்தனியாக அரைக்கவும். பிறகு எல்லா வற்றையும் சேர்க்க தேவையான உப்பு போட்டுக் கலந்து வைக்கவும். 6 மணி நேரம் புளிக்க வேண்டும். பிறகு எடுக்க தோசைக் கல்லில் தோசையாக வார்க்க நல்லெண்ணெய் ஊற்றி, இருபுறமும் திருப்பிப்போட்டு வேகவிடவும். சுவையான சத்தானகம்பு தோசையை தேங்காய்ச் சட்னியுடன் சாப்பிட்டால் ருசியாக இருக்கும்.

இதன் மூலம் புரதச் சத்து, நார்ச்சத்து மற்றும் சுண்ணாம்புச் சத்து எளிதில் கிடைக்கும்.



# வாழைப் பூ வடை

**தேவை :** சுத்தம் செய்து நறுக்கிய வாழைப் பூ - 1 கப், கடலைப் பருப்பு - 1 கப், பச்சரிசி - 1 டேபிள்ஸ்பூன், உளுந்தம் பருப்பு - 1/4 கப், மஞ்சள் தூள் - 1/2 டீஸ்பூன், வெங்காயம் - 1 பூண்டு -- பல், தோல் நீக்கிய சிறிய துண்டு இஞ்சி, பச்சை மிளகாய் - 2, வர மிளகாய் - 2. சோம்பு - 1 டீஸ்பூன் கறிவேப்பிலை சிறிதளவு, கொத்தமல்லி - சிறிதளவு. புதினா - நான்கைந்து இலைகள், உப்பு - தேவைக்கு, எண்ணெய் - பொரிக்கத் தேவையான அளவு,

**செய்முறை :** கடலைப் பருப்பு, பச்சரிசி, உளுந்தம் பருப்பை ஒன்றாகச் சேர்த்து, தண்ணீரில் மூன்று மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு, தண்ணீரை வடித்துவிட்டு மிக்ஸியில் போட்டு, பொடியாக நறுக்கிய இஞ்சி, பூண்டு, சோம்பு, கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை, புதினா பச்சை மிளகாய், வரமிளகாய், மஞ்சள் தூள் சேர்த்து சிறிது தண்ணீர்விட்டு கொர கொரப்பாக அரைக்கவும். அரைத்த விழுதில், பொடியாக நறுக்கிய வெங்காயம், வாழைப் பூ தேவையான உப்பு சேர்த்து நன்கு பிசையவும். வாணலியில் எண்ணெய் காய வைத்து மாவை வடைகளாகத் தட்டிப் போட்டுப் பொரித்தெடுக்கவும். இதிலுள்ள புரதச் சத்து உடல் வலிமையடைய மிகவும் உதவும்.

நன்றி முதுமை எனும் பூங்காற்று

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002